விலை: 30 பக்கங்கள்: 28

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

சுடர் 33 கதிர் 282 ஆவணி 19ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 04 செப்ரெம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

## கண்ணிவெடி அகற்றுபவர் வெடிவிபத்தில் உயிரிழப்பு

### மற்றொரு பணியாளர் படுகாயம்

வவுனியா, செப்.4
மாங்குளத்தில் நேற்று நடந்த வெடிவிபத்தில் கண்ணிவெடி அகற்றும் பணியாளர் ஒருவர் உயிரிழந்தார் மற்றொருவர் காயமடைந்தார். முல்லைத்தீவு மாவட்டத்தில் » 25



## இலஞ்சத்தை எதிர்த்து முதியவர் மரத்தில் ஏறி நின்று போராட்டம்

*நீதியமைச்சர் கிளிநொச்சி வந்திருந்த சமயத்தில்*

கிளிநொச்சி, செப்.4
நீதி அமைச்சர், பிரதம நீதியரசர் ஆகியோர் நிகழ்வுகளில் பங்கேற்ற மேடைக்கு எதிரே மரத்தில் ஏறி நின்று இலஞ்சம் வாங்கும் பொலிஸாருக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டார் முதியவர் ஒருவர். சம்பவம் நேற்றுக் கிளிநொச்சியில் நடந்தது. » 22

## சித்திரவதை குற்றச்சாட்டுக்கு இலங்கை பதிலளிக்கவில்லை

### சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா. குழு குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.4
இலங்கையின் குற்றப் புலனாய்வுப் பிரிவு பணிப்பாளராக இருந்த சிசிர மென்டிசுக்கு எதிரான சித்திரவதைக் குற்றச்சாட்டு » 23

## திகனவில் பரவிய வன்முறைகளுக்கு பொலிஸாரின் குறைபாடே காரணம்

*தலைமை அமைச்சர் நேற்றுச் சாடல்*

யாழ்ப்பாணம் செப் 4
கண்டி திகன பகுதியெங்கும் பரவிய இன வன்முறைகள் பொலிஸாரின் குறைபாடுகளுக்கான மிகப்பெரும் உதாரணம் எனத் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க தெரிவித் » 25

## பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தினால் நடவடிக்கை

### ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு பொலிஸ் மா அதிபர் எச்சரிக்கை

கொழும்பு, செப்.4
ஆர்ப்பாட்டங்களின்போது பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக அதிகபட்ச சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர » 23

புளொட் உறுப்பினரின் ஆயுத மீட்பு வழக்கு

## சுனாமியினால் விவரங்கள் அழிந்துபோய் விட்டனவாம்

### இப்படிச் சொல்கிறது இராணுவம்

யாழ்ப்பாணம், செப். 4
புளொட் அமைப்பின் முன்னாள் உறுப்பினரின் வீட்டில் மீட்கப்பட்ட ஆயுதங்கள் தொடர்பான விவரம் அடங்கிய பட்டியல் 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலை (சுனாமி) பேரழிவால் நாகர்கோவில் முகாமிலிருந்து காணாமற்போய் விட்டது. அது தொடர்பில் இராணுவ மத்திய ஆயுத வழங்கல் பிரிவிடமும் விவரம் இல்லை. » 25

புதிய அரசமைப்பை உருவாக்குவோம் என்ற

# வாக்குறுதியை நிறைவேற்றமுடியாத தலைவர்களாக மாறிவிடவேண்டாம்

### மைத்திரி ரணிலுக்கு ஐயம்பதி எம்.பி. எச்சரிக்கை

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 4
மீண்டும் அரச தலைவர் தேர்தல் நடத்துவது நாம் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதி அல்ல. இதனை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். முதலில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி அரசமைப்பை உருவாக்கவேண்டும். வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத தலைவர்களாகமாறிவிடவேண்டாம் என்பதை இந்த அரசின் தலைமைகளுக்கு சுட்டிக்காட்டுகின்றோம். » 25



## புதிய நீதி வளாகத்திற்கு கிளிநொச்சியில் அடிக்கல்

கிளிநொச்சி, செப்.4
கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றக் கட்டடத்துக்கான அடிக்கல் நேற்று நடப்பட்டது. இலங்கையின் தலைமை நீதியரசர் பிரியசாத் டெப், நீதி அமைச்சர் தலதா அத்துக்கோரள ஆகியோர் அடிக்கல் நட்டனர். அமையவிருக் » 25

## பாண் விலை எகிறியது

கொழும்பு, செப்.4
கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் பாணின் விலையும் நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று » 25

## மீள்குடியமர்வை தேசியத் திட்டமாக்க நாடாளுமன்ற நிதிக் குழு பரிந்துரை

*யாழ்ப்பாணத்தில் நேற்று அறிவித்தார் மாரசிங்க எம்.பி.*

யாழ்ப்பாணம், செப். 4
மீள்குடியமர்வு என்பது ஒரு திட்டம் அல்ல. அது தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது. அதை தேசிய வேலைத் திட்டமாக அறிவிக்க நாடாளுமன்ற நிதிக் குழு பரிந்துரைக்கவுள்ளது. அது குறித்து நேற்று » 22

## இ.போ.ச. சேவைகள் வடக்கிலும் முடங்கும்

யாழ்ப்பாணம், செப். 4
சம்பளப் பிரச்சினை உள்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இ.போ.ச. ஊழியர்கள் மேற்கொண்டு » 22

## அரசு கடுமையாக செயற்பட்டால் மக்களும் அதையே செய்வார்கள்

*எச்சரிக்கின்றார் நாமல் ராஜபக்ச*

கொழும்பு, செப்.4
அரசுக்கு எதிராகப் பெரும் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலை » 23



## மீள்குடியமர்வுக்கான நிதி சடுதியாக குறைந்துள்ளது

### நாடாளுமன்ற நிதிக்குழுவின் கருத்தமர்வில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப்.4
யாழ்ப்பாண மாவட்டத்தின் மீள்குடியமர்வுக்கு 2016 2017ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதியின் 5 சதவீத நிதியே 2018ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டினார் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக செயலர் (காணி) எஸ்.முரளிதரன். நாடாளுமன்ற நிதிக்குழுவின் » 25

## 2019ஆம் ஆண்டு திட்டங்களுக்காக 6 பரிந்துரைகள் சமர்ப்பிக்க முடிவு

### நிதிக் குழுக் கருத்தமர்வின் பின்னர் சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு


யாழ்ப்பாணம், செப்.4
யாழ்ப்பாண மாவட்டத்தில் 2019ஆம் ஆண்டு மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் தொடர்பாக நிதி நாடாளுமன்ற குழுவின் 6 பரிந்துரைகளை நிதி அமைச்சு மற்றும் அரச தலைவருக்குப் அனுப்புவது என்று » 23

## முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை

» 23

## ஹெரோயினுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், செப்.4
யாழ்ப்பாணம், உடுவிலில் ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் » 22



# இலங்கையின் தூதுவருக்கு மாலைதீவில் அவமதிப்பு!

கொழும்பு, செப்.4
மாலைதீவில், சீனாவால் கட்டப்பட்ட புதிய பாலத் திறப்பு விழாவின் போது இலங்கை, பங்களாதேஷ் நாடுகளின் தூதுவர்கள் அவமதிக்கப்பட்டதால் அவர்கள் நிகழ்வைப் புறக்கணித்து வெளியேறினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மாலைதீவின் தலைநகர் மாலேயையும் ஹுல்ஹுலே தீவையும் இணைக்கும் வகையில், 2 கி.மீ நீளமான பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

மாலைதீவு சீன நட்புறவுப் பாலம் என்று பெயரிடப்பட்டுள்ள இந்தப் பாலத்தை சீனா கட்டிக் கொடுத்துள்ளது. இந்தப் பாலத்தின் திறப்பு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போது, மாலைதீவு அதிபர் அப்துல்லா யமீனின் பாதுகாப்பு அதிகாரிகள் இலங்கை மற்றும் பங்களாதேஷ் நாடுகளின் தூதுவர்கள் பயணித்த வாகனத்தை குறிப்பிட்ட தொலை விலேயே மறித்து, நடந்து செல்லுமாறு கூறியுள்ளனர். எனினும், சீனத் தூதுவரின் வாகனம் மறிக்கப்படாமல், தொடர்ந்து பயணிக்க அனுமதிக்கப்பட்டது.

அதனால் அதிருப்தியடைந்த இலங்கை மற்றும் பங்களாதேஷ் நாடுகளின் தூதுவர்கள் நிகழ்வைப் புறக்கணித்து விட்டு, அங்கிருந்து திரும்பியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இது பாரம்பரிய நட்பு நாடுகளை அவமதிக்கும் செயல் என்று மாலைதீவு எதிர்க்கட்சியின் பேச்சாளர் கீச்சகப் பதிவு ஒன்றில் கூறியுள்ளார். அதேவேளை இந்த பாலத் திறப்பு விழாவுக்கு இந்தியத் தூதுவருக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் அவர் பங்கேற்கவில்லை - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

ஆலயத்தில் ஈழ அலங்காரம்

# பத்திரிகை ஆசிரியர்களிடம் விசாரிக்கவுள்ளது பொலிஸ்

யாழ்ப்பாணம், செப். 4
ஆனைக்கோட்டை கண்ணகை அம்மன் ஆலயத் திருவிழாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கையான தனி ஈழத்தை எடுத்துக் காட்டும் வகையில் சுவாமிக்கு அலங்காரம் செய்தமை தொடர்பான செய்தியை வெளியிட்ட யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 3 பத்திரிகைகளின் ஆசிரியர்களிடமும் வாக்குமூலம் பெற்றுக்கொள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று அனுமதி கோரினர்.

பயங்கரவாத விசாரணைப் பிரிவினரின் விண்ணப்பம் சிங்கள மொழியில் முன்வைக்கப்பட்டது. அதனை ஏற்க மறுத்த பதில் நீதிவான் கனகரட்ணம் கேசவன், யாழ்ப்பாண நீதிமன்ற மொழியான தமிழில் முன்வைக்குமாறு உத்தரவிட்டு வழக்கை நவம்பர் 16ஆம் திகதிவரை ஒத்திவைத்தார்.

ஆனைக்கோட்டை கண்ணகை அம்மன் ஆலயத்தில் கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற திருவிழாவில் வடக்கு கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைத்து தமிழீழ வரைபடத்தை ஒத்த அலங்காரத்தில் அம்மன் வீதியுலா வந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் பயங்கரவாதவிசாரணைப் பிரிவினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. அதுதொடர்பில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர், யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு ஒன்றை இன்று தாக்கல் செய்தனர்.

வழக்கு பதில் நீதிவான் கனகரட்ணம் கேசவன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. எழுத்துமூல விண்ணப்பத்தை பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் மன்றில் முன்வைத்தனர்.

"தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட தனி ஈழக் கோரிக்கையைக் குறிக்கும் வகையில் ஈழ வரைபடத்தை ஒத்த வகையில் ஆனைக்கோட்டை கண்ணகை அம்மன் ஆலயத்தில் சுவாமி அலங்கரிப்பட்டிருந்தார். இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. ஊடகவியலாளர் ஒருவர், இந்து இளைஞர் மன்ற உறுப்பினர்கள், ஆலய நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் ஆலய பூசகர் ஆகியோரும் வாக்குமூலம் பெறப்பட்டது. இந்த நிகழ்வு தொடர்பில் செய்தி வெளியிட்ட யாழ்ப்பாணத்தில் வெளிவரும் உதயன், வலம்புரி மற்றும் தினக்குரல் ஆகியவற்றின் ஆசிரியர்களிடம் வாக்குமூலம் பெறப்பட வேண்டும். அதற்கான அனுமதியை மன்று வழங்க வேண்டும்" என்று பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் விண்ணப்பம் செய்தனர்.

அவர்களால் முன்வைக்கப்பட்ட எழுத்துமூல விண்ணப்பம் சிங்கள மொழியில் அமைந்துள்ளதால், அதனை ஏற்கமறுத்த பதில் நீதிவான், தமிழ் மொழியில் விண்ணப்பம் செய்யுமாறு அறிவுறுத்தினார். அத்துடன், வழக்கு வரும் நவம்பர் 16ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது. (உ-37)

# மக்களை வலுவூட்டும் செயற்றிட்டம் நாளை ஆரம்பம்

முல்லைத்தீவு, செப்.4
பொருளாதார அபிவிருத்தி மற்றும் நல்லிணக்க கருத்திட்டத்தின் ஊடான மக்களை வலுவூட்டும் செயற்திட்டம் ஒன்று முல்லைத்தீவில் தொடங்கி வைக்கப்படவுள்ளது.

கொழும்பு சர்வதேச தொழிலாளர் தாபனம் இலங்கை அரசுடன் ஆஸ்ரேலியா மற்றும் நோர்வே அரசுகளின் தூதரகங்கிளின் உதவியுடன் பொருளாதார அபிவிருத்தி மற்றும் நல்லிணக்க கருத்திட்டத்தினூடாக மக்களை வலுவூட்டல் எனும் செயற்திட்டம் உடையார்கட்டில் நாளை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டம் இலங்கையின் வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் போரால் பாதிப்புற்ற கிராமங்களில் உள்வாங்கலுடன் கூடிய பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தலை ஊக்கிவிக்கும் நோக்கில் செயற்படுத்தப்படவுள்ளது. (ற-ரி3)

# மாணவர் கடத்தல் தொடர்பில் மேலும் இருவருக்குத் தொடர்பு

கொழும்பு, செப்.4
கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வைத்து 2008ஆம் ஆண்டு 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரை வெள்ளை வேனில் கடத்திச் சென்று, சட்ட விரோதமாக தடுத்து வைத்து, கப்பம் பெற்றமை மற்றும் காணாமல் ஆக்கியமை ஆகிய குற்றங்களுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் மேலும் இரு கடற்படையினர் வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் (சி.ஐ.டி.) பணிப்பாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சர் ஷானி அபேசேகரவுக்கு கிடைக்கப் பெற்றுள்ள தகவல் ஒன்றுக்கு அமைய இந்த விடயம் தெரியவந்துள்ளது என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்தது.

இந்தக் குற்றங்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான நேவி சம்பத் எனும் முன்னாள் கடற்படை லெப்டினன் கொமாண்டர் ஹெட்டி ஆரச்சி முதியன்சலாகே சந்தன பிரசாத் ஹெட்டி ஆரச்சி, கடற்படையின் உயர் மட்ட உதவியுடன் நாட்டைவிட்டு தப்பிச் சென்று மீள நாட்டுக்கு வந்திருந்த போது சி.ஐ.டி. யினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையில், மேலும் இரு சந்தேக நபர்கள் தொடர்பான தகவல்கள் சி.ஐ.டி.க்கு கிடைத்துள்ளன. உண்மையிலேயே அவர்கள் வெளிநாட்டுக்குச் சென்றுள்ளனரா, அவ்வாறாயின் அவர்களுக்கு யார் உதவி செய்துள்ளனர் உள்ளிட்ட தகவல்களை வெளிப்படுத்த குரித்த இரு கடற்படையினர் தொடரபான தகவல்களையும் சி.ஐ.டி. குடிவரவு குடியகல்வு திணைக்களத் திடம் கோரியுள்ளது.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்துக்கு தெரியாமல் அல்லது அறிவிக்காமல் கடற்படையினருக்கு கடல் வழியாக வெளிநாடு செல்ல ஏதும் ஏற்பாடுகள் உள்ளதா என்பது குறித்தும் சி.ஐ.டி. தற்போது அவதானம் செலுத்தியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-71)

# பூகோளச் சிறப்பியல்புகளை கண்டறிந்தால் முன்னேற்றம்

*அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு*

கொழும்பு, செப்.4
எமது நாட்டை முன்னேற்றுவதற்கு பூகோள மற்றும் பொருளாதார அடிப்படையிலான சிறப்பியல்பைக் கண்டறிய வேண்டும் என மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டாலி சம்பிக ரணவக்க தெரிவித்தார்.

மாகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சினால் மேல் மாகாணத்தில் பல்வேறு பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக பொதுமக்களுக்கு விளக்கமளிக்கும் கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது
எமது நாடு இன்னமும் நடுத்தர வருமானம் பெறும் நாடு எனும் பட்டியலிலேயே உள்ளது. 2045 ஆம் ஆண்டளவிலேயே உயர் வருமானம் பெறும் நாடாக எமது நாடு மாற்றமடையும். நடுத்தர வருமானம் பெறும் நாடாக நாம் சிக்கியிருக்கும் சவாலை வென்றெடுப்பதற்கு எமது பௌதீக, உட்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்த வேண்டும்.

அத்துடன் இந்து சமுத்திரத்தின் கேந்திர நிலையமாக எமது நாடு அமைந்துள்ளதால் 2021 ஆம் ஆண்டளவில் இந்து சமுத்திர பிராந்திய நாடுகளில் இலங்கை பாரிய முக்கியத்துவத்தைப் பெறும் - என்றார். (ற)

# வருடாந்தத் திருவிழா

யாழ்ப்பாணம், செப்.4
கரணவாய் தெற்கு தென் கருணயம்பதி அருள்மிகு சிறி மனோன்மணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 13ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறவுள்ளது.

தினமும் காலை 10 மணி மற்றும் இரவு 7மணிக்கு சிறப்பு பூசைகளும் நடைபெறுவதுடன் தினமும் அன்னதானமும் இடம்பெறவுள்ளது என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ற-422)

# வெள்ளவத்தை கொள்ளைகள்: விசாரிக்கச் சிறப்புக் குழுக்கள்

கொழும்பு, செப்.4
வெள்ளவத்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாயா மாவத்தை, பொஸ்வெல் பிளேஸ், நெல்சன் பிளேஸ் ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற தொடர் வீடுடைப்புக் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் தனித்தனியான பல்கோண விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் பத்திநாயக்கவின் நேரடி மேற்பார்வையில் கொழும்பு தெற்கு மூத்த பொலிஸ் அத்தியட்சர் சமன் யட்டவரவின் ஆலோசனைக்கு அமைவாக வெள்ளவத்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் கபில விஜேமான்னவின் தலைமையில் குற்றவியல் பிரிவின் உத்தியோகத்தர்களை உள்ளடக்கி தனித்தனியான சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த ஓகஸ்ட் 26 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கும் மறுநாள் 27 ஆம் திகதி காலை 7.30 மணிக்கும் இடைப்பட்ட 14 மணித்தியாலத்துக்குள் இடம்பெற்றுள்ள இந்த மூன்று வெவ்வேறு சம்பவங்களும் ஒரே நபரால், குழுவால் முன்னெடுக்கப்பட்டதா, அல்லது வெவ்வேறு நபர்கள் குழுவினரால் முன்னெடுக்கப்பட்டதா, அவர்கள் யார்? போன்ற விவரங்களை தேடி முதல் கட்ட விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று விசாரணை நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்த விசாரணைகளில் தற்போதும் பல வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், சில சான்றுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும், சிறப்பு அறிவியல் தடயங்களை வைத்து அடுத்த கட்ட விசாரணைகளுக்கான நகர்வுகளை முன்னெடுத்துச் செல்கின்றோம் என்றும் அந்த அதிகாரி கூறினார்.

சிறப்பு விசாரணைகள் பல்கோணத்தில் முன்னெடுக்கப்படுகின்றன என்றும், அவற்றில் குறிப்பாக இவ்வாறான சம்பவங்களுடன் ஏற்கனவே சிக்கியவர்கள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்றும், அறிவியல் ரீதியிலான தடயங்களை வைத்து மிக விரைவில் சந்தேக நபர்களைக் கைதுச் செய்ய முடியும் என நம்புகின்றோம் என்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.

கடந்த ஓகஸ்ட் 26ஆம் திகதி மாலை 5.30 மணி முதல் அடுத்த 14 மணி நேரத்தில் இந்த தொடர் வீடுடைப்புக் கொள்ளைகள் பதிவாகியிருந்தன.

ஒரு அலுவலகம் உடைக்கப்பட்டு ஒரு கோடியே 6 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளும், பொஸ்வெல் பிளேஸ் தொடர்மாடி வீடொன்றிலிருந்து ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதி மிக்க தங்க ஆபரணங்களும், நெல்ஷன் பிளேஸ் தொடர்மாடி வீடொன்றுக்குள் இருந்து 2 இலட்சத்து 57 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளும் கொள்ளையிடப்பட்டுள்ளன என்று முறையிடப்பட்டிருந்தன.

இந்த மூன்று முறைப்பாடுகள் குறித்துமே தற்போது தனித்தனியாக விசாரணைகள் இடம்பெறுகின்றன. (ற-71)

# வெடிபொருள் விவகாரம்: 12 பேருக்கு மறியல் நீடிப்பு

முல்லைத்தீவு, செப்.4
முல்லைத்தீவு, ஒட்டுசுட்டானில் புலிகளின் சீருடை மற்றும், வெடிபொருள்களை தம்வசம் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 12 பேரின் விளக்கமறியலும் எதிர்வரும் 17ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டது.

இந்த வழக்கு நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

ஒட்டுசுட்டான் பகுதியில் கடந்த ஜூன் மாதம் 22ஆம் திகதி முச்சக்கர வண்டி ஒன்றைச் சோதனையிட்ட பொலிஸார் அதிலிருந்து புலிகளின் சீருடை, வெடிபொருள்கள் என்பவற்றை மீட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக விசாரணை மேற்கொண்ட பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினர் இந்தச் சம்பவம் தொடர்பில் 9 பேரைக் கைது செய்து விசாரணை மேற்கொண்டனர்.

அதன்பின்னர் கடந்த மாதம் துணுக்காய், கிளிநொச்சியைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர். அதன்பின்னர் கடந்த மாதம் 29ஆம் திகதி ஒருவர் நீதிமன்றில் சரணடைந்தார். (ற-ரி3)

# கூட்டாட்சியின் தலைவர்கள் இருவரும் இணைந்து செயற்பட வேண்டும்

## ஜெகான் பெரேரா தெரிவிப்பு



கொழும்பு ,செப் 4

அடுத்துவரும் ஆட்சியில் யார் தலைமை அதிகாரத்தை கைப்பற்றுவது என்ற அதிகாரப் போட்டியானது கூட்டாட்சியில் இருந்து வரும் இரு பெரும்பான்மை ஆட்சித் தலைவர்கள் ரணில் விக்கிரமசிங்க மற்றும் மைத்திரிபால சிறிசேனவும் காணப்படுவதால் ,இந்த கூட்டாட்சியில் இனப்பிரச்சனைக்கான தீர்வை எட்டமுடியாத நிலை காணப்பட்டு வருகின்றது என இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெகான் பெரேரா தெரிவித்துள்ளார்.

யு.எஸ்.எயிட் உதவியுடன் இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் நடப்பு வருடத்தின் நான்காவது சமயங்களினூடாக நல்லிணக்க அனுபவப் பகிர்வுச் சுற்றுலா கடந்த 31ஆம் திகதி முதல் செப்ரம்பர் 2ஆம் திகதி வரை நடைபெற்றது.

நுவரெலியா மாவட்டத்தில் நடைபெற்ற இந்த சுற்றுலாவில் மன்னார் மாவட்டத்திலிருந்தும், புத்தள மாவட்டத்திலிருந்தும், நுவரெலியா மாவட்டத்திலிருந்தும் சுமார் நூறு பேர் கலந்து கொண்டனர்.

கடந்த ஓரிரு தினங்களுக்கு முன் இலங்கை தேசிய சமாதானப் பேரவையில் மிகவும் ஈடு பாடு கொண்ட மன்னார் எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த மறைந்த பேராசிரியர் எஸ்.எச். ஹிஸ்புல்லா ,இடம்பெயர்ந்த நிலையில் வாழ்ந்தாலும்எல்லாஇனத்தவர்களையும்ஒன்றிணைத்து சமாதானத்தை முன்னெடுத்துச் செல்ல அரும் பாடுபட்டவர். அவருக்காக ஓரிரு நிமிடங்கள் நாம் அஞ்சலி செலுத்துவோம் என்று வேண்டியவராக தனது உரையை தொடர்ந்தார்.

எம் மத்தியில் இருக்கும் பல்வகையான தன்மை அதாவது மத ரீதியான, மொழி ரீதியான, இன ரீதியான மற்றும் கருத்து ரீதியான முறையில் நாம் இருக்கின்றபோதும் நாம் அனைவரும் ஒற்றுமையுடன் இருப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். நாம் ஒருவருக்கொருவர் நம்பிக்கையில்லாத காரணத்தினால்தான் முப்பது வருடகாலபோருக்கு உள்ளாக்கப்பட்டிருந்தோம். இந்த காரணங்களுக்கு நாம் தீர்வுகாண வேண்டும்.

இன்னொரு எதிர்பார்ப்போடு நாங்கள் இருக்கின்றோம் இந்த நல்லாட்சியானது சிறுபான்மை கட்சிகளான தமிழ், முஸ்லிம் கட்சிகளையும் தங்களுடன் உள்வாங்கியவாறு அமைக்கப்பட்ட அரசாங்கமாக இருக்கின்றது.

ஆனால் எதிர்பார்க்கின்றபோல இதற்கான தீர்வு எட்டமுடியாத நிலைக்கு நகர்வதாக நான் உணர்கின்றேன். காரணம் ஆட்சியில் இருக்கும் ரணில் விக்கிரமசிங்க மற்றும் மைத்திலி பால சிறிசேன ஆகியோர் இருவருக்கும் மத்தியில் நம்பிக்கையில்லா நிலை உருவாகியுள்ளது. இதற்கான காரணம் அடுத்துவரும் ஆட்சியில் யார் தலைவராக இருப்பது? யார் அதிகாரம் கொண்டவராக இருப்பது என்று அவர்களுக்கிடையே போட்டியே காரணமாக இருக்கின்றது எனவே அவர்கள் இணைந்து செயற்பட வேண்டும் எனத் இவ்வாறு தெரிவித்தார். (60)

# வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது

வவுனியா,செப் 4

வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்றுக் காலை 10 மணியளவில் வவுனியா மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் ,காஞ்சூரமோட்டை காணிதொடர்பான விடயம் , பம்பைமடு பகுதியில் கொட்டப்படும் குப்பை தொடர்பான விடயம் , நுண் நித்திக்கடன்கள் தொடர்பான விடயம் என பல விடயங்கள் ஆராயப்பட்டுள்ளது .

இணைத்தலைவர்களான அமைச்சர் ரிசாட் பதியுதீன், வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், பதில் அமைச்சர் கே. கே. மஸ்தான், குழுக்களின் பதில்த் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் தலைமையில் இடம்பெற்றது. கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன் அவற்றினை நடைமுறைப்படுத்துவதற்கான காலங்களும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.



**காஞ்சூர மோட்டையில் வனவளத் திணைக்களம் தடை :**

நெடுங்கேணி காஞ்சூரமோட்டையில் இடம் பெயர்ந்தமக்கள் தமதுகாணிகளை துப்பரவாக்கும்போது வனவளத் திணைக்களத்தால் அதற்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தது.

இதுதொடர்பாக நேற்றைய மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கவனத்துக்குமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் கொண்டுவந்திருந்தார் இதன்போது கருத்துக்கூறிய வவுனியா வடக்கு பிரதேச செயலர் க.பரந்தாமன் குறித்தகாணி மக்களுடையதாகவே இருந்தது 2012ஆம் ஆண்டு அதனை வனவளத் திணைக்களம் பொறுப்பெடுத்துள்ளது. தற்போது இந்தியாவில் இருந்து எமது மக்கள் மீண்டும் வருகின்றனர். இந்தநேரத்தில் வனவளத் திணைக்களத்தால் எந்தவித பணிகளும் செய்யவேண்டாம் என்று தடைவிதிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

இதன்போது அமைச்சர் றிசாட் பதியுதீன் தெரிவித்ததாவது : வனவளத் திணைக்களம் ஒரு மனிதாபிமானற்றது. குறித்த விடயம் தொடர்பாகச் சட்டத்தைப் பார்காமல் மனிதாபிமான ரீதியில் அணுகுமாறு வனவளத் திணைக்கள அதிகாரிகளிடம் தெரிவித்திருந்தார். இதன் போது வவுனியாவடக்கு பிரதேசசெயலரும்,வனவளத் திணைக்கள அதிகாரியும் கடுமையாக முரண் பட்டுக்கொண்டிருந்தனர்.இடம்பெயர்ந்த மக்களின்காணிகளை பற்றி பரிசீலிக்காமல் தவறானமுறையில் அரசிதழ் அறிவித்தல் மூலம், ஒரு இலட்சம் ஏக்கருக்கும் அதிகமான தமிழ் மக்களின் காணிகளை வனவளத் திணைக்களம் எடுத்துள்ளதாகதெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ,அந்த அரசிதழை இ ரத்துச் செய்து பொதுமக்களிடம் குறித்த காணிகளை வழங்கவேண்டும் என்று விசனம் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பாக ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர்கள் கவனத்தில் எடுத்ததுடன்,காஞ்சூரமோட்டை மக்கள் இன்றே குறித்தபகுதியில் குடியமருவதற்கு அனுமதியளிக்கபடுவதுடன் சட்டரீதியான செயற்பாடுகளை பின்னர் மேற்கொள்ளுமாறு ஒருங்கிணைப்புக் குழுவினால் முடிவெடுக்கபட்டது.

**பம்பைமடு குப்பைவிவகாரம் :**

மாவட்டத்தின் கழிவுகள், பம்பைமடு பகுதியில் கொட்டப்படுவதுடன் அதற்கருகாமையில் மக்கள்குடியிருப்பு , பல்கலைக் கழகம் ஆகியன இருப்பதனால் அது தொடர்பாககரிசனை கொள்ளுமாறு ஒருங்கிணைப்புக் குழுவின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

இதன்போது தெற்குத் தமிழ்பிர தேச சபைத் தலைவர் து.நடராயசிங்கம் தெரிவித்ததாவது குறித்தவிடயம் தொடர்பாக நாம் கலந்துரையாடச் சென்றிருந்தோம், குறித்த மக்கள் குடியிருப்பு அமைப்பதற்கு பிரதேச சபையில் அனுமதி எடுக்கப்படவில்லை.குப்பைகள் பல வருடமாகக் கொட்டபடுகின்றது. மக்கள்குடியிருப்பு பின்னரே வந்தது என்றுபேசிக்கொண்டிருக்கும் போது பிரதேசசபை உறுப்பினர் ஒருவர் என்னுடன் அநாகரிகமாக நடந்து கொண்டிருந்தார் என்னுடைய சேட்டையும் பிடித்து இழுத்தார் அதனால் குறித்த விடயம் கிடப்பில் போடப்பட்டுள்ளது. கலந்துரையாடச் சென்றபோது அப்படி நடந்துகொண்டால் எப்படித்தீர்வை எடுக்கமுடியும் என்று தனது விசனத்தை வெளியிட்டார்.

அத்துடன் வாகனப் பற்றாக்குறை,ஆளணி வெற்றிடம் போன்றவற்றால் நீண்டதூரம் குப்பைகளை கொண்டுசெல்வது கடினமான விடயம் .எனவே தற்போது குப்பைகொட்டும் பகுதிக்கு அண்மையில் இ ராணுவமுகாம் ஒன்று இருக்கிறது அதனை அகற்றித் தந்தால் அவ் விடத்தில் குப்பை கொட்டமுடியும் என்று கூறினார்.

இதன் போதுபேசிய மாகாணசபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம் குறித்த குப்பை மேடு பலவருடங்களாக பிரச்சினையாகவே இருக்கிறது. அருகில் உள்ள பல்கலைக்கழகத்திலும் இலையான்களின் தொல்லை இருக்கிறது. எனவே அதன் இடத்தைமாற்றி கள்ளிகுளத்தில் போட்டால் அதுவும் மக்களிற்கு பிரச்சினையாகவே அமையும்.எனவே மீழ்சுழற்சி செய்யும் திட்டம் ஒன்றை ஏற்படுத்துவதே சிறந்ததெரிவாக இருக்கும் என்றும் ,அதற்கு அதிகமான நிதிதேவைப்படும் எனினும் ,மக்களின் பிரச்சினையை தீர்க்கமுடியும் என்று கூறினார். இதன்போது பேசிய உள்ளூராட்சி ஆணையாளர் குறித்த திட்டத்துக்கு 250 மில்லியன் ரூபா தேவைப்படும் என்று கூறியிருந்தார். இதன்போது பேசிய அமைச்சர் றிசாட்பதியூதீன் இந்த விடயம் தொடர்பாக உதவிமாவட்டசெயலர்,பிரதேசசெயலர்,பிரதேசசபை,நகரசபை,வனவளத் திணைக்களம், சுற்றாடல்அதிகாரசபை,உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோரைக் கொண்ட குழுவினை அமைத்து மிகவிரைவாக அதற்குரிய தீர்வுத் திட்டத்தை பெறவேண்டும் என்றும் அதற்கான நிதி உதவிகளை தானே ஒதுக்கித் தருவதாகவும் தெரிவித்திருந்தார்.

**பூந்தோட்டம் மாகாணகூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி:**

பூந்தோட்டம் கூட்டுறவு பயிற்சி கல்லூரி பல வருடங்களாக விடுவிக்கப்படாமல்இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்த ராயா ஒருங்கிணைப்புகுழுவின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தார். இந்த விடயம் பலமுறை தீர்மானங்கள் எடுக்கபட்டும் தீர்வில்லாமல் தொடர்வதாக அனைவராலும் விசனம்தெரிவிக்கபட்டது. இதன்போது ஆறு பேரே புனர்வாழ்வு பெற்று வருகின்றமையால் அதற்குபோதுமான இடத்தை ஒதுக்கி விட்டு மீதி கட்டங்களை கூட்டுறவுக் கல்லூரிக்கு விடுவிக்குமாறு முதற்கட்டமாக கோருவதாக தெரிவிக்கபட்டது . எனினும் அதனை முழுமையாக விடுவிக்கவேண்டும் இராணுவத்தை அருகில் வைத்துகொண்டு இயங்கமுடியாது என்று மகாண சபை உறுப்பினர் சத்தியலிங்கம்,மற்றும் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் தெரிவித்தனர்.அதற்கும் ஒரு குழு அமைக்கபட்டமைகுறிப்பிதக்கது.

**நுண்நிதி தொடர்பாக :**

நுண்நிதி கடன்களை தள்ளுபடிசெய்வது தொடர்பாக அரசு ஒருதிட்டம் கொண்டுவந்துள்ளது எனினும் குறித்தநிறுவனங்கள் மக்கள்தான் செலுத்தவேண்டும் என்று அழுத்தம்பிரயோகிக்கின்றன. தற்போது வரட்சியால் வருமானம் இல்லாத நிலையில் மக்கள் இருக்கின்றனர். அவ்வாறான மக்களே கஞ்சாபோன்ற போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டுவருகின்றனர். எனவே அதற்கு ஒருதெளிவூட்டலை மேற்கொள்ள வேண்டும் என்று ப.சத்தியலிங்கம் வேண்டுகோள் விடுத்திருந்தார். இந்த விடயம் கருத்தில் எடுக்கபட்டதுடன் வங்கிமுகாமையாளர்களை அழைத்து அதுதொடர்பான கலந்துரையாடலை மேற்கொள்ளுமாறும், நிதி அமைச்சருடன் கலந்தரையாடி அது தொடர்பான சுற்றுஅறிக்கை ஒன்றை அனுப்பமுயற்சிப்பதாகவும் அமைச்சர் றிசாட்பதியுதீன் தெரிவித்திருந்தார். (110)



## கொடியேற்றம்

கொடிகாமம், செப். 4

புங்குடுதீவு கிழக்கு 11 ஆம் வட்டாரம்தெங்கர்திடல்பதி வீரகத்தி விநாயகப் பெருமானின் பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்துபத்துதினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 12ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள்தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும் என்று கோவில் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (159)



மட்டுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அமிர்தலிங்கம் அகில இலங்கை சமாதான நீதிவானாக யாழ்ப்பாண மேல்நீதி மன்ற நீதிபதி அ. பிரேமசங்கர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் மட்டுவில் கிழக்கு வில்சன் சனசமூக நிலைய நிறுவுநர்களில் ஒருவரும் அறவழி, போராட்டக்குழுவின் இயக்குநர் சபை உறுப்பினரும், சாவகச்சேரி ப.நோ.கூ. சங்க பொதுச் சபை உறுப்பினரும், ஆளணி சபை உறுப்பினரும் மட்டுவில் சந்திரபுரஸ் கந்தவரோதய மகாவித்தியாலயத்தின்பழைய மாணவரும் ஆவார். (36)

## கலைமாலைகலை கலாசார நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 4

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் மகளிர் குழுவின் கலைமாலை கலைகலாசார நிகழ்வுகடந்தசனிக்கிழமை மாலை நடைபெற்றது.

கழகத் தலைவி சோபிகா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்குமுதன்மை விருந்தினர்களாக மருத்துவநிபுணர்சுரேஷ்குமார், திருமதிவாசுகிசுரேஷ்குமார் ஆகியோர்கலந்துகொண்டனர். (222)

## முறாவில் பிள்ளையாருக்கு கொடியேற்றம்

யாழ்ப்பாணம், செப். 4

வடமராட்சிதென்புலோலியூர்முறாவில்சித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்தப்பெருந்திருவிழாஇன்று செவ்வாய்க்கிழமைகொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

## கெற்பேலியில் ஒரு குழுவை மற்றொரு குழு தாக்கியது

தென்மராட்சி, செப். 4

தாக்குதல் நடத்தச் சென்றார்கள் என்று குற்றஞ்சாட்டப்படும் நபர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. தாக்குதலுக்கு இலக்கானவர்களைப்பொலிஸார் மருத்துவமனையில் சேர்த்தனர். அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு கொடிகாமம் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட கெற்பேலிமத்தியில் இடம்பெற்றுள்ளது. இதே பகுதியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தவர்கள் அயலில் உள்ள குடும்பத்தினரைத் தாக்கச் சென்றனர் என்றும் அதன்போதுஅங்குஇருந்தவர்கள்குறித்தகுடும்பத்தினரைத் தாக்கினர் என்றும் இருதரப்பினரும் ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அங்கு சென்றபொலிஸார் காயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். (4.9)



152 ஆவது பொலிஸ்தினம் மானிப்பாய் பொலிஸாரால்நேற்றுக்கொண்டாடப்பட்டது. அதனையொட்டி மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் பூசைவழிபாடுகள் இடம்பெற்றன. பின்னர் வறிய மாணவர்களுக்கு பரிசில் பொதிகள் வழங்கப்பட்டன. கால் இயலாத இருவருக்கு நான்கு சில்லு வாகனமும் அன்பளிப்புச்செய்யப்பட்டது



சாவகச்சேரி சிவன் கோவிலடி வெங்கடாசலபதி கோவில் பெருந் திருவிழாவின் தீர்த்தத் திருவிழா கச்சாய் கடலில்நேற்று இடம்பெற்றது. (9)



வெளிச்சம் குடும்ப அறக்கட்டளை அமைப்பின் ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் , ஈருருளிகள் மற்றும் சக்கர நாற்காலி என்பன 1 ஆம் திகதி வழங்கிவைக்கப்பட்டன. (222)



தெல்லிப்பழை பிரதேசசெயலக பிரிவில்உள்ள முதியவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நேற்றுமுன்தினம் தெல்லிப்பழை கிழக்கு சந்திரமௌலீஸ்வரர் ஆலய முன்றலில் இடம்பெற்றன. (9)

## சூழலைத் துப்புரவாக வைத்திருக்கும் முன்பள்ளிகள் கௌரவிக்கப்படவுள்ளன

சாவகச்சேரி, செப். 4

டெங்கு நுளம்பு உருவாகக் கூடிய வகையிலான பொருள்கள் ஏதும் இல்லாமல் சூழலைத் துப்புரவாகவைத்திருக்கும்பாடசாலைகள் மற்றும்முன்பள்ளிகள்தெரிவுசெய்து மதிப்பளிக்கப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்டு வருகின்றனர்.

தேசியடெங்குகட்டுப்பாட்டுவாரம்எதிர்வரும் 26ஆம்திகதிதொடக்கம் ஒக்ரோபர்இரண்டாம்திகதிவரைநாடுமுழுவதும்இடம்பெறவுள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலைகளில் டெங்குப் பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு கொழும்பு சுகாதாரத் திணைக்கள டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து எதிர்வரும் 28 ஆம் திகதி பாடசாலைகள் முன்பள்ளிகள்போன்றவற்றில்டெங்குப்பரிசோதனைகள்மேற்கொள்ளும்போது டெங்கு நுளம்பு உருவாகக்கூடிய வகையிலான பொருள்கள் ஏதும் இல்லாமல் துப்புரவாகக் காணப்படும் பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிகள் தெரிவு செய்யப்பட்டு மதிப்பளிக்க ஏற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிகளில் டெங்குப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அதனால் அந்தந்தப்பாடசாலைச்சமூகத்தினரின் உதவியுடன் பாடசாலை மற்றும் முன்பள்ளி வளாகங்களைத் துப்புரவாக வைத்திருக்குமாறும் அறிவித்துள்ளனர். (4.9)

## பயணிக்கையில் வீழ்ந்தபோது இருவர் படுகாயம்

தென்மராட்சி, செப். 4

உழவுஇயந்திரத்திலிருந்து தவறிவீழ்ந்தநபரும் உந்துருளிமாட்டுடன்மோதியதில் வீழ்ந்த மருத்துவமனைப் பணியாளரும் காயமடைந்தனர். இந்தச் சம்பவங்கள் நேற்றுமுன்தினம்இடம்பெற்றுள்ளன.

நுணாவில் பகுதியில் வயல்களுக்கு குப்பைகள் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரத்தில் அமர்ந்து சென்றவர்வரம்பில்சில்லு ஏறியபோதுதவறிவீழ்ந்ததில்தலையில்காயமடைந்தார். கடமைமுடிந்துஉந்துருளியில் வீடு திரும்பிய பெண்கைதடியில்வீதியின் குறுக்கே ஓடிய மாட்டுடன் மோதி வீழ்ந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. அவருக்கும் தலையில் காய மேற்பட்டது. (4.9)

## கந்தபுராண படிப்பும் மகேஸ்வர பூசையும்

யாழ்ப்பாணம், செப். 4

நீர்வேலி தெற்கு சிறிமுருகையா கோவிலின் கந்தபுராண படன படிப்பு நிறைவும் மகேஸ்வரர் பூசையும் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும். முற்பகல் 10மணிக்கு சிறப்பு பூசைகள் அபிஷேகம் இடம்பெற்று கந்தபுராண படிப்பு நிறைவு பெறும். மதியம் மகேஸ்வரர் பூசை நடைபெறும். (4.17)

## நல்லூரில் இன்று

நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இன்று இசைக்கச்சேரிகள் இரண்டு இடம்பெறவுள்ளன.

இதில் இசைக்கச்சேரி ஒன்றில் பாட்டுவைஸ்ணவி சிறிரஞ்சன், வயலின் வே.வேலதீபன், மிருதங்கம்வி.ரமணர், கெஞ்சிராமு.சுலக்சன் ஆகியோரும் இசைக்கச்சேரி இரண்டில் பாட்டுபராசக்தி நிநாயகதேவராஜா, வயலின் சு.கோபிதாஸ், மிருதங்கம்நா.சிவசுந்தரசர்மா, முகர்சிங்சி.செந்தூரன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த நிகழ்வு மாலை6.45மணிதொடக்கம்8.15மணிவரைஇடம்பெறும்.

★★★

நல்லூர் மனோன்மணி அம்மன் கோவிலில் "ஆன்மீகம்" என்றதலைப்பில்சைவசின்மயர்க.ஈஸ்வரன்சொற்பொழிவாற்றுவார். உலக சைவத்திருச்சபையின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த நிகழ்வு மாலை 6.45 மணி தொடக்கம் 7.45 மணி வரை இடம்பெறும்.

★★★

நல்லைஆதினகுருமூர்த்த ஆலயமண்டபத்தில்தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று "திருப்பெரு வடிவம்" என்ற தலைப்பில் பேருரை இடம்பெறும். கலாபூசணம் பிரம்மசிறிசிவ. வை. நித்தியானந்தசர்மாவுடன் அணிசெய் கலைஞர்கள் இதை வழங்குவர். நல்லூர் சைவ மகா சபை நடத்திவரும் இந்த நிகழ்வு மாலை 6.30 மணி தொடக்கம் 8 மணி வரை இடம்பெறும்.

★★★

சிறிலசிறி ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில், பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நல்லூர் சித்தன் கேணிசிவசக்திகுழுவினரின்பஜனைநிகழ்வுஇடம்பெறும். நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குருமுதல்வர் சிறிலசிறி சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்திருமுன்னிலையில், இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதிஹேமலோஜினி குமரன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் கோப்பாய் தேசியக் கல்வியியற் கல்லூரி, விரிவுரையாளர் மா.பிரபாகரன் முதன்மை அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ளார்.

கோப்பாய் பிரதேச அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும், முன்னாள் இந்துகலாசார அமைச்சின் ஆலோசகர், மாவிட்டபுரம்கந்தசுவாமிஆலயத்திருப்பணித் தலைவர் இ. பேரின்பநாயகத்தின் "மூலகாரணமாய் நின்றமூர்த்தி" எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும், செல்வன் வி. வக்ஷாங்கித சர்மாவின் தனியிசை, செல்வி வி. தேவசேனாவின்வீணையிசை ஆகியவைசிறப்புநிகழ்வாகவும் இடம்பெறவுள்ளன. இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் இதனை நடத்துகிறது.

★★★

யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தா அவர்களால்"அஞ்சுவமோநாங்களடி"என்றதலைப்பில்மாலை 7.30மணி முதல் 8 மணி வரை நல்லூரில் அமைந்துள்ள சின்மயஞானவேல்ஆச்சிரமத்தில்அருளுரை இடம்பெறும்.

## சுனாமி ஒத்திகை

பருத்தித்துறைபிரதேசசெயலர்பிரிவுக்குஉட்பட்டஜே/388, ஜே/401 ஆகிய இடங்களில் உள்ள சுனாமி எச்சரிக்கைக் கோபுரங்களில் இருந்து எச்சரிக்கை விடுக்கப்படவுள்ளது. நாளைபுதன்கிழமைமுற்பகல்9மணியில்இருந்துபிற்பகல் 2மணிவரைஇந்தச்சுனாமிஎச்சரிக்கைஒலிஎழுப்பப்படவுள்ளது. அந்த ஒலி மக்களுக்கான முன்னாயத்த ஒத்திகைக்கானபயிற்சிஎன்பதால்அந்தப்பகுதிமக்கள்குழப்பமடையவேண்டாம் என்று பருத்தித்துறைப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (4.114)



அளவெட்டி சிறி நாகவரத நாராயணர் கோவில் வருடாந்தத் திருவிழாவில் தேர்த் திருவிழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் பக்தர்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதைக் காணலாம். (4)

# வீதி வேலையைத் துரிதப்படுத்த: புற்றளை மக்கள் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செப். 4

வடமராட்சி புற்றளை பெருந்தெரு மாவில் வீதி வேலையைத் துரிதப்படுத்துமாறு அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். 3ஆம் தவணைப் பாடசாலைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், வீதிச் சீரமைப்பு வேலைகள் நிறைவடையாமல்உள்ளமையால் மாணவர்கள் உட்படப் பலரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று தெரிவிக்கின்றனர்.

கடந்தபருவமழைக்காலப்பகுதியில்ஏற்பட்ட வெள்ளம்காரணமாகவயல்பகுதியில்மண்ணரிப்புஏற்பட்டது. வீதி ஓரத்தில் அமைக்கப்பட்ட சிமெந்துக் கட்டு உடைந்தமையால் பாதைமுற்றாகச்சேதமடைந்துவீதிஉடைந்து மண்ணரிக்கப்பட்டு காலபோகப் பயிர் செய்கைஅழிவடைந்தது. இதனால்விவசாயிகள் மற்றும் ஊர் மக்கள் பருத்தித்துறை பிரதேச சபையிடம் மனு ஒன்றைக் கையளித்தனர். 6 ஆம் வட்டாரப் பிரதேச உறுப்பினர் ஜெயபாலனின் முயற்சியில் பிரதேச சபையால் ஒப்பந்தக்காரரிடம் வேலைகள் ஒப்படைக்கப்பட்டன.

வேலைகள்கடந்த25ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு,அன்றுமட்டுமேவேலைகள்நடைபெற்றன. அடுத்த நாள் தொடக்கம் இன்றுவரை வேலை நடக்கவில்லை என்று அங்கு முன்னெச்சரிக்கை அறிவிப்புஎதுவும்காட்சிப்படுத்தப்படவில்லை. இரவில் வீதி விளக்குகள் இல்லை. அதனால் விபத்து ஏற்படக் கூடிய வாய்ப்புகள்உள்ளன.

எனவேவீதிவேலையைத்துரிதப்படுத்துமாறு அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (4,422)

### கமக்கார அமைப்புக்கு புதியநிர்வாகம்

நுணாவில் மேற்கு கமக்கார அமைப்பின் புதிய நிர்வாகிகள் தெரிவு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நடப்பு வருட நிர்வாகிகள்விவரம்வருமாறு, தலைவர்சு.பூபாலசிங்கம், உபதலைவர் சா.சுகிர்தன், செயலர் சி.குகநாதன், உபசெயலர்த.துரைராசா,பொருளாளர் கா.சிவநேசன், நிர்வாக உறுப்பினர்கள் திருமதி அருட்சோதி சாந்தினி, திருமதிவேலாயுதம் பிள்ளை சியாமளா. (4)

# பருத்தித்துறையில் தொழிநுட்பப் பயிற்சி

யாழ்ப்பாணம், செப். 4

கணினி மென்பொருள் உருவாக்கும் தொழிநுட்ப பயிற்சி நெறி அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்கில் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தின் விதாதா வள நிலையத்தால் ஜாவா புறோகிறாமிங் மூலமாகக் கணினி மென்பொருள்உருவாக்கும்இலவசதொழில்நுட்பப்பயிற்சிநெறிஇது. இந்தப் பயிற்சி நெறியைப் பின்பற்றுவதற்கு விருப்பமுள்ளவர்கள்பிரதேசசெயலகவரவேற்புபீடத்தில்எதிர்வரும்வியாழக்கிழமைக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ள முடியுமெனப் பிரதேச செயலர் எஸ்.ஆர்.றொபின்சன் அறிவித்துள்ளார். (4)

# 11அபிவிருத்தி பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி, செப். 3

தென்மராட்சிப்பிரதேசத்தில் 11அபிவிருத்திப்பணிகளை மேற்கொள்ள பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் நாடாளுமன்றஉறுப்பினர்டக்ளஸ் தேவானந்தா 6 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார் என்று மாவட்டச்செயலகத்தால் தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்டசாவகச்சேரி திருவள்ளுவர் சனசமூக நிலையத்துக்கு தளபாடம்கொள்வனவுசெய்ய 50ஆயிரம்ரூபா, சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அம்பாள் சனசமூகநிலையகட்டடச் சீரமைப்புக்கு ஒரு லட்சம் ரூபா, மிருசுவில் விநாயகர் சனசமூக நிலையத்துக்குத் தளபாடம் கொள்வனவுசெய்ய30ஆயிரம் ரூபா, ஒதுக்கியுள்ளார் என்றுதெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கோவிலாக்கண்டி மகாவிஷ்ணு விளையாட்டுக் கழகத்துக்குவிளையாட்டு உபகரணங்கள் வழங்க 85 ஆயிரம் ரூபா, மறவன்புலவு விநாயகர் சனசமூக நிலையத்துக்கு பொதுக்கிணறுஅமைக்க 75 ஆயிரம் ரூபா, மட்டுவில் வடக்கு ஐங்கரன் முன்பள்ளிக் கட்டட சீரமைப்புக்குஒருலட்சத்து50 ஆயிரம் ரூபா, மீசாலை கிழக்குநாவலர்முன்பள்ளி சாவகச்சேரி நகர் மாதர் கிராமஅபிவிருத்திச்சங்கம், மீசாலை மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், நுணாவில் மத்தி மகளிர் செயற்பாட்டு மையம் ஆகியவற்றுக்குத் தளபாடம்வழங்கதலா25ஆயிரம் ரூபா வீதமும் கச்சாய் தெற்குகலைமகள்விளையாட்டுக் கழகத்துக்கு உபகரணங்கள் வழங்க 35 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கியுள்ளார்என்றுதெரிவிக்கப்பட்டது. (4,9)

# ஐந்து நூல்களின் வெளியீடு நூலகத்தில் இடம்பெற்றது



யாழ்ப்பாணம், செப். 4

லண்டனில் வசிக்கும் யாழ்ப்பாணம் புங்குடுதீவைச் சேர்ந்த கவிஞர் யாழ் அகத்தியன் எழுதிய 5 நூல்களின் வெளியீடு யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

வள்ளுவர்புரம் 'செல்லமுத்து வெளியீட்டகம்' வெளியீடாக 'செல்லாத நாணயம், இன்னொரு கண், நாளைகளின் நறுமணம், என் நதியில் உன் பரிசல், என் நகல் நீ ஆகிய ஐந்து நூல்களே வெளியிடப்பட்டன.

இந்த நிகழ்வுக்கு யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் கவிஞர் இ.த.ஜெயசீலன் தலைமை வகித்தார். முதன்மை அதிதியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ம.இரகுநாதன் பங்கேற்றார்.

ஓய்வுநிலை அதிபரும் சாரணிய தேசிய பயிற்றுநர் தலைவருமான சரோஜினிதேவி கனகரத்தினம் வரவேற்புரை வழங்கினார். கவிஞர் ஆ.முல்லைதிவ்யன் இளைய படைப்பாளர் உரை ஆற்றினார்.

பேராசிரியர் ம.இரகுநாதன் நூல்களை வெளியிட முதற்பிரதியினை கிருபா லேணர்ஸ் அதிபர் அ.கிருபாகரன் பெற்றுக்கொண்டார். சமநேரத்தில் ஐந்து நூல்களின் 'நூலடக்கப் பகிர்வு' இடம்பெற்றது. (4,9)

# பூநகரிப் பிரதேச முதியோர்கள் மன்னாருக்கு ஆன்மீகப் பயணம்

பூநகரி, செப். 4

பூநகரி பிரதேசத்தைச் சேர்ந்த மேலும் ஒரு தொகுதி முதியோர்கள் ஆன்மீகச் சுற்றுலாவுக்காக மன்னார் மாவட்டத்தில் உள்ள திருத்தலங்களுக்கு இன்று அழைத்துச்செல்லப்படவுள்ளனர்.

கைதடி உதவும் கரங்கள் அமைப்பின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தினர் பூநகரி பிரதேச செயலகத்தினருடன் இணைந்து முதியோர்களுக்கான ஆன்மீகச் சுற்றுலாவை மேற்கொள்வர்.

வீட்டில் தனிமையில் வாடும் முதியோர்களின் ஆன்மீகத் திருப்திக்காகவும், ஆன்மீகத்தைவளர்ப்பதற்காகவும்சமூக சேவைகள்திணைக்களத்தால்விடுக்கப்பட்டஅறிவுறுத்தல்களையடுத்து அந்தந்த மாவட்டச் சமூக சேவைகள் அலுவலகத்தினர் பரோபகாரிகளின் அனுசரணைகளைப் பெற்று முதியோர்களுக்கான ஆன்மீகச் சுற்றுலாவை நடத்தி வருகின்றனர்.

கிளிநொச்சிமாவட்டச்சமூகசேவைகள்திணைக்களத்தினர் மாதாந்தம் மாவட்டத்திலுள்ள நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள முதியோர்களைக் கட்டம் கட்டமாக மன்னார் மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் உள்ள திருத்தலங்களுக்கு ஆன்மீகச் சுற்றுலாவுக்கு அழைத்துச் சென்று வருவதும். பூநகரிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு தொகுதி முதியோர்கள் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் திருகோணமலை மாவட்டத் திருத்தலங்களுக்கு அழைத்துச்சென்றிருந்தமையும்குறிப்பிடத்தக்கது. (4,9)



பாடசாலைகளில் மூன்றாம் தவணை கற்றல் செயற்பாடுகள் நேற்று ஆரம்பமாகின. அதனை முன்னிட்டு பாடசாலைகளில் துப்புரவுப் பணிகள் இடம்பெற்றன.

மாணவர்நலக்கருதி சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்காகவும் டெங்கு நோய் பரவுதலிலிருந்து மாணவர்களைபாதுகாக்கும்நோக்குடனும்போக்கட்டி அ.த.க.பாடசாலையில் நேற்றுமுன்தினம் துப்புரவு இடம்பெற்றது. கொடிகாமம் தெற்கு ஜே/328 கிராம அலுவலர் செல்வி.த.வாகினி, சமுர்த்திஉத்தியோகத்தர்திரு இ.துபேந்திரன் ஆகியோரின் ஏற்பாட்டில்பாடசாலை அதிபர்தி.அபராஜிதன் தலைமையில் இது நடைபெற்றது. (159)

# நவாலியில்கிராமசெயலகம்: 4 பிரிவுகள் அதில் இயங்கும்

யாழ்ப்பாணம், செப். 4

வலி.தென்மேற்குபிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட நவாலி வடக்குப்புலவர்வீதியில்ஜே/134 கிராம அலுவலர் பிரிவுக்கான கிராமசெயலகம்கடந்த28ஆம் திகதி திறக்கப்பட்டது.

முதன்மைவிருந்தினராகவலி.தென்மேற்குப் பிரதேச செயலர் திருமதி யசோதா உதயகுமார் கலந்துகொண்டு புதிய கிராமஅலுவலகத்தைத்திறந்து வைத்தார்.


நவாலி வடக்கு பிரிவுக்குப் புதிதாகப்பொறுப்பேற்றகிராமஅலுவலர்எம்.ஆர்.கே.இரட்ணராஜா வரவேற்புரை நிகழ்த்தினார்.

பிரதேசசெயலர்திருமதியசோதா உதயகுமார்உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

மாதகலில்நவீனதரம்கொண்ட புதியகிராமசெயலகம் அமைக்கப்பட்டுள்ளது. இதில்கிராமஅலுவலர், சமுர்த்தி அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அலுவலர், விவசாய ஆராய்ச்சி அலுவலர் என்று நான்கு பதவிப் பணியினர் கடமையாற்ற முடியும்.

நவாலிவடக்குபிரிவுக்கும்கிராம செயலகம் அமைக்க 20இலட்சம்ரூபாபிரதேசசெயலகத்தால் ஒதுக்கித் தரப்படும். ஆனால் அதற்கான காணியைப் பொது மக்கள் வழங்க வேண்டும். வழங்கினால் செயலகத்தை உருவாக்கிதரும்கடமைஎங்களது பொறுப்பு. கமநல சேவை நிலையத்துக்குப் பின்புறமாகவுள்ள காணியில் உள்ள கட்டடத்தை மீள்சீரமைப்புச் செய்து தங்களுக்கு வழங்கப்படும் என்றார்.

முன்னாள் கிராம அலுவலர் அ.தனபாலரத்தினம் நன்றியுரை வழங்கினார். (4.50)



இந்துக்கள் அனைவரும் கொண்டாடும் கிருஷ்ண ஜெயந்தி தினமான நேற்று முன்தினம் ,பூசை வழிபாடுகள் சில இந்து ஆலயங்களில் சிறப்பாக நடைபெற்றன. யாழ்ப்பாணம் இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் நேற்றுச் சிறப்பான பூசை வழிபாடுகள் நடைபெற்றன. மாலை வேளை பூசைகள் நிறைவு பெற்று கிருஸ்ணபகவான் வெளிவீதி உலா வரும் போது இசைக்கருவிகள் இசைக்கப்பட்டேதோடு உறியடி நிகழ்வும் நடத்தப்பட்டது. (7)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் நாளை சுனாமி ஒத்திகை

முல்லைத்தீவு ,செப் 4

நாளை 5ஆம் திகதி தேசிய சுனாமி ஒத்திகை – இலங்கையில் முல்லைத்தீவு,காலி,அம்பாறை ஆகிய மாவட்டங்களில் முன்னெடுக்கப்படவுள்ளன. இலங்கை இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் இலங்கையில் மூன்று மாவட்டங்கள் தெரிவுசெய்யப்பட்டு, சுனாமி ஒத்திகை நிகழ்வு மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒத்திகைக்கான முன்னாயத்தக் கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம், மாவட்டச்செயலகத்தில், மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலைய உதவிப் பணிப்பாளர் சி.லிங்கேஸ்வரகுமாரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த முன்னாயத்தக் கலந்துரையாடலில் முப்படையினர், பொலிஸார், பிராந்தியச் சுகாதாரப் பணிமனை அதிகாரி, வலயக் கல்விப் பணிமனை அதிகாரி, கடற்தொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரி, பிரதேச செயலர்கள், கிராம அலுவலகர்கள் மற்றும் அரச திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட அமைப்புக்களின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

இதன்படி நாளை முல்லைத்தீவு மாவட்டத்தின் சுனாமி ஒத்திகைப் பகுதியாக வட்டுவாகல் தொடக்கம் செல்வபுரம்,மணல்குடியிருப்பு, கோவில்குடியிருப்பு, முல்லைநகர், வண்ணாங்குளம் ஆகிய ஆறு கிராம அலுவலர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

நாளை காலை குறித்த பகுதியைச் சேர்ந்த கரையோர மக்கள் அனைவரையும் சுனாமி ஒத்திகை ஊடாக கிராமத்தில் இருந்து வெளியேற்றி, அப்புறப்படுத்தி, அவர்களுக்கான சகல ஏற்பாட்டு உதவிகளும் வழக்கும் ஒத்திகை நிகழ்வு நடைபெறவுள்ளதாகவும், இதனால் குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் அச்சம் கொள்ளத்தேவையில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி 3)

## மக்கள் விடுதலை முன்னணியின் மக்கள் சந்திப்பு

மல்லாவி ,செப் 4

மக்கள் விடுதலை முன்னணியின் மக்கள் சந்திப்பு ஒன்று நேற்றுக் காலை 10 மணியளவில் அனிஞ்சியன் குளம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் மண்டபத்தில் இடம்பெற்றது .

இந்த நிகழ்வுக்கு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாகக்க கலந்துகொண்டு ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார் மகிந்த ராஜபக்ச 111 கோடிகளை வெளிநாடுகளில் இருந்து பெற்றுக்கொண்டு தனது சுய தேவைகளுக்கு அந்தப்பணத்தை பயன்படுத்துவதாக அவர் குற்றம் சுமத்தினார். அதேவேளை நாட்டில் ஆட்சி மாற்றம் ஒன்று கண்டிப்பாக தேவை என்பதையும் மக்கள் முன் வலியுறுத்தினார். கால் நடை மற்றும் விவசாய வளர்ச்சியை கிராமத்தில் வளர்க்க வேண்டும் என்றும் அவர் தனது கருத்தில் மேலும் தெரிவித்திருந்தார். (212)



## மன்னாரில் இரட்டை மாட்டு வண்டிச் சவாரி

மன்னார்,செப்.4

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்றான இரட்டை மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி மன்னார் பரிகாரிக்கண்டல் இரட்டை மாட்டு வண்டிச் சவாரித்திடலில் கடந்த சனிக்கிழமை மாலை இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட மாட்டுவண்டிச் சவாரிச் சங்கத்தின் அனுசரணையுடன், பரிகாரிக்கண்டல் கிராம மக்களால் இந்தப் போட்டி நடத்தப்பட்டது. போட்டியில் வடமாகாணத்தின் ம்ன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மூன்று மாவட்டத்தையும் சேர்ந்த 31 சோடிக் காளைகள் பக்குபற்றி இருந்தன. போட்டிகள் நான்கு பிரிவுகளாக நடைபெற்றன. இதன் போது நான்கு பிரிவுகளிலும் மன்னார் மாவட்ட காளைகள் முதல் இடங்களைப் பெற்று கொண்டமை குறிப்பிடத்தக்கது. (56)



## மாணவர்களின் கல்விச் சுற்றுலா

பளை, செப்.4

பளை, தர்மக்கேணி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் கடந்த சனிக்கிழமை கல்விச் சுற்றுலாவுக்காகத் திருகோணமலை மாவட்டத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்குள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களையும், சீமெந்துக் கூட்டுத்தாபனம், இயற்கைத் துறைமுகம் உள்ளிட்ட பல இடங்களை மாணவர்கள் பார்வையிட்டனர் எனப் பாடசாலையின் அதிபர் வே.செல்வகுமார் தெரிவித்தார். (9)

## மாற்றுத் திறனாளிகளுக்கான கலந்துரையாடல்

கொடிகாமம், செப்.4

கண்டாவளைப்பிரதேசத்தில் வசிக்கும் மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்குக் கண்டாவளைப் பிரதேச சமூக சேவை உத்தியோகத்தர் தலைமையில் தர்மபுரத்தில் அமைந்துள்ள கண்டாவளை மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் புதிய நிர்வாகத் தெரிவும், புதிய அங்கத்தவர்களை இணைத்தலும், மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், தொடர்பாகவும் கலந்துரையாடப் படவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அனைத்து மாற்றுத் திறனாளிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கண்டாவளை மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் தலைவர் அறிவித்துள்ளார். (159)

## மன்னாகண்டல் கமக்கார அமைப்பின் புதிய நிர்வாகத் தெரிவு

முல்லைத்தீவு,செப். 4

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பிரதேசத்துக்கு உட்பட்ட மன்னாகண்டல் கமக்கார அமைப்பு நீண்டகாலமாக ஒரே நிர்வாகத்தின்கீழ் இயங்குவதாகவும், அதனை மாற்றி அமைக்க வேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை முன்வைத்துள்ளார்கள். அதற்கமைய மன்னாகண்டல் கமக்கார அமைப்பின் புதிய நிர்வாகத் தெரிவு எதிர்வரும் 6 ஆம் திகதி அன்று மன்னாகண்டல் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி.3)



## போராட்டத்தில் கலந்து கொண்டோருக்கு உதவிகள்

முல்லைத்தீவு,செப். 4

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த மாதம் 28 ஆம் திகதி இடம்பெற்ற மகாவலி எல் வலய எதிர்ப்புப் போராட்டத்துக்கு, முள்ளியவளை கிழக்கு 108 கிராம அலுவலர் பிரிவில் இருந்து சென்ற அனைத்து மக்களுக்கும் கிராம அலுவலர் ஊடாகக் கிராம அபிவிருத்திச் சங்கம் வாழ்வாதார உதவிகளை வழங்கிவருவதாக மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

இதன்மூலம் ஒரு தொகுதிப் பொருள்கள் மக்களுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது என்றும், அதனை போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுக்கு வழங்கக் கிராம அபிவிருத்திச் சங்கம் முன்வந்து நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மக்கள் தெரிவித்துள்ளார்கள். பாய்,சட்டி,பானை,தண்ணீர்க்கான், சுட்டியல் மற்றும் தொழில் உபகரணப் பொருள்கள் உள்ளிட்ட பொருள்கள் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் பொதுநோக்கு மண்டபத்தில் வைத்து மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (ரி3)




## வன்னிக்குறோஸ் திரிசாரணர் ஆரம்ப நிகழ்வு

முல்லைத்தீவு,செப். 4

மாங்குளம் மகாவித்தியாலய மைதானத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தலைமையில் திரிசாரணர் ஆரம்ப நிகழ்வும் சின்னம் சூட்டும் நிகழ்வும் நடைபெற்றது.

பாடசாலை மாணவர்கள் 70 பேருக்குச் சாரணர் சின்னம் சூட்டிவைக்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கான சாரணிய சின்னத்தைச் சாரணிய தலைமை பணிமனை ஆணையாளர் என்.சௌந்திராஜன்,ப.அஜித்கமார் ஆகியோர் சூட்டிவைத்தனர். தொடர்ந்து முதன்மை விருந்தினர் மாவை சேனாதிராசா மற்றும் சிறப்பு விருந்தினர் சி.வி.கே.சிவஞானம் உள்ளிட்டோர் மாணவர்களுக்குச் சாரணியச் சின்னத்தைச் சூட்டிவைத்தனர்.

நிகழ்வில் முதன்மை விருந்தினர் மாவை சேனாதிராசா, முதன்மை உரையையும் சிறப்பு விருந்தினர் சி.வி.கே.சிவஞானம் சிறப்பு விருந்தினர் உரையையும் நிகழ்தியுள்ளதுடன், மாலை நிகழ்வாகச் சாரண மாணவர்களுக்கிடையில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றிபெற்ற சாரணிய மாணவர்களுக்கு நினைவு சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (ரி 3)

## ஞானஒளி சனசமூக நிலைய நூலகத் திறப்பு நிகழ்வு

முல்லைத்தீவு,செப்.4

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு, மந்துவில் ஞானஒளி சனசமூக நிலைய நூலகத் திறப்பு விழா கடந்த 1ஆம் திகதி சனிக்கிழமை இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் கலந்து கொண்டார். இந்த நூலகத் திறப்பு நிகழ்வில் விருந்தினர்கள் உரைகள், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. அத்தோடு நூலகத்துக்குப் புத்தகங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டதுடன், உதவு தொகைகளும் வழங்கப்பட்டன. (222)



# மன்னாரில் முடிவின்றித் தொடரும் மனித எலும்புகளின் அகழ்வுப்பணி

மன்னார் ,செப் 4

**மன்னார் சதொச வளாகத்தில் மனித எலும்புக்கூடுகள் அகழும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. மனித எச்சங்களை அப்புறப்படுத்தும் பணிகளின்போதும், தொடர்ச்சியாகப் புதிய மனித எச்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றன. புதிய மனித எச்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டு வருவதனால் அகழ்வுப் பணிகள் முடிவின்றித் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றது.**

நேற்றுத் திங்கட்கிழமை 62ஆவது தடவையாகவும் வளாகத்தில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன.
சிறப்புச் சட்ட மருத்துவ அதிகாரி மற்றும் தொல்லியல்துறைப் பேராசிரியர் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.
இந்த நிலையில் இதுவரை 111 மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டதுடன், 97 மனித எச்சங்கள் வளாகத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.
மேலதிகமாகக் காணப்படும் 14 மனித எச்சங்களை அப்புறப்படுத்தும் பணிகள் இடம் பெறுகின்ற போதும் குறித்த மனித எச்சங்களின் கீழ் மேலும் அதிகளவிலான மனித மண்டையோடுகள் காணப்படுவதனால் அப்புறப்படுத்தும் பணிகளை முழுவதுமாக முடிப்பதில் தாமதம் காணப்படுகின்றது.
இதுவரை 111 மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டாலும் 97 மனித எச்சங்கள் மீட்கப்பட்டாலும் குறித்த வளாகத்தில் இருந்து மீட்கப்பட்ட தடையப் பொருள்கள் குறைவாகவே காணப்படுகின்றன.
இதுவரை வட்ட வடிவிலான உலோகப்பொருள்கள் மாலை போன்ற ஒரு சில தடயப் பொருள்களே மீட்கப்பட்டுள்ளது.
இதுவரை 4 தொடக்கம் 5 அடி வரை அகழ்வுகள் இடம் பெற்றிருந்தாலும் இதுவரை துணிகளோ அல்லது ஆடைகளுடன் சம்மந்தப்பட்ட எந்த விதமான தடயப் பொருள்களும் கிடைக்கவில்லை என்பது சந்தேகத்துக்கு உரியதாகக் காணப்படுகின்றது.
சடலங்களாகப் புதைக்கப்பட்டபோது ஆடையில் காணப்படும் தடயப் பொருள்கள் எவையும் கண்டு பிடிக்கப் படாத நிலையில் புதைக்கப்பட்ட உடல்கள் நிர்வாண நிலையில் புதைக்கப்பட்டிருக்கலாமோ எனச் சந்தேகம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (56)





## சேவை பெறுநர் பட்டயம் கையளிக்கும் நிகழ்வு

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு உட்பட்ட ஒட்சுட்டான், கரைதுறைப்பற்று வெலிஓயாஆகிய பிரதேசங்களுக்கான சேவை பெறுனர் பட்டயம் கடந்த மாதம் 31 ஆம் திகதி மாவட்டச் செயலகத்தில் வைத்து கையளி க்கப்பட்டுள்ளது.
ஏ.சி.ரி.ஈ.டி மற்றும்சி.ஈ.பி.ஏ ஆகிய நிறுவனங்களால், முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான், கரைதுறைபற்று, மற்றும் வெலிஓயா பிரதேசத்துக்குட்பட்ட கல்வித்துறை மற்றும் பிரதேசசபைகளினால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பான விடயங்களை உள்ளடக்கியதான சேவைபெறுனர் பட்டயம் முல்லைத்தீவு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்டச் செயலர் தலைமையில் பிரதேச செயலர்கள், கல்வித்திணைக்கள அதிகாரிகள், மற்றும் பிரதேச சபை செயலர்கள்,ஏ.சிரி.ஈ.டி ,சி.ஈ.பி.ஏ நிறுவனஉத்தியோகத்தர்கள், பொது மக்கள் ஆகியோரின் பங்குபற்றலுடன் நடைபெற்றுள்ளது. கிரா மங்களில் மக்கள் பார்வைக்காக இந்த பட்டையம் கிராம அமைப்புக்களின் மண்டபத்தில் காட்சிப்படுத்துவதற்காக மாவட்டச் செயலரினால் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (ரி3)

## எரிக்கப்பட்ட வாடிகளை மீளவும் சீரமைக்கும்பணி

யாழ்ப்பாணம்,செப் 3
முல்லைத்தீவு நாயறுப் பகுதி மீனவர்கள்களின் எரிக்கப்பட்ட வாடிகளை மீளவும் சீரமைக்கும் பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.
வாடிகளுக்கான தூண்கள் போடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞர் அணி ஊடாகத் தியாகி அறகொடை நிறுவனத்தின் உதவி, நலன் விரும்பிகளின் ஆதரவுடன் இந்தச் சீரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
முல்லைத்தீவு, நாயாறு பகுதியில் உள்ளூர் மீனவர்களுக்குச் சொந்தமான 8 வாடிகள் உட்பட மீன்பிடி உபகரணங்கள் கடந்த மாதம் 13 ஆம் திகதி தீயிட்டு எரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (7)



## வவுனியாவில் ஐந்து பேருக்கு விருது

வவுனியா.செப்.4
வவுனியா, கூமாங்குளம் சிறி வீரபத்திரகாளி அம்மன் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற தென்னிந்தியப் பிரபலப் பின்னணிப்பாடகர் பி. பீ. சிறிநிவாசின் நினைவு தினத்தில், பல்துறைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 5 பேருக்கு விருதுகள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டுள்ளது.
சமூகம், கலைத்துறை, சமயத்துறை, வியாபாரத்துறை, ஊடகத்துறை போன்றவற்றிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 5பேருக்கு, தென்னிந்தியாவின் பிரபலப் பின்னணிப்பாடகர் பி. பீ. சிறிநிவாசின் நினைவு விருதுகள் வழங்கி மதிப்பளிக்



கப்பட்டுள்ளதுடன், நிகழ்வின் இறுதியில் கூமாங்குளம் சிறி வீரபத்திரகாளி அம்மன் ஆலய வளர்ச்சிக்கான அதிஸ்டலாபச் சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டன.
அம்மா பவுண்டேசனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் வசதியற்ற 20 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்குவதற்கான பற்றுச்சீட்டுக்களும் வழங்கிவைக்கப்பட்டன.



## ஈருருளிகள் வழங்கல்

வவுனியா,செப் .4
தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பதில் தலைவருமான செல்வம் அடைக்கலநாதனின் முயற்சியில் வவுனியா, மன்னாரைச் சேர்ந்த வறுமைக்கோட்டுக்குட்பட்ட பயனாளிகளுக்கு ஈருருளிகள், வவுனியா மாவட்ட ரெலோ காரியாலயத்தில் வைத்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை வழங்கப்பட்டன.
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம், டெலோ வவுனியா மாவட்ட அமைப்பாளர், பதில் அமைப்பாளர், கட்சி உறுப்பினர்கள் இணைந்து, ஈருருளிகளை வழங்கி வைத்தனர். (56)

## சுனாமி நினைவிட சுற்று வேலி அமைக்கும் பணி

வவுனியா,செப் .4
முல்லைத்தீவு - முள்ளியவளை, கயட்டையடி சுனாமி நினைவிட சுற்றுவேலி அமைக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.
சுனாமி நினைவிடம் சுற்று வேலி ஒன்று இல்லாத நிலையில் காணப்பட்டது.
இந்த நிலையில் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் இந்த சுற்று வேலி அமைப்பது தொடர்பாக மாகாண மட்டத்தில் பல தடவைகள் வலியுறுத்தி வந்துள்ளார்.
அதன் அடிப்படையில அவரின் கோரிக்கைக்கு அமைய தற்போது வடக்கு மாகாண சபையின் சிறப்பு நிதி ஒதுக்கீட்டின் ஊடாக சுற்று வேலி அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மகிழங்குளத்தில் வெடிபொருள்கள் மீட்பு

வவுனியா, ஓக.4
வவுனியா, மகிழங்குளத்தில் நேற்றுமுன்தினம் வெடிபொருள்கள்மீட்கப்பட்டுள்ளன. தனியார் காணி ஒன்றைத் துப்புரவு செய்தபோது அங்கு வெடி பொருள்கள் காணப்பட்டுள்ளன. அது



தொடர்பில் ஓமந்தைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. ஓமந்தைப் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று சோதனைகள் மேற்கொண்டனர். நிலத்தில் புதைக்கப்பட்ட நிலையில் 3 ஆர்.பி.ஜி. எறிகணைகளும், ஒரு றொக்கற்லோஞ்சர் எறிகணையும், 3 கைக்குண்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இது தொடர்பாகச் சிறப்பு அதிரடிப் படையினருக்குத் தெரியப் படுத்தப்பட்டது. நீதிமன்ற அனுமதி பெற்று அந்த இடத்தில் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற110)

## 47 இளையோருக்கு உறுதிபூசுதல் நிகழ்வு

வவுனியா, தூய அந்தோனியார் ஆலயத்தில் நேற்று முன்தினம் , 47 இளையோருக்கு உறுதிபூசுதல் அருட்சாதனம் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்ணாண்டோவால் வழங்கிவைக்கப்பட்டுள்ளது.
வவுனியா, இறம்பைக்குளம் தூய அந்தோனியார் ஆலயப் பங்கில் ஞாயிற்றுக்கிழமை காலை 7.30மணியளவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் தலைமையில் இடம்பெற்ற கூட்டுத்திருப்பலியில் கலந்துகொண்டு 47 இளையோருக்கு உறுதிபூசுதல் எனும் அருட்சாதனத்தை வழங்கிவைத்தார்.
இளையோர் தமது பெற்றோர்களுடன் சென்று ஆயரிடம் உறுதிபூசுதல் அருட்சாதனத்தைப் பெற்றுக்கொண்டனர்.
இந்த நிகழ்வில் தூய அந்தோனியார் ஆலயத்தின் பங்குத் தந்தை அருட்பணி எம். ஜெயபாலன், அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், ஞானப் பெற்றோர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.



# ஆடம்பர வாழ்க்கை முறைகளால் தனிநபர் உழைப்பு போதவில்லை

## முதலமைச்சர் விக்கி கூறுகிறார்

**யாழ்ப்பாணம், செப். 4**
**நாம்அனைவரும்எளியவாழ்க்கை முறையில் இருந்து ஆடம்பர வாழ்க்கைமுறைமைக்குஎம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டதால் தனிநபர் உழைப்பில் குடும்பச் செலவுகளை ஈடுசெய்ய முடியாமல்தத்தளிக்கின்றோம். முதியவர்களை ஆதரிக்க முடியாமல் திண்டாடுகின்றோம்.**



இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
மாகியப்பிட்டி முதியோர் சங்கத்தின் முதியோர்தினவிழாவும், மாகியப்பிட்டி சந்தி அருகாமையில் நேற்றுமுன்தினம்இடம்பெற்றது. அதில்முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில்அவர்இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கூட்டுக்குடும்பவாழ்க்கைமுறைஎமது சமூகங்களிடையே காணப்பட்ட காலத்தில் முதியோர் பராமரிப்பு என்பது குழந்தை பராமரிப்புக்கு ஒப்பாக அனைவராலும் மன விருப்புடன் மேற்கொள்ளப்பட்ட ஒரு சேவை. அந்தக் காலத்தில் தனிநபர் உழைப்பில் குடும்பத்திலுள்ளசாரசரிஐந்துபிள்ளைகளுடனான குடும்ப வாழ்க்கை முறைமை மிகச் சிறப்பாக அமைந்திருந்தது.
தந்தை தேடிக் கொடுக்கின்ற பொருள் ஈட்டங்களைத்தாயார்பக்குவப்படுத்தி குடும்பச் செலவுகளுக்குப் பயன்படுத்தியதுமட்டுமல்லாமல்பிள்ளைகளின் படிப்புசெலவு, உடுபுடைவைகள்இதர தேவைகளையும் கவனித்து எஞ்சிய சொற்ப பணத்தைக் கவனமாகச் சேமித்துவைத்துபின்னர்குடியிருப்பு நிலங்கள், தோட்ட நிலங்கள், வயல் நிலங்கள் ஆகியவற்றையும் வாங்கி வைத்திருந்தார்கள்.
வீட்டில் முதியோர் ஒருவருக்கு சுகவீனம் ஏற்பட்டால் அல்லது இயலாத நிலை ஏற்பட்டால் குடும்ப உறவுகள் அனைவரும்ஒன்றாகத்திரண்டுஅவருக்கு சேவை செய்ய "நான் முந்தி""நீ முந்தி" என விழுந்தடித்துக் கொண்டு முன் நிற்பார்கள்.
ஆடம்பர செலவுகள் அதிகரித்து விட்ட நிலையில் குடும்பத்திலுள்ள வளர்ந்த அனைத்துஉறுப்பினர்களும்வேலைகளுக்குச் செல்லவேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.
இதன் விளைவாக இன்று குழந்தைகள் காப்பகம், மற்றும் முதியோர் பராமரிப்பு நிலையங்கள் ஆகியவற்றை நாடவேண்டியகட்டாயசூழ்நிலைக்கு எமது மக்கள் முன்தள்ளப்பட்டுள்ளார்கள்.
கிட்டத்தட்ட 50 ஆண்டுகள் தொடர்ச்சியாக உழைத்துக் களைத்த முதியவர்கள்அமைதியாகஓய்வுஎடுப்பதற்கும், ஆலய தரிசனம், ஆன்மிகக் கருத்து பரிமாற்றங்கள் மற்றும் நவீன அறிவியல்மீள்பார்வைகள்போன்றவற்றை மேற்கொள்வதற்கும் அவர்களுக்கு அமைதியான சூழல் ஒன்று தேவைப்படுகின்றது.
தமது தேநீர் குவளையைக் கழுவி வைக்க, உணவு உண்ட கோப்பையைக் கழுவி வைக்க, உடுபுடைவைகளைதட தோய்த்து உலரச் செய்து வழங்க, படுக்கை விரிப்புகளைச் சீர் செய்துவிட என இவ்வாறான சிறு சிறு வேலைகளுக்குக் கூட ஒரு கையுதவி தேவைப்படுகின்றது.
தற்கால இளைஞர்களிடம் சமூக விழிப்புணர்வுகள் குன்றி வருகின்றன. அவர்களின் பொழுதுகள் அவப்பொழுதாக அலைபேசிகளுடனும், மோட்டார் சைக்கிள் பவனிகளிலும், வீதிச்சண்டை களிலும் கழிகின்றன.
வெளிநாட்டுப் பணத்தால் வெறும் ஆடம்பரங்களில் ஈடுபடும் எமது இளைஞர்கள் தடம்புரளாமல் இருக்க அவர்களின் பெற்றோர்களும் அவர்களுக்குக் கொடையளிக்கும் வெளிநாட்டவரும் ஒன்று சேர்ந்து அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும்.
எமது இளைஞர்களின் கையில்தான் எமது வருங்காலம் உண்டு. இதை மறவாதீர். அவர்கள் தடம் மாறினால் எமது அடையாளங்கள் அழிந்து விடுவனவே - என்றார். (4)



## வவுனியாவிலிருந்து நல்லூருக்கு 7 நாள்கள் நடைபவனி ஆரம்பம்

வவுனியா, செப். 4
வவுனியாவில் இருந்துநல்லூருக்கான நடைபவனிநேற்றுமுன்தினம் ஆரம்பமானது.
வவுனியா வேப்பங்குளம் பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் இருந்து அறநெறிசெல்விசாமிஅம்மாதலைமையில்ஆரம்பமான நடைபவனியில் வயது வேறுபாடுகள் இன்றி ஏராளமானோர் கலந்துகொண்டனர்.
நடைபவனி115 ஆலயங்களைத்தரிசித்து 7 ஆவதுநாளான யாழ்ப்பாணம்நல்லூர்த்தேர்திருவிழா அன்று நடைபவனி நல்லூரைச் சென்றடையவுள்ளது.
இந்த நடைபவனி ஏ9வீதி வழியாக நல்லூரைச்சென்றடையவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (4,110,159)


## போதை, வன்முறைகளை கட்டுப்படுத்தவென வடக்கு அதிகாரிகளுடன் ஆளுநர் ஆலோசனை

யாழ்ப்பாணம், செப். 4
யாழ்ப்பாணக் குடாநாட்டில் வன்முறைகள் அதிகரித்துள்ளமைதொடர்பிலும்போதைவஸ்துமற்றும்கலாசாரசீரழிவுகள் எதிர்காலத்தில் அதிகரிக்காது பாதுகாத்துக் கொள்வதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராயும் சிறப்புக் கூட்டங்கள் வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தலைமையில் நடைபெற்றது.
சுண்டுக்குளியில் அமைந்துள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்றுக்காலைமுதல்மாலைவரைகூட்டங்கள்நடைபெற்றன.
முற்பகல்10.30மணியளவில்யாழ்ப்பாணமாவட்டபொது அமைப்புகளின்பிரதிநிதிகள், இளைப்பாறியயாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர்கள், பேராசிரியர்கள், மதுவரித்திணைக்களஅதிகாரிகள், சர்வமதத்தலைவர்கள் புத்திஜீவிகள்உள்ளிட்டோர்கலந்துகொண்டனர். குடாநாட்டில் வன்முறைகள் மற்றும் போதைவஸ்துப் பாவனை அதிகரித்துள்ளமைக்கான காரணங்கள் தொடர்பில் ஆளுநர் கேட்டறிந்து கொண்டார்.
மதியம்ஒருமணியளவில்யாழ்ப்பாணக்குடாநாட்டில்பாடசாலை முதல்வர்கள், கல்வித் திணைக்களப் பணிப்பாளர்கள், கல்விஅமைச்சின்செயலாளருடன்கலந்துரையாடிய ஆளுநர், மாணவர்கள்மத்தியில்போதைவஸ்துபழக்கங்களைக்கட்டுப்படுத்தவேண்டியவழிமுறைகள், மாணவர்கள் வன்முறையில் ஈடுபடுவதற்கான காரணங்கள், அதனை இல்லாமல் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள்தொடர்பாகவினாஎழுப்பினார். ஆளுநர்செயலகத்தில் இன்றையதினம்பாதுகாப்புதரப்பினருடனான கலந்துரையாடல் ஆளுநர் தலைமையில் நடைபெறவுள்ளது. அதில் பேசவேண்டிய விடயங்கள் தொடர்பில் தகவலைப் பெற்றுக்கொள்ளும் கூட்டமாக இது அமைந்ததாக ஆளுநர் செயலகம்தெரிவித்துள்ளது. இந்தக்கூட்டங்களில்ஆளுநரின்செயலர்எல். இளங்கோவன், இணைப்புச்செயலாளர் சுந்தரம் டிவகல்லாலா, உதவிச் செயலர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (4,8)



## சுகாதார விதிமுறைக்கு முரணாக பீடா: வைத்திருந்தவருக்கு 2,000 ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், செப். 3
சுட்டுத்துண்டின்றி, சுகாதார விதிமுறைகளுக்கு முரணான வகையில் பீடாவைத்திருந்த கடை உரிமையாளருக்கு நீதிவான் 2ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளார்.
யாழ்ப்பாண நகரில் சிவன் கோவிலுக்கு அருகாமையிலுள்ள வர்த்தக நிலையத்தைச்சோதனைக்கு உட்படுத்திய யாழ்ப்பாண மாநகர பொதுச் சுகாதாரப்பரிசோதகர்பா. சஞ்ஜீவன், அங்கு சுட்டுத்துண்டின்றிச் சுகாதாரத்துக்கு முரணான வகையில் பீடா வைத்திருந்தமையை அவதானித்துள்ளார். அவ்வாறு அங்கிருந்த 7கிலோபீடாகைப்பற்றப்பட்டது. விற்றவருக்கு எதிராக யாழ்ப்பாண நீதிமன்றில் கடந்த 29ஆம் திகதி வழக்குத் தொடுக்கப்பட்டது.
அந்தவழக்குகடந்தவியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. கடை உரிமையாளர் குற்றத்தைஏற்றுக்கொண்டார். அதையடுத்து 2 ஆயிரம்ரூபாதண்டம்விதிக்கப்பட்டது. (4,115)



வாழை மரத்தின் நடுவில் பொத்தி தள்ளி குலை வந்துள்ளது. சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கி அமைந்துள்ள காணியில் காணப்படும் வாழை மரத்தில் இதனை அவதானிக்க முடிந்தது. (9)

# பனைசார் உற்பத்திகளுக்கென 250 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

## கொழும்பு அமைச்சு ஒதுக்கியது



**யாழ்ப்பாணம், செப். 4**

**பனை அபிவிருத்திச் சபை இந்த வருடத்தில் பனைசார் உற்பத்தி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு 250மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. மீள்குடியேற்ற மறுவாழ்வு அமைச்சு இந்த நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.**

பனைசார் உற்பத்திகளை அதிகரிக்கவும் மக்கள் மத்தியில் இது தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும் இந்த நிதி ஒதுக்கப்பட்டு அதற்கான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன.

பனைசார் வேலைத்திட்டங்கள். அபிவிருத்தி நடவடிக்கைகள் யாவும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன என்று சபையின் விரிவாக்க முகாமையாளர் கே.கோபாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

மறுவாழ்வு மீள்குடியேற்ற அமைச்சு ஒதுக்கிய இந்த நிதி ஊடாகச் சகல வேலைத்திட்டங்களும் இந்த ஆண்டுக்குள். முடிவுறுத்தப்பட வேண்டும்.

பனைசார் உற்பத்தியை மேலும் அதிகரிப்பதற்குச் சகல பனைவள அபிவிருத்திச் சங்கங்கள், பனை.தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராமிய மட்ட சங்கங்கள் போன்றவற்றின் உதவியுடன் இந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்கென சகல பனைசார் உற்பத்தி அமைப்புகளையும் பனை அபிவிருத்திச் சபை அழைத்து இது தொடர்பான கலந்துரையாடல்களை முதற்கட்டமாக நடத்தி வருகின்றது.

இதற்கென பனைசார் உற்பத்திச் சங்கங்கள் சபையில் பதிவு செய்யப்பட்டு அந்தச் சங்கங்கள் ஊடாகப் பெருமளவில் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பனம் உற்பத்தியில் ஈடுபடுவோர்கூட தமது வாழ்வாதாரத்தை முன்னெடுக்கும் முகமாக சபையால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்தில் இணைந்து பயனடையமுடியும். இந்தச் சங்கங்கள் மற்றும் பனம் உற்பத்தி அமைப்புகள் ஊடாகப் பனைசார் உற்பத்திக்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளன.

சபை முன்னெடுக்கும் இந்த வேலைத்திட்டங்கள் விரைவாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன. பனைசார் உற்பத்தி அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் இணைய விரும்பும் சங்கங்கள் சபையின் 021222 2034 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (4.17)

# அடுத்த வருடத்திலிருந்து தமிழ் மொழி முன்னுரிமை

## பெயர்ப்பலகைகள், விளம்பரங்களில் மாற்றம் செய்யுமாறு சபை அறிவுறுத்து

யாழ்ப்பாணம், செப். 4

கரைச்சிப் பிரதேச சபை ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் அடுத்த வருடம் தொடக்கம் முதலாம் மொழியாகத் தமிழ் மொழியைப் பயன்படுத்துகின்ற செயற்பாடுகள் மிக இறுக்கமாகக் கையாளப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

சபையின் அமர்வு அண்மையில் இடம்பெற்றபோது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று சபையின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

ஏற்கனவே கரைச்சிப் பிரதேச சபையினுடைய அமர்வில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாகக் கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களின் வணிக நிறுவனங்களுடைய பெயர்ப் ப்லகைகள் மற்றும் விளம்பரங்கள் அனைத்திலும் தமிழ்மொழி நடைமுறைப்படுத்தப்படுவது உறுதிசெய்யப்படும்.

இதற்குக் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள். பொது அமைப்புகள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று சபையினர் கேட்டுக்கொள்கிறார்கள்.

2019 ஆம் ஆண்டு எங்களுடைய பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற புதிய செயற்றிட்டங்களின் கீழ் தமிழ் மொழி நடைமுறைப்படுத்தப்படும்.

ஆகவே பெயர்ப் பலகைகளிலும் விளம்பரங்களிலும் முதலாம் மொழியாகத் தூய தமிழ் மொழியைப் பயன்படுத்தவேண்டும் என்ற கோரிக்கையை கரைச்சி பிரதேச சபையினர் விடுத்துள்ளனர்.

அது தொடர்பான தீர்மானமும் சபையிலே எடுக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த நடைமுறையைச் சரிவர நடைமுறைப்படுத்தும் பொருட்டு சம்பந்தப்பட்டவர்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று சபையினர் கேட்டுக்கொள்கின்றனர்.

தமிழ்மொழியைய நடைமுறைப் படுத்துவ மிக முக்கியமானது. மொழி நடைமுறையில் இருந்துதான் ஒரு இனத்தின் அடிப்படை விடயங்கள் கட்டியமைக்கப்படுகிறன என்றும் சபையினர் தெரிவித்தனர். (4)

# பொதுக் கணக்குக் குழு கூட்டங்கள் இந்தமாதம்

யாழ்ப்பாணம், செப். 3

2016 ஆம் ஆண்டுக்கான மாகாண பொதுக் கணக்குக் குழுக் கூட்டம் இந்த மாதம் மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ளன என்று மாகாண சபை பேரவைச் செயலகம் தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வருடாந்தம் அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் வருடாந்தக் கணக்கு விவரங்கள் கோப்குழுவுக்குச் சமர்பிக்கப்படுகின்றன. வரவுகள் செலவுகள் உள்ளிட்ட அனைத்து விடயங்களும் உள்ளடக்கப்பட்ட கணக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும். அவற்றில் தீர்க்க முடியாத பிரச்சினைகள் உள்ளன. ஆகவே இவ்வாறு தோன்றும் ஐய வினாக்களைத் தீர்ப்பதற்காக இந்தக் குழுக் கூட்டம் பேரவைச் செயலகத்தில் மூன்று நாள்கள் நடைபெறவுள்ளன.

7ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆளுநர் செயலகம், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, பிரதி முதன்மை செயலர் பணியகம், கல்வி அமைச்சும் அதன் கீழ் உள்ள திணைக்களங்களும்.

10ஆம் திகதி திங்கட்கிழமை மகளிர் விவகார அமைச்சு, விவசாய அமைச்சு, சுகாதார அமைச்சு அதன் கீழ் உள்ள திணைக்களங்கள். 25 ஆம் திகதி செய்வாய் கிழமை முதலைச்சர் அமைச்சு, நெல்சிப் திட்டம் மற்றும் ஏனைய பிரச்சினைகள் ஆராயப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (4.7)

# சமுர்த்திப் பயனாளிகளின் கிராமங்களைச் சீர்செய்ய ரூ.40 மில்லியன் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், செப். 4

யாழ்ப்பாணமாவட்டத்தில்சமுர்த்திப்பயனாளிகளை உள்ளடக்கியகிராமங்களின்தேவைகளைச்சீர்செய்வதற்கு 40 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக மாவட்டச்செயலகசமுர்த்திப்பிரிவுதெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்ட தாவது:

கிராமங்களிலுள்ள வீதிகள், குளங்கள் . கால்வாய்கள், பொதுக் கிணறுகள் போன்றவற்றைச் சீரமைப்பதற்கு இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சீரமைக்க வேண்டிய இடங்கள் எந்தத் திணைக்களத்தின், பிரதேசசெயலகத்தின்கீழ்உள்ளடங்குகின்றனவோஅவர்கள்செயற்றிட்டமுன்மொழிவுகளைச் சமர்ப்பிக்க வேண்டும். ஒரு செயற்றிட்டத்துக்கு 2 மில்லியன்வரையில்ஒதுக்கப்படும்.ஆகவேதேவைகளை இனம் கண்டு முன்மொழிவுகளை வழங்க வேண்டும்என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4,7)

# இந்து மகாசபையின் ஒன்றுகூடல் கற்றனில் சிறப்புற இடம்பெற்றது

யாழ்ப்பாணம், செப். 4

அகில இலங்கை இந்து மகா சபையின் ஒன்றுகூடல் கட்டன் சீடாவள நிலையத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை இடம்பெற்றது.

இலங்கை மலையக இந்து குருமார் ஒன்றிய பொதுச்செயலாளர் சிவசிறி வேலு சுரேஸ்வரசர்மா தலைமையில் இது நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக காவத்தை சிறி லக்ஸ்மிபவான் ஆலய குரு முதல்வர் சிறிலசிறி சுவாமி விஸ்வநாதக் குருக்கள் ஆசியுரை வழங்கினார் .

இந்தநிகழ்வில் இலங்கையிலுள்ள அனைத்து இந்து மக்களையும் ஒருமைப்படுத்துவோம் ஒன்றிணைவோம் என்ற கருத்திட்டத்தின்கீழ் புதிதாக அகில இலங்கை இந்து மகா சபா என்ற பெயரில் புதிய அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, அநுராதபுரம், கண்டி, பதுளை, ரத்தினபுரி, கேகாலை, மாத்தளை, நுவரெலியா மற்றும் கொழும்பு போன்ற மாவட்டங்களிலிருந்து இந்து குருமார்கள் மற்றும் இந்து அமைப்புகளின் பிரதிநிதிகள், இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபையினர் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்வில் இலங்கையில் இந்துக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், தொடரும் மதமாற்ற நடவடிக்கைகள், இந்துக்களை ஓரணியில் அணிதிரட்டல், அறநெறிக் கல்வியை விரிவுபடுத்தல், ஆலய மற்றும் மதம் சார் நடவடிக்கைகளில் இளைஞர்களை ஈடுபடுத்தல், இந்து மத குருமார்களின் நடவடிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

மாவட்ட ரீதியாக ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவும் அறிமுகமும் இடம்பெற்றது. சிவனொளிபாதமலை அடிவாரத்தில் இருந்த "சிவனடிபாதம்" என்ற பெயர் பலகை மாற்றப்பட்ட விடயம் அனைவராலும் சுட்டிக்காட்டப்பட்டது.

இலங்கை மலையக இந்து குருமார் ஒன்றிய பொதுச்செயலாளர் சிவசிறி வேலு சுரேஸ்வரசர்மா தலைமை உரையில், வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து இந்து மக்களையும் இந்த அமைப்பில் இணைந்து எதிர்காலத்தில் தவறான பாதையில் செல்கின்ற மக்களை, இளையோரை இந்து சமய கலை கலாசார பாரம்பரிய ஒழுக்க விழுமியங்களுக்குள் உள்வாங்கி இந்து மதத்துக்கும் மக்களுக்கும் சரியான தலைமைத்துவத்தை உருவாக்க வேண்டும் - என்று தெரிவித்தார். (4.159)



# குடும்ப ஆட்சியை மீண்டும் உருவாக்கத்தான் கூட்டு எதிர்க்கட்சியினர் நாளை போராட்டம்

## அரசுக்கு அது சவால் அல்ல என்கிறார் ஐ.தே.க.வின் பொதுச் செயலர்



**கொழும்பு,செப்.4**
**குடும்ப ஆட்சியை மீண்டும் உருவாக் கவே பொது எதிரணியினர்நாளைபோராட்டத்தைமுன்னெடுக்கவுள்ளனர். போராட்டத்தின்போது பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்து பொதுச' சொத்துக்களைச் சேதப்படுத்தினால் கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொது செயலாளர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
தேசியஅரசுமுறையற்றபொருளாதாரத்தை மேற்கொள்கின்றது என்று பொய்க் குற்றச்சாட்டை முன்வைத்து மகிந்த தரப்பினர் தொடர்ந்து போராட்டங்களை மாத்திரம் மேற்கொண்டு வருகின்றனர். நாட்டின் மீது பற்றுக் கொண்டுஇவர்கள்போராட்டங்களை மேற்கொள்ளவில்லை என்ற காரணத்தைப்பொதுமக்கள்நன்குபுரிந்து கொள்ள வேண்டும். தம்மை எதிர் காலத்தில்பாதுகாத்துக்கொள்வதற்காகவே தற்போது முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.
ஊழல்வாதிகளைத் தண்டிப்பதாக குறிப்பிட்டேதேசியஅரசுஆட்சிஅமைத்தது. மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள்எம்மால்பலநிறைவேற்றப்பட்டுள்ளன. ஊழல்வாதிகளைத்தண்டிக்கும் விடயத்தில்அரசுதாமதிப்பதில் பலகாரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. நாம்பின்பற்றும்சட்டங்களில்பல சிக்கல்கள் காணப்படுகின்றன.
குறித்தசட்டங்களைக் குற்றவாளிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றமையினால் மக்களின் எதிர்பார்ப்புபிற்போடப்பட்டது.
அரசமைப்புக்கு முரணான முறையில் அதிகாரத்தைப் பெறவேண்டும் என்ற நோக்கத்திலே நாளை போராட்டங்கள் இடம்பெறவுள்ளன. இந்தப் போராட்டங்களைக் கண்டு அரசு ஒரு போதும் பின்னடையாது.
மக்களாட்சி தொடர்பில் பேசும் பொது எதிரணியில் உள்ளவர்கள் எவருக்கும் அரச தலைவர் வேட்பாளராகப் போட்டியிடும் தகைமை கிடையாதா? மகிந்தகடந்தகாலங்களில்தன்குடும்ப உறுப்பினர்களைவேட்பாளராகமுன்னிலைப்படுத்த முயற்சிகளை மேற்கொண்டார். இதன் காரணமாகக் குடும்ப உறுப்பினர்களுக்கிடையிலும், கட்சி உறுப்பினர்களுக்கிடையிலும் முரண்பாடுகள் இடம்பெற்றன.
ஏற்பட்டுள்ள பிளவைச் சீர்செய்ய மகிந்த 19ஆவது திருத்தத்துக்கு முரணாக மீண்டும் அரச தலைவர் வேட்பாளராகப்போட்டியிட முடியுமாஎன்று உயர்நீதிமன்றத்தை நாடுகின்றமை தோல்வியையே தரும்.
பொதுஎதிரணியில் சார்பில் அரச தலைவர் வேட்பாளராக மகிந்தவின் குடும்ப உறுப்பினர்கள் மாத்திரமே போட்டியிட வேண்டும் என்று அந்தக் கட்சியின்கொள்கைகளும்ஏதும்கிடையாது. ஆகவே கூட்டு எதிரணியின் உறுப்பினர்கள் எவரும் போட்டியிடலாம்.
ஆனால் மகிந்த ஒரு போதும் தன் குடும்ப உறுப்பினர்களைத் தவிர பிறிதொருவரை வேட்பாளராகமுன்னிலைப்படுத்த மாட்டார்.
குடும்ப ஆட்சியே அவர்களின் குடும்பத்துக் குப் பலத்த பாதுகாப்பை அளிக்கும் என்ற காரணத்தால் மீண்டும் குடும்ப ஆட்சியையே உருவாக்க முயற்சிப்பார். இதன் ஒருபாகமே இந்தப்போராட்டம் - என்றார். (61)



# நாடு திரும்பினார் மைத்திரி

கொழும்பு,செப். 4
மூன்றுநாள் உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்ட அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் இரவு நாடு திரும்பியுள்ளார்.
நாடு திரும்பிய அரச தலைவரை வரவேற்பதற்காகக் கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் சிறப்பு நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நேபாளத்தில் நடைபெற்ற வங்காள விரிகுடா விளிம்பு நாடுகள் ஒத்துழைப்பு அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேன கடந்த 29ஆம் திகதி நேபாளம் சென்றிருந்தார்.
இதில் இலங்கை, இந்தியா, மியன்மார், பங்களாதேஷ், பூட்டான், நேபாளம், மற்றும் தாய்லாந்து ஆகிய ஏழு நாடுகள் இதில் பங்கேற்றிருந்தன. இந்த பிம்ஸ்டேக் மாநாட்டின் இறுதியில் அதன் தலைமைத்துவம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்கப்பட்டது.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திரமோடி, மியன்மார் அரச தலைவர் வின்மைன்ட், நேபாள தலைமை அமைச்சர் பிரஷட் ஒலி மற்றும் நேபாள அரச தலைவர் பித்தியா தேவி பந்தாரி ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தப் பயணத்தின் போது நேபாளத்துக்கும் இலங்கைக்கும் இடையில் இரண்டு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

# ரணில் தலைமையிலான மீளாய்வுக் குழு கட்சித்தலைவர்களுடன்கலந்துரையாடவில்லை

## தினேஷ் குணவர்தன எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, செப். 4
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான எல்லை வரம்பு மீளாய்வுக் குழு இதுவரையில் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சி தலைவர்களுடன் கலந்துரையாடவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அடுத்த வருடம் ஜனவரியில் மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறும் என அரசு தெரிவித்தது. அதேவேளை அரச தலைவர் தேர்தலே முதலில் நடைபெறும் என்று ஒரு சிலர் தெரிவிக்கின்றனர்.
இந்த நிலையில் அரசுக்குள்ளேயே இவ்வாறான மாறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் ஜனவரியில் தேர்தல்கள் நடைபெறுமா? என்பது கேள்விக்குறியே.
எவ்வாறிருப்பினும் இனியும் தேர்தல்களைக் காலம் தாழ்த்துவதற்கு நாம் இடமளிக்கப் போவதில்லை - என்றார்.

# கொழும்பை ஆக்கிரமித்துள்ள சீனர்கள்

கொழும்பு,செப். 4
கொழும்பு நகரம் சீனர்களின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி வருவதுடன் பல இடங்களில் சீனர்கள் அதிகளவில் நடமாடித் திரிவதை காணக் கூடியதாக இருப்பதாகச் சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
சீனா, இலங்கையில் பல்வேறு இடங்களில் பல திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது. இவற்றில் கொழும்பு நகரம் முதன்மை இடத்தைப் பிடித்துள்ளது. இதனால் கொழும்பு நகரில் சீனப் குடிமக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. சீனர்கள் பல இடங்களில் உணவகங்கள் உட்பட கடைகளை நடத்தி வருவதை கொழும்பில் காணக்கூடியதாக இருக்கின்றது.
கொழும்பு நகரில் சீனர்களின் எண்ணிக்கை ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் கொழும்பை சீனா ஆக்கிரமித்துள்ள விதம் பற்றியும் குறித்த ஊடகம் காணொளி ஒன்றைப் பதிவுவேற்றம் செய்துள்ளது.

# அரச தலைவர் செயலகத்தின் பணிக்குழாம் தலைவர் நியமனம்

அரச தலைவர் செயலகத்தின் புதிய பணிக்குழாம் தலைவராக மக்கள் வங்கியின் தலைவர் ஹேமசிறி பெர்ணான்டோ நியமிக்கப்பட்டுள்ளார். அரச தலைவர் செயலகத்தில் நேற்று முற்பகல் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நியமனக் கடிதம் வழங்கப்பட்டது. தேசிய ஒலிம்பிக் குழுவின் முன்னாள் தலைவரான ஹேமசிறி பெர்ணான்டோ, சிறந்த நிர்வாகத் துறை நிபுணராவார்.
முன்னாள்தலைமைஅமைச்சர்சிறிமாவோ பண்டாரநாயக்கவின் செயலராகவும் தபாற் துறை அமைச்சின் செயலராகவும் பணியாற்றினார்.

# போதைப்பொருள் வைத்திருந்த சிறைக்கண்காணிப்பாளருக்கு மறியல்

கொழும்பு, செப். 4
ஹெரோய்ன் போதைப்பொருளைத் தன்வசம் வைத்திருந்த நிலையில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட சிறைச்சாலை கண்காணிப்பாளரை நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.
அக்மீமன பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதான ஹேவா கட்டாடிகே சமீர என்ற மெகசீன் சிறைச்சாலையில் கடமையாற்றும் சிறைச்சாலைக் கண்காணிப்பாளரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.
சந்தேகநபர் ஹெரோய்ன் விற்பனையில் ஈடுபட்டு வருவதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது 40 மில்லிகிராம் ஹெரோய்னுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.
மேலும், சந்தேகநபரின் தொலைபேசி அழைப்புகள் சம்பந்தமாக அறிக்கையொன்றைப் பெற சம்பந்தப்பட்ட தொலைபேசி நிறுவனத்துக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு பொலிஸார் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.
சிறைச்சாலையில் பணிபுரியும் அதிகாரிகளே சிறைச்சாலைக்குள் ஹெரோயின் உட்படப் போதைப் பொருள்களைக் கொண்டுசெல்வதாகக் குற்றஞ் சுமத்தப்படுகிறது. இது குறித்து விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

# விரிவுரையாளர்களின் இளைப்பாறும் வயதெல்லை அதிகரிப்பு

பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்களின் இளைப்பாறும் வயதெல்லை 70 ஆக அதிகரிக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் ராஜித சேனரட்ன அண்மையில் அமைச்சரவையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்களின் பற்றாக்குறை சுமார் ஆயிரமாக உள்ள நிலையில் இந்த வயதில் இவர்கள் இளைப்பாறினால் விரிவுரையாளர்களின் பற்றாக்குறை மேலும் அதிகரிக்கும் என்பதால் அவர்கள் இளைப்பாறும் வயதெல்லையை 70 ஆக அதிகரிக்கப்பட வேண்டும்- என்றார்.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் இந்த விவகாரத்தைத் தேசியப் பொருளாதார கவுன்சிலுடன் கலந்துரையாடிய பின்னர் தன் முடிவைக் கூறுவதாக அறிவித்துள்ளார்.

# தேரர்கள் நால்வருக்கு பிணை



கொழும்பு, செப். 4
அரச சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தியமை தொடர்பில் கைது செய்யப்பட்ட நான்கு தேரர்களுக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
பெங்கமுவெ நாளக தேரர், மாகல்கந்தே சுதத்த தேரர், இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் மற்றும் மெடில்லே பன்யலோக தேரர் ஆகியோருக்கே இவ்வாறு பிணை வழங்கப்பட்டுள்ளது.
கொழும்புக் கோட்டை நீதிவான் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.
கடந்த ஆண்டு இடம்பெற்ற அங்கவீன முற்ற இராணுவ வீரர்களின் போராட்டத்தின் போது அரச சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்தியமை தொடர்பில் தேரர்கள் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

## நாளைய போராட்டத்தில் மக்களாட்சியை ஆதரிப்போர் கலந்துகொள்ளமாட்டார்கள்

மகிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, செப். 4

அரசை வீழ்த்த வேண்டும் என்ற கோஷத்தை எழுப்பி மீண்டும்ராஜபக்சக்களைஆட்சிக்குக்கொண்டுவந்துகுடும்ப ஆட்சியை உருவாக்கவே பொது எதிரணி முயற்சித்து வருகின்றது. மக்களாட்சியை ஆதரிக்கும்மக்கள்எவரும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளமாட்டார்கள் என சிறிலங்காசுதந்திரக்கட்சிதெரிவித்துள்ளது.

நாட்டைக் கட்டியெழுப்ப நாம் எடுக்கும்முயற்சிகளைத்தடுக்கும்சூழ்ச்சியாகவே இந்த செயற்பாடுகள் உள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

நாளைகொழும்பில்மாபெரும் எதிர்ப் புப் பேரணியை நடத்தி அர சைப் பலவீனப்படுத்துவதாகப்பொதுஎதிரணிகூறிவருகின்ற நிலையில் சிறிலங்கா சுதந்திரகட்சியின்நிலைப்பாடு குறித்து கேள்வி எழுப்பப்பட்ட போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்துஅவர்மேலும்தெரிவித்ததாவது:

கடந்த கால அரசியல் சூழல் மிகவும் மோசமானதாக மாறியதை நாம்மறுக்கவில்லை, போரை வெற்றிகொண்ட பின்னர்நாட்டில்நல்லிணக்கத்தை உருவாக்க முன்னையதலைவர்கள் மறந்துவிட்டனர். மாறாக சிறுபான்மை மக்களையும், பெரும்பான்மை மக்களையும்இராணுவம் மூலமாக அடக்கும் முயற்சிகளை மட்டுமே முன்னெடுத்தனர்.

அதனை மக்கள் விரும்பாத நிலையில் மக்கள் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தினர். இந்த மாற்றத்தின் பின்னர் நாட்டில் மக்களாட்சி பலமடைந்துள்ளது. அதனை எவராலும் மறுக்க முடியாது.

இன்று மக்களின் சகல செயற்பாடுகளுக்கும் அரசு இடமளித்துவருகின்றது.

இதனைப் பயன்படுத்தி பொது எதிரணிஎனகூறிக்கொள்ளும் நபர்கள் குழப்பங்களை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றனர்.

இது மக்களாட்சி விரோத செயற்பாடு என்றே நாம் பார்க்கின்றோம். அரசை வீழ்த்த வேண்டும் எனக் கோஷம் எழுப்பிக்கொண்டு மீண்டும் ராஜபக்சக்களின் ஆட்சியை உருவாக்கவேபொதுஎதிரணி முயற்சித்து வருகின்றது.

நாட்டைப் பலவீனப்படுத்த மக்கள்விரும்பவில்லை, அரசான நாமும்அதற்கு இடமளிக்கப் போவதில்லை. மக்க ளாட்சியை விரும்பும் மக்கள் எவரும்இந்தக்கூட்டங்களில்கலந்துகொள்ள மாட்டார்கள்- என்றார். (61)

## இரண்டு கள்வர்களையும் விரட்டியடிக்க வேண்டும்

ஜே.வி.பி யின் அனுர எம்.பி கூறுகிறார்



**கொழும்பு, செப்.4**

**அரச வளங்களை தனியார் மயப்படுத்தும் ஒரே நோக்கத்தில் அரசும், மீண்டும் ராஜபக்சக்களைக் கொண்டுவர வேண்டும்என்றநோக்கத்தில்பொது எதிரணியும்அரசியல்செய்துவருகின்றன. இரண்டு கள்வர்களையும் விரட்டியடிக்க வேண்டும் என்பதே எமது நோக்கம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.**

மக்கள் விடுதலை முன்னணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம்கட்சித்தலைமைஅலுவலகத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறுதெரிவித்தார். போதைக்காத..


அவர் மேலும் தெரிவித்ததாவது:

கோத்தா, பசில் இருவரும் அமெரிக்கக் குடிமக்கள். அமெரிக்கா என்ன சொல்கின்றதோ அதையே செய்வார்கள்.

கடந்த மூன்று ஆண்டுகளில் நாட்டின்பொருளாதாரம்பெரியஅளவில் வீழ்ச்சி கண்டுள்ளது. மக்களின் வாழ்வாதாரம்பெரும்நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. ரூபாவின் பெறுமதிவீழ்ச்சிகண்டுள்ளது. தலைமை அமைச்சர் தலைமையிலான ஐக்கியதேசியக்கட்சிக்குப்பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது என்பதை வெளிப்படுத்தியுள்ளனர். நாட்டின் வளங்களை விற்று அதன் மூலமாக வருமானத்தைத் தேடிக் கொள்வதை மட்டுமே இந்த அரசு செய்து வருகின்றது.

இன்று இலங்கைத்தொலைத் தொடர்புநிறுவனத்தின்பங்குகளையும் விற்கும் திட்டத்தை வகுத்து வருகின்றனர் - என்றார்.

கேலிச்சித்திரம்




(நன்றி: டெய்லிமிரர்)

## ஜோன்ஸ்டன் உள்ளிட்ட மூவருக்கு விளக்கமறியல்

கொழும்பு, செப்.4

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோஉள்ளிட்டமூவரைவிசாரணை நிறைவடையும் வரை எதிர்வரும் 11 ஆம் திகதிவரைவிளக்கமறியலில்வைக்குமாறு குருநாகல் மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கூட்டுறவுத்துறையின்முன்னாள்அமைச்சர் ஜோன்ஸ்டன்பெர்ணான்டோ, சதொசவின் முன்னாள்தலைவர்நலின்பெர்னாண்டோ மற்றும்ஜோன்ஸ்டன்பெர்னாண்டோவின் பிரத்தியேக செயலர் மொஹமட் உள்ளிட்டவர்கள் இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 2013 ஆம் ஆண்டு இடம்பெற்ற வடமேல் மாகாண சபைத் தேர்தல் காலத்தில் முன்னாள் அமைச்சர், நிதி மோசடிச் செயற்பாடுகளில் ஈடுபட்டதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டின் அடிப்படையில் அவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

## எதிர்ப்புப் போராட்டம் தேசிய அரசியலில் திருப்புமுனையாகும்

கூட்டு எதிரணி நம்பிக்கை

கொழும்பு, செப். 4

அரசுக்கு எதிராக நாளை இடம்பெறவுள்ள மாபெரும் எதிர்ப்புப் போராட்டத்தின் பெறுபேறுகள் மாகாண சபை தேர்தலில் அரசுக்கு எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என்று கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களாட்சி ரீதியில் உருவாக்கப்பட்ட அரசைப் போராட்டங்களால் வீழ்த்த முடியாது என்று குறிப்பிடும் அரசுக்கு எதிராக நாடுதழுவிய ரீதியில் எவ்வளவு மக்கள் அணிதிரள்வார்கள் என்று காட்டுவதே இந்தப் போராட்டத்தின் நோக்கம். தேசிய அரசு பெயரளவில் மாத்திரமே மக்களாட்சி தொடர்பில் பேசுகின்றது . அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைப் போராட்டங்களின் ஊடாகவே பெறவேண்டியநிலைமைதோற்றம்பெற்றுள்ளது. கடந்தஉள்ளூராட்சி மன்றத்தேர்தலும்பெரும்போராட்டத்தின்மத்தியிலேஇடம்பெற்றது. இதன் தொடர்ச்சியே மாகாண சபைத் தேர்தலிலும்இடம்பெறுகின்றது.

இந்தப்போராட்டத்தில்நடுத்தரமக்களும்துறைசார்நிபுணர்களுமே கலந்து கொள்ளவுள்ளனர். இவர்கள் அனைவரும் 2015ஆம் ஆண்டு அரசின் பொய்யான வாக்குறுதியை நம்பி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியவர்கள் .

அரசு இன்று சுய நினைவின்றிச் செயற்படுகின்றது. மதபோதனைகளும், துறைசார் நிபுணர்களின் சொற்பொழிவுகளும் இடம்பெற்ற அலரிமாளிகைஇன்று களியாட்ட விடுதியாக மாற்றமடைந்துள்ளது. இவ்விடயம் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது . கடந்த அரசுக்கும், தேசிய அரசின் கொள்கைகளுக்கும் கொள்கை வேறுபாடுகள் காணப்படலாம். இருப்பினும் கடந்த அரசு ஒரு போதும் இந்தத் தவறை செய்யவில்லை. இவ்விடயத்துக்குக் கட்டாயம் அரசு மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும்.

போராட்டம் அமைதியான முறையில் இடம்பெறும். மக்களின் ஆதரவைபெற்றுள்ள மகிந்ததரப்பினர் பொதுமக்களுக்கு இடையூறுவிளைவிக்கும் வகையில் செயற்பட மாட்டார்கள்.

இருப்பினும் அரசு குறித்த போராட்டத்தைச் சீர்குலைக்கச் சூழ்ச்சிகளை மேற்கொண்டு, அம்பாந்தோட்டைப் போராட்டத்தை போன்று மாற்றியமைத்தால் அரசு பெரும் எதிர்விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்- என்றார். (31)

## கொழும்பு மாநகரின் முற்றுகை புதிய அத்தியாயத்தை ஆரம்பிக்கும்

கூட்டு எதிர்க்கட்சி நம்பிக்கை

கொழும்பு, செப்.4

அரசுக்கு எதிராக நாளை கூட்டு எதிர்க்கட்சி கொழும்பில் ஏற்பாடு செய்துள்ளமக்கள்எழுச்சிப்பேரணியால் கொழும்பு மாநகர் முற்றுகையிடப்படுவதை அரசால் தடுக்க முடியாது. எனவே அன்றைய தினம் கொழும்பு மாநகரின் முற்றுகைப் போராட்டமானது இலங்கைவரலாற்றில் புதிய அத்தியாயத்தை ஆரம்பிக்கும் என்று கூட்டுஎதிர்க்கட்சிதெரிவித்துள்ளது.

அரசுக்குஎதிரான இந்தப் பேரணி குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ஷெஹான் சேமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுக்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடுசெய்துள்ள மக்கள்எழுச்சிப் பேரணியால் கொழும்பு மாநகரம் முற்றுகையடைவதுஉறுதியாகும். எனினும்பேரணியைத்தடுப்பதற்கு அரசு பல்வேறு சூழ்ச்சிகளை மேற்கொண்டுள்ளதனை அறிய முடிகிறது. இருப்பினும்அச்சூழ்ச்சிகளைத் தகர்த்துக்கொண்டுவெற்றிகரமான முறையில் பேரணியை முன்னெடுப்போம்.

அதனால்தான் பேரணி தொடர்பிலான சில தகவல்களை இரகசியமாகப் பேணிவருகிறோம். அது குறித்து ஊடகங்களுக்கும் இன்னும் அறிவிக்கவில்லை. பேரணி நடைபெறும்இடம்குறித்துப்பலரும் எம்மிடம்வினவுகின்றனர். இருந்த போதிலும் பேரணி நடபெறும் இடத்தை நாளை காலையே அறிவிக்கவுள்ளோம்.

பேரணியில்கலந்துகொள்ளவுள்ளவர்களைத் தடுக்கும் வகையில் பிரதேச ரீதியிலும் அரச தரப்பினர் பல்வேறுஉபாயங்களைமேற்கொண்டுவருகின்றனர். அது குறித்து ஆதரவாளர்கள் அவதானமாக இருப்பதுடன்அவ்வாறான வதந்திகளை நம்பாது திட்டமிட்டது போன்று பேரணியில்கலந்துகொள்ளுமாறுவேண்டுகோள் விடுக்கி றோம். அலுவலகங்களில் பணியாற்றுபவர்கள் பேரணியில் கலந்துகொள்வதனைத்தடுப்பதற்குஅன்றையதினம் சிறப்புவேலைத்திட்டங்களும்மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரசுஅந்தளவுக்குத்தற்போதுஅச்சப்பட்டுள்ளது.

நாம்அமைதியானமுறையிலேயே பேரணியை முன்னெடுப்பதற்குத் திட்டமிட்டுள்ளோம். எனினும்அதில் குண்டர்களைக் களமிறக்கி குழப்புவதற்கான வேலைத்திட்டங்களும் அரசதரப்பில்மேற்கொள்ளப்பட்டுள்ளமை அறியக்கிடைக்கின்றது.

ஆகவே அவ்வாறான சதிமுயற்சிகளைத் தடுப்பதற்கு தொழிற்சங்க ரீதியில் வேலைத்திட்டங்களையும் முன்னெடுத் துள்ளோம்.

வழமையானஅரசுஎதிர்ப்புப்பேரணி போன்று இந்தப்பேரணி அமையப் போவதில்லை. சரித்திரத்தில் இடம் பிடிக்கும் பேரணியாக அமைந்து நாட்டில் மாற்றம் ஏற்படுத்தும். கூட்டாட்சி அரசு மேற்கொள்ளும் மக்களாட்சிவிரோதச்செயற்பாடுகளுக்கு எதிராக மக்கள் பல்வேறு போராட்டங்களை மேற்கொண்டிருந்தனர். எனினும் அதற்கு அரசு செவிசாய்க்காது மக்களாட்சி விரோத செயற்பாடுகளையேதொடர்ந்துமேற்கொண்டு வருகிறது. ஆகவே இம்முறை மக்கள் கொழும்பில் திரள்வது வெறுமனே வந்துபோவதற்கல்ல. முறையானமாற்றத்தைஏற்படுத்துவதற்காகவே-என்றார். (31)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## 'நல்லாட்சி' என்று அழைக்காதீர்கள்

2015ஆம்ஆண்டுஅரசதலைவர்தேர்தலின்போது 'ஆட்சிமாற்றம்' என்ற கோசம் முன்வைக் கப்பட்டது. அந்தக் கோசம் மக்கள் அலையைத் தன்பின்னால்திரளச்செய்தது. மகிந்தராஜபக்சவின் இரும்புக் கரம் அகற்றப்பட்டு, மைத்திரிபால சிறிசேன ஆட்சிப் பீடம் ஏறுவதற்கும் உதவியது அந்தக் கோசம்.

ஆட்சியில் அமர்ந்த மைத்திரி – ரணில் இணை ஆட்சி தங்களின் ஆட்சியை 'நல்லாட்சி' என்று அழைத்துக்கொண்டது. மகிந்த ராஜபக்சவின் காலத்தில்கோலோச்சியிருந்தமக்களாட்சிவிரோதப் போக்கை இல்லாதொழித்து 'நல்லாட்சியை' நடைமுறைப்படுத்துவதாகத் தெரிவித்து இந்தக் கோசத்தைப் பயன்படுத்தினர்.

ஆட்சிப்பீடம்ஏறியசிறிதுகாலத்துக்கு, மகிந்தவின் ஆட்சியைவிடமைத்திரி–ரணில்ஆட்சிசிறப்பானது என்று உணரும் வகையில் அமைந்திருந்தது. எல்லாம்ஒரேகுட்டையில்ஊறியமட்டைகள்தான் என்பதைகாலம்காண்பித்துக்கொண்டிருக்கின்றது.

மகிந்தராஜபக்சவின்ஆட்சிக்காலத்தில்நடந்தேறிய வெள்ளைவான் கடத்தல்கள், கொலைகள், தாக்குதல்கள் தொடர்பில் 'நல்லாட்சி' காலம் தாழ்த்தி கண்துடைப்புக்காக சில விசாரணைகளை ஆரம்பித்தது. மந்த கதியில் அந்த விசாரணைகள் நகர்ந்து கொண்டிருக்கின்றன.

இந்த வழக்குகளில் சந்தேகநபர்களாக அதிகமான பாதுகாப்புத் தரப்பினரே பெயரிடப் பட்டிருக்கின்றனர். அவர்களில் சிலர் கைதாகியிருக்கின்றார்கள். பலர் இன்னமும் வெளியே உலாவுகின்றனர். இந்த வழக்குகள் தொடர்பான விசாரணைகளுக்கு பாதுகாப்புத் தரப்பினர் ஒத்துழைக்கவில்லை என்று நீதிமன்றத்தில் பகிரங்கமாகவே குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அறிக்கையிட்டுள்ளனர். குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கோரும் தகவல்களைப் பாதுகாப்புத் தரப்பினர் வழங்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்ட பின்னரும் அது நடைபெறவில்லை.

முப்படைகளின் தளபதியும் அரச தலைவருமான மைத்திரிபால சிறிசேன, விசாரணைகளுக்குத் தேவையான தகவல்களை விடுவிக்க பாதுகாப்புத் தரப்பினருக்கு பணிக்கவேண்டும். 'நல்லாட்சி' நடத்துவதாக இருந்தால் அதனைச் செய்ய வேண்டும். ஆனால் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவோ, அதற்கு தலைகீழாக பாதுகாப்புத் தரப்பினரின் உள்ளகத் தகவல்களை விசாரணைகளுக்கு வழங்கவேண்டாம் என்று கூறியிருக்கின்றார்.


சில தினங்களுக்கு முன்னர் அவரது இல்லத்தில் நடந்த சந்திப்பிலேயே இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது. அதுவும், மாணவர்கள் கடத்தல் விவகாரத்தில் முக்கிய சந்தேகநபரான நேவி சம்பத் வெளிநாடு தப்பிச் செல்வதற்கு உதவிய குற்றச்சாட்டுக்கு உள்ளாகி கைது உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள முப்படைகளின் பிரதானியான ரவீந்திர விஜேகுணரத்ன முன்னிலையிலேயே மேற்படி பணிப்புரையை மைத்திரி பிறப்பித்துள்ளார்.

மகிந்த ஆட்சிக் காலத்தில் விசாரணைகள் எப்படி மூடி மறைக்கப்பட்டனவோ அதேபோன்றே இந்த ஆட்சிக் காலத்திலும் விசாரணைகளை மூடி மறைக்க ஆட்சித் தரப்புக்கள் முயல்கின்றன.

இனி 'நல்லாட்சி' என்ற கோசத்தை ஆட்சியாளர்கள் முன்வைக்காமல் இருப்பதே நல்லது. ஏனெனில் அந்த சொற்பதத்துக்கு இம்மியளவும் பொருந்தவில்லை. கொழும்பில்தற்போது நடைபெறுகின்ற ஆட்சி.

# விக்னேஸ்வரனின் துரோகம் மன்னிக்கவே முடியாதது


சேரலாதன்



தமிழ்த் தேசிய அரசியலில் தலைமை ஏற்கத் தாம் தயாரென அறிவித்ததன் மூலமாக சி.வி. விக்னேஸ்வரன் நீண்ட நாள்களாகத் தமது உள் மனதில் புதைந்து கிடந்த ஆசையை வெளிப்படுத்திவிட்டார். தமிழ் அரசியல் தலைவர்கள் பெரும்பாலானோர் தமிழர்களின் தலைமைப் பொறுப்பை ஏற்குமாறு அவரிடம் கோரிக்கை விடுக்காத நிலையில், அவர் தமது ஆசை கலந்து விருப்பத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

### கூட்டமைப்பைப் பலவீனப்படுத்துவது முதலமைச்சரது விருப்பம்

அவர் கூட்டமைப்பை பலவீனப்படுத்துவதற்காகவும், அதற்குள் பிளவுகளை ஏற்படுத்தி இறுதியில் அதை அழிப்பதற்காகவும், அந்த அமைப்பினுள் சம்பந்தனின் ஆதரவைப் பெற்று நுழைந்திருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிகின்றது. சம்பந்தனின் சாணக்கியம் தோற்றுப் போனதும் தெரிகின்றது. கொழும்பில் போட்டுவைத்த தேவைக்கு



உதவாத பழைய இரும்பை வடபகுதித் தமிழர்களின் தலைகளில் சம்பந்தன் சுமத்திவிட்டதாக வடக்கு மாகாணசபை உறுப்பினரொருவர் ஒரு சந்தர்ப்பத்தில் சிலேடையாகச் சுட்டிக்காட்டியமை மிகவும் சரியானதுதான் என்பது இப்போதுதான் புரிகின்றது.

கொழும்பைத் தமது வதிவிடமாகக் கொண்டிருந்த இந்த விக்னேஸ்வரன், கொடிய போர் காரணமாகத் தமிழர்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்த போது அது தொடர்பாகச் சிறிதும் அக்கறை காட்டியதில்லை. தாமும் தமது குடும்பமும் என்ற வகையில்தான் அவரது வாழ்வு கழிந்து கொண்டிருந்தது.

### விக்னேஸ்வரனை கூட்டமைப்புக்குள் கொண்டுவந்தமை சம்பந்தனின் தவறு

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், இவரை வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தியதன் மூலமாக இமாலயத் தவற்றைப் புரிந்திருக்கிறார். கூட்டமைப்புக்கு விரோதமான ஒருவரை முன்நிறுத்தியதன் மூலமாக அவர் கூட்டமைப்பின் ஆதரவாளர்களுக்குத் துரோகம் புரிந்துவிட்டார் என்றே கூறவேண்டும். 2010ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போதே விக்னேஸ்வரன் தமது உண்மையான முகத்தைக் காட்டிவிட்டார். கூட்ட மைப்புக்கு எதிரான தமது விரோதத்தை வெளிக்காட்டிவிட்டார். அந்த நாடாளுமன்றத் தேர்தலில் கூட்ட மைப்புக்கு ஆதரவான பரப்புரை எதிலும் விக்னேஸ்வரன் கலந்துகொள்ளாது ஒதுங்கிவிட்டார். 2015ஆம் ஆண்டு இடம்பெற்ற இதே தேர்தலிலும் அவரது நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படவில்லை. இறுதியாக இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் அவர் வெளிப்படையாகவே கூட்டமைப்பை எதிர்த்து நின்றார். கூட்டமைப்புக்கு எதிரானவர்களுடன் உறவைப் பேணிக் கொண்டார்.

தேர்தல் முடிவுகள் கூட்ட மைப்புக்குச் சற்று ஏமாற்றத்தைக் கொடுத்தன. அந்த அமைப்புத் தொடர்பாக மக்களிடம் பரப்பப்பட்ட எதிர்மறையான கருத்துக்களும், கூட்டமைப்புக்குள்ளேயே பிளவுகள் ஏற்பட்டமையும் சிறு சறுக்கல் ஏற்படுவதற்குக் காரணமாகிவிட்டன.

ஆனாலும் வடக்குக் கிழக்கில் உள்ள அநேகமான உள்ளூராட்சிச் சபைகளில் ஆட்சியமைப்பதற்கு கூட்டமைப்பினால் முடிந்தது. கூட்டமைப்புக்கு ஏற்பட்ட சறுக்கல் தொடர்பாக விக்னேஸ்வரன் மகிழ்ச்சியடையவே செய்தார். இதை அவர் பகிரங்கமாகத் தெரிவிக்கவும் தவறவில்லை.

ஓர் அமைப்பினுள் இருந்து கொண்டு அது தொடர்பாகத் தவறான தகவல்களை வெளியிட்டுவரும் விக்னேஸ்வரனை ஒரு நேர்மையானவரென எவ்வாறு கூறமுடியும்? கூட இருந்துகொண்டே குழி பறிக்கின்ற அவரது செயல் அவர் முன்னர் வகித்த பதவிக்கு இழுக்கையே தேடித்தரும். எங்கேயோ கிடந்த தம்மை கூட்டமைப்பின் தலைவர் அழைத்து வந்து உயரிய ஓர் இடத்தில் அமர்த்தியதை இவர் எவ்வாறு மறந்தார் என்பது தெரியவில்லை. கூட்டமைப்பை அழிப்பதற்கு இவர் மேற்கொள்கின்ற நடவடிக்கைகள் சம்பந்தனுக்குச் செய்கின்ற மிகப் பெரிய துரோகமாகவே கணிக்கப்படும். இவர் தற்போது தம்மை ஆதரித்து நிற்பவர்களுக்கும் துரோகம் புரிய மாட்டாரென எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

### தமிழ்மக்கள் பேரவை அரசியல் கலவாமை என்ற தனது கொள்கையில் இருந்து மாறுபட்டு நிற்கிறது

இவர் இணைத் தலைவர் பதவியை வகிக்கும் தமிழ் மக்கள் பேரவை அரசியல் கலவாமை என்ற தனது அடிப்படைக் கொள்கையையே இழந்து நிற்கின்றது. கூட்டமைப்புக்கு எதிரானவர்களின் அரசியல் கூடாரமாகவே அது மாறிவிட்டது. விக்னேஸ்வரன் மூலமாகத் தமது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு பேரவைய்யில் அங்கம் வகிக்கின்ற அரசியல்வாதிகள் சிலர் விரும்புகின்றனர்.

ஆவேசமான உரைகள் மூலமாக விக்னேஸ்வரன் தம்மை அரசியலில் நிலைநிறுத்திக்கொள்ளப் பார்க்கின்றார். இதன் காரணமாகவே தெற்கில் அவரொரு இனவாதியாகக் கணிக்கப்படுகின்றார். இனிமேல் இவர் எதைக் கூறினாலும் இனவாதமாகவே கணிக்கப்படுமென்பதை மறுக்க முடியாது.

விக்னேஸ்வரன் கூட்டமைப்புக்கு புரிகின்ற துரோகத்தை எந்த வகையிலும் மன்னிக்க முடியாது. அவர் மனச்சாட்சி உள்ள ஒருவராக இருந்திருந்தால், கூட்டமைப்பிலிருந்து உடனடியாக விலகியிருக்க வேண்டும். இதைவிடுத்து அந்த அமைப்பினுள் இருந்து கொண்டே, அதைச் சிதைக்கவும், அழிக்கவும் முயல்வது மிகப்பெரிய துரோமாகும். இதை எந்த வகையிலும் மன்னிக்கவே முடியாது.

# வள்ளுவர் கோட்டம் அமைக்கப்படுவதற்கு கருணாநிதியின் பங்கு மிகப் பெரியது

தேவநாயகம் தேவானந்த்




திருவள்ளுவரைத் தனதுஅரசியலுக்காகமட்டுமேகலைஞர் கருணாநிதி தூக்கிவைத்துகொண்டாடவில்லை, மாறாகஅவர்திருவள்ளுவரைஉண்மையில் நேசித்தார்,போற்றினார். தமிழ் மீது கொண்டபற்றால்,35 ஆண்டுகளுக்கு முன்பே, பரபரப்பான சென்னைமாநகரில் திருவள்ளுர் கோட்டத்தை உருவாக்கினார்.

**திருவள்ளுவரது பிறப்பு மற்றும் வாழ்க்கை வரலாற்று விவரங்கள் எதுவும் கிடைத்ததில்லை**

திருவள்ளுவர்பற்றியதகவல்கள் எவையும் தெளிவாககிடைக்கவில்லை. அவரது பிறப்பு,வாழ்வு, வரலாற்றுகுறிப்புகள் கிடைக்கவில்லை. ஆனால்,அவரது எழுத்துஅவரைஉலகம் முழுவதும் தெரியப்படுத்தியது.ஒன்றரைவரியில்1330 குறள்கள் எழுதியவர். ஒவ்வொரு குறளும் பலநீதிகளை சொல்லுகின்றன. மக்களுக்கு,ஆட்சிசெய்யும் அரசனுக்குஎன

## தமிழ்த் தலைவன் மு.கருணாநிதி-25

எல்லாவகையினருக்கும் ஆலோசனை தருகிறது.வேதாகமத்துக்கு அடுத்தபடியாகஅதிகமொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட நூல் திருக்குறளாகும்.

திருக்குறளில் உள்ள சிறப்பம்சங்களில் ஒன்று ஓரிடத்திலேனும் கடவுள் பெயர் குறிப்பிடப்படவில்லை. திருவள்ளுவர் சமணமதத்தைசேர்ந்தவர்,கடவுள் நம்பிக்கை அற்றவர் என்கின்றனர் ஒருசாரார்,மற்றொருசாரார், திருவள்ளுவர் சைவசமயத்தைசேர்ந்தவர் என்கிறார்கள்.கல்தோன்றிமண்தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்த குடியான தமிழ்க் குடியின் வரலாற்றை திருவள்ளுவர் காலத்திலிருந்து சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.1923ஆம் ஆண்டு மறை மலையடிகளார் தலைமையில் பச்சையப்பன்கல்லூரியில்,தமிழறிஞர்கள் ஒன்றுகூடி தமிழர் வரலாற்றுத் தொன்மையைகண்டறிய முற்பட்டனர். இலங்கியங்கள்,வரலாற்றுஆவணங்களை ஆராய்ந்து இறுதியில் கிறிஸ்து பிறப்பதற்கு 31ஆண்டுகளுக்கு முன்பு திருவள்ளுவர் பிறந்தார் என முடிவு செய்தார்கள்.அதனை அறிவித்தார்கள். அந்த அறிவிப்பை அடியொற்றி 1972ஆம் ஆண்டில் கலைஞர் முதல்வராக இருந்த போது தமிழக அரசு திருவள்ளுர்ஆண்டை அரசு உத்தரவுகளில் கடைபிடிக்க வேண்டும் என சட்டம் இயற்றி நடைமுறைப் படுத்தியது.



**கலைஞர் கருணாநிதியின் முயற்சியால் திருவள்ளுவருக்கு உருவம் கொடுக்கப்பட்டது**

திருவள்ளுவரது உருவம் தெரியாது. ஆனால்,கலைஞர் கருணாநிதியின் முயற்சியால் திருவள்ளுவருக்கு உருவம் கொடுக்கப்பட்டது எனலாம். அத்தோடு உலகப் பொது மறையான திருக்குறளை தந்தவள்ளுவன் பெயரில் ஒரு பிரமாண்டமாக மண்டபத்தை சென்னையில் அமைத்தார். சென்னை, கோடம்பாக்கத்தில் இடம் தேர்வு செய்து, வள்ளுவர் கோட்டம் அமைத்தார்.

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய தலைமைச் சிற்பியின் வழி வந்தவர்கள் எனப்படும் கணபதி சிற்பியால் கலைநயத்தோடு வள்ளுவர் கோட்டம் உருவானது. இது காந்தார கலைவடிவில் அமைக்கப்பட்டது. வள்ளுவர்கோட்டத்தின் நுழைவாயிலில் திருக்குறளின் முதல் செய்யுளானஅகரமுதலஎழுத்தெல்லாம்..... என்பது பதியப்பட்டிருக்கிறது.

**ஆசியாவில் உள்ள பெரிய அரங்குகளில் ஒன்றாக வள்ளுவர் கோட்டம் திகழ்கிறது**

வள்ளுவர் கோட்டம் ஆசியாவில் உள்ள பெரிய அரங்குகளில் ஒன்றாகக் கணிக்கப்பட்டுள்ளது.220 அடி நீளத்தில், 100 அடிஅகலத்தில் பிரமாண்டமான இந்த அரங்கத்தின் நடுவே எங்கும் தூண்கள் இருக்காது. ஒரே நேரத்தில் 4 ஆயிரம் பார்வையாளர்கள் அமர்ந்திருக்க முடியும்.இந்தப் பிரமாண்டமான மண்டபத்தின் மேல்மையத்தில் உள்ள மாடத்தை குறள் மாடம் என்று குறிப்பிடுகிறார்கள். 1330 திருக்குறள்களும் பளிங்குக் கல்லில் செதுக்கி வைக்கப்பட்டுள்ளன. திருவள்ளுவர் பற்றி 5 புலவர்கள் பாடிய திருவள்ளுவ மாலை பாடல்களும் செதுக்கி வைக்கப்பட்டுள்ளன.வள்ளுவர் கோட்டத்தில் பலரையும்கவர்வது திருவாரூர்க் கோயில் தேரைப் போன்றுகட்டப்பட்டுள்ள சிற்பத் தேர் அமைப்பு ஆகும். இதன் அடிப்பகுதிபளிங்குக் கல்லால் ஆனது. தேரின் ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொன்றும் தனிக்கல்லில் செதுக்கப்பட்ட நான்கு பெரியசில்லுகள் காணப்படுகின்றன. இந்தத் தேரில் திருவள்ளுவரின் சிலை வைக்கப்பட்டுள்ளது. எண்கோண வடிவில் அமைந்துள்ள இக் கருவறை 40 அடி (12 மீட்டர்) அகலமானது. இந்தக் கருவறை வாயிலில் திராவிடக் கட்டிடக்கலைப் பாணியில் அமைந்த தூண்கள் அழகுற அமைந்துள்ளன.

வள்ளுவர் கோட்டத் திறப்பு விழா ஏற்பாடுகள் செய்யப்பட்டபோது, கருணாநிதியின் ஆட்சி இந்திராகாந்தி அரசால் கலைக்கப்பட்டது. அதனால் வள்ளுவர் கோட்டத்தைக் கட்டுவித்த கலைஞர் அதன் திறப்புவிழாவுக்கு அழைக்கப்படவில்லை.

அப்போதைய குடியரசுத் தலைவர் பக்ருதின் அலி அகமத் அதனைத் திறந்து வைத்தார். அப்போது 'முதல்வராகத் தான் வள்ளுவர் கோட்டத்துக்குள் வருவேன்' என்று கலைஞர் சபதம் எடுத்தார். அதன் படியேமீண்டும் 1989ஆம் ஆண்டில் முதல்வாரன கருணாநிதி , பதவியேற்பு விழாவை வள்ளுவர் கோட்டத்தில் நடத்தித் தனது சபதத்தை நிறைவு செய்தார். வள்ளுவர்கோட்டம் இன்றுதமிழர்களின் நினைவுச் சின்னமாகப் போற்றப்படுகிறது. *(தொடரும்)*

## ஆசிரியருக்கான கடிதம்

### வழிபாட்டுக்கு இடையூறு ஏற்படுத்தாது இருப்போம்

சுன்னாகம் நகரில் கதிரமலையில் எழுந்தருளி உக்கிர ராஜசிங்க மன்னனால் வழிபடப்பட்டதான வரலாறு கொண்ட சுன்னாகம் ஸ்ரீகதிரமலைச்சிவன் கோயில், சைவமும் தமிழும் சிறக்கும் வகையில் அந்தணப் பெருந்தகைகளால் சிறப்பாக வழிநடாத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது. கோயிலின் மேற்கு வீதி, தெற்குவீதி என்பவை வர்த்தகப் பெருமக்களது வாகனங்கள் பகல், இரவு முழுவதும் நிறுத்தும் இடமாகவும், சுத்திகரிக்கும் இடமாகவும் மாறிக்கொண்டிருக்கிறது. போதாக்குறைக்கு தென்பகுதி வர்த்தகர்கள், சாரதிகள் வாகனத்துக்குள் இருந்து புகைப்பொருள்கள் புகைப்பதும், மது அருந்துவதும், கெட்ட வார்த்தைகள் பேசுவதுமாக புனித பூமியான கதிரமலைச்சிவன் வீதியின் புனிதத்தை கெடுக்கும் வகையில் செயற்படுகின்றனர். அத்தோடு மாலைவேளைகளில் இளைஞர்கள் கூடி பொழுது போக்கும் இடமாகவும் அந்த வீதிகள் மாறிவருகின்றன. இதனால் சிவனடியார்கள், குறிப்பாகப் பெண்கள் வெளிவீதி சுற்றிக் கும்பிடுவதில் பல அசௌகரியங்களை எதிர்நோக்குகிறார்கள். எனவே சம்பந்தப்பட்டவர்கள் இப்புனித புண்ணிய சிவத்தலத்தை சிவமணம் கமழும் சிவபூமியாக மாற்ற ஒத்துழைப்பார்களாக.

*சிவோதயன், சுன்னாகம்*

### வீதிப்புனரமைப்பு நற்பயன் நல்க வேண்டும்

மிருசுவில் பழைய வாய்க்கால் சந்தியில் இருந்து மன்னன் குறிச்சி வரையான வீதிச் சீர்கேடு குறித்து உதயன் ஆசிரியருக்கான கடிதம் பகுதியில் பிரசுரமாகியிருந்தது. தற்போது குறித்த வீதியின் புனரமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட அளவு தூரம் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முன்னர் இரு வாகனங்கள் சிரமமின்றி ஒன்றையொன்று விலத்திச் செல்ல முடிந்த நிலையில், தற்போதைய புனரமைப்பில் வீதியின் அகலம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எதிரே வேறுவாகனம் வந்தால் விலகி வழிவிட முடியாமல் பின்னகர வேண்டியுள்ளது. தார் ஊற்றி அரை அடி உயரம் உயர்த்தி இரு கரைகளுக்கும் சீமெந்து பூசப்படுகிறது. முழுமையாக புனரமைத்து முடியு முன்னர் பாதையின் கரைப்பகுதிகளை செங்குத்தாக இல்லாமல் சாய்வாக அமைப்பது பயன்தரும். அனுபவமிக்க பொறியியலாளர்கள் எப்படி இதை அனுமதித்தார்கள் என்பது புரியவில்லை. வேறு உள்ளூர் வீதிகள் சில நல்ல முறையில் அகலமாகவும் பஸ் பயணிக்காத வீதிகள் கூட காப்பெற் முறையில் போடப்படும் நிலையில், பஸ் பயணிக்கும், விவசாய உழவு இயந்திரங்கள் பயணிக்கும், வீதியை பொறுப்பற்ற முறையில் அமைப்பது நியாயமா?

*நலன் விரும்பி*

# ரொஹிங்யர்கள் விவகாரத்தை வெள
# ரொயிட்டர்ஸ் செய்தியாளர்களுக்கு ஏ

நைபிட்டோ, செப். 4
ரொஹிங்யர்களுக்கு எதிராக மியன்மார் இராணுவம் மேற்கொண்ட இனவழிப்பு நடவடிக்கைகளை வெளிப்படுத்தியமைக்காக பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸைச் சேர்ந்த இரண்டு செய்தியாளர்களுக்கு தலா 7 வருடங்கள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பிட்டது மியன்மார் நீதிமன்றம்.


பௌத்த நாடான மியன்மாரின் ரக்கினே மாகாணத்தில் ரொஹிங்ய முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வசித்து வந்தனர். பல தசாப்தங்களாக மியன்மாரில் வசிக்கின்ற போதிலும் அவர்களுக்கு குடியுரிமை வழங்க அந்த நாடு மறுத்து வருகிறது. ரொஹிங்யர்களின் அடிப்படை உரிமைகளும் அங்கு மறுக்கப்பட்டன. இதனால் ரொஹிங்யர்களின் விடுதலையை வலியுறுத்தி அங்கு ஆயுதக் குழுவொன்று தோற்றம்பெற்றது. அந்த ஆயுதக் குழுவை அடக்குகிறோம் என்று கூறிக்கொண்டு மியன்மார் அரசு முன்னெடுத்த அனைத்து நடவடிக்கைகளும் ரொஹிங்யப் பொதுமக்களுக்கு எதிரான நடவடிக்கைகளாகத்தான் இருந்தன. கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் ரொஹிங்யர்களுக்கு எதிரான தாக்குதல்கள் உச்சம் பெற்றிருந்தன. அவ்வாறாக ரொஹிங்யர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸின் செய்தியாளர்களான வோ லோன் (வயது 32). யாவ் சோ ஓ (வயது - 28) ஆகியோர் வெளிப்படுத்தியிருந்தனர். இவர்கள் எடுத்த ஒளிப்படங்கள் உலகெங்கும் வைரலாகப் பரவின. ஐ.நா. சபை உள்ளிட்ட பன்னாட்டுத் தொண்டு நிறுவனங்களின் கவனத்தை வெகுவாகவே ஈர்த்தன. 'மியன்மார் அரசு ரொஹிங்யர்களுக்கு எதிராக இனவழிப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது' என்ற முடிவுக்கு வருவதற்கு ரொயிட்டர்ஸ் செய்தியாளர்களின் பங்கு மிகமிக அதிகம். இதையடுத்து அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தது மியன்மார் அரசு. இந்த வழக்கின் விசாரணைகள் சுமார் 10 மாதங்களாக இடம்பெற்றன. முடிவில் ரொயிட்டர்ஸ் செய்தியாளர்கள் குற்றவாளிகள் என்று அறிவிக்கப்பட்டனர். அவர்களுக்குத் தலா 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

**கண்டனப் பேரணி**

ரொஹிங்யர்களின் விவகாரத்தை வெளிப்படுத்தியமைக்காக செய்தியளார் இருவருக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை பன்னாட்டு சமூகத்தில் பல அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. யாங்கூன் நகரில் எதிர்வரும் சனிக்கிழமை மிகப்பெரும் கண்டனப் பேரணியொன்று நடத்தப்படவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பன்னாட்டு ஊடகங்களும் இந்த விடயத்தைப் பூதாகரமாக்கி வருகின்றன. ஐ.நா. சபை உள்ளிட்ட பன்னாட்டு அமைப்புக்கள் மியன்மார் அரசுக்கு எதிராக அணி திரள வாய்ப்புண்டு.

(ம)

## ரொஹிங்யர்களுக்காக...











ரொஹிங்யர்களுக்கு எதிராக மியன்மார் அரசு மேற்கொண்ட இனவழிப்பு நடவடிக்கையை வெளிப்படுத்திய செய்தியாளர்கள் இருவருக்குத் தலா 7 வருடங்கள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கப்பட்டது. செய்தியாளர்கள் இருவரும் தமக்கு எதிரான வழக்கை எதிர்கொண்ட ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் ஒளிப்படக் கோர்வையாக வெளியிட்டது. (ம)

# பிரேசிலின் ஆ
# தீயில் எரிந்து

பிரேசிலியா, செப். 4
பிரேசில் நாட்டில் உள்ள 200 ஆண்டுகள் பழமையான தேசிய அருங்காட்சியகத்தில் நேற்றுமுன்தினம் தீ விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் பல லட்சம் மதிப்பிலான பொருள்கள் சேதமடைந்தன. "பிரேசிலின் வரலாற்று ஆவணங்கள் அழிவுண்டன" என்று பிரேசில் தேசியத் தொலைக்காட்சி தெரிவித்தது.

பிரேசில் நாட்டின் ரியோ டி ஜெனீரோ நகரில் உள்ள நாட்டின் முதன்மையான அருங்காட்சியகத்திலேயே இந்த தீ விபத்து ஏற்பட்டது. பிரேசில் நாட்டின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பொருள்கள், எகிப்திய கலைப்பொருள்கள் உள்ளிட்ட பிறநாடுகளின் கலைப்பொருள்கள் என 2 கோடிக்கும் அதிகமான பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் பெரும்பாலானவை அழிவடைந்தன.

பண்டைய காலத்தில் போர்த்துக்கேய அரச குடும்பத்தின் மாளிகையாக இருந்த இந்த அருங்காட்சிகத்தின் 200ஆவது ஆண்டு நிறைவு விழா இந்த ஆண்டு கொண்டாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)





# வெளிப்படுத்தியமையால் ஏழு வருடங்கள் சிறை


ர்கள்
க்குத்

க்காக
டனை
மலை
சனிக்
துப்பட
கங்க
ஐ.நா.
ர் அர

(ம)



# ஆவணங்கள் து அழிந்தன!!



## 38,000 பன்றிகள் சீனாவில் கொலை


பீஜிங், செப். 4

சீனாவில் பன்றிக் காய்ச்சல் மிக வேகமாகப் பரவி வருவதையடுத்து சுமார் 38 ஆயிரம் பன்றிகள்- நேற்றுமுன்தினம் கொன்று குவிக்கப்பட்டன.

ஆபிரிக்கப் பன்றிக்காய்ச்சல் என்னும்கொடியவகைதொற்று நோய் சீனாவில் சமீபத்தில் இனங்காணப்பட்டது. பன்றிகள் மூலம் மனிதர்களுக்குப் பரவக்கூடியது இந்த நோய். இதனால், நோய் பாதித்துள்ள மாகாணங்களில் இருந்து இறைச்சிக்காகப் பன்றிகளை பிறபகுதிகளுக்குக் கொண்டு செல்ல சுகாதாரத்துறை தடைவிதித்துள்ளது. பன்றி இறைச்சி விற்பனை செய்யும் கடைகளும் மூடப்பட்டுள்ளன. பன்றிகள் மூலமாக வேகமாகப் பரவும் இந்த நோய்த்தொற்றைத் தடுக்கும் வகையில் லியாவ்னிங், ஹேனான், ஜியான்சு மற்றும் அன்ஹுய் மாகாணங்களில் சுமார் 38 ஆயிரம் பன்றிகள் நேற்றுமுன்தினம் மட்டும் கொன்று புதைக்கப்பட்டன.



## லிபியாவில் சிறையை உடைத்து நானூறு கைதிகள் தப்பியோட்டம்



திரிபோலி, செப். 4

லிபியாவில்சிறையொன்றில் ஆயுதக் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி சிறையை உடைத்து 400 கைதிகள் தப்பியோடினர்.

அப்பன் ஜாரா என்ற சிறையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. ஆயுதக் குழுக்கள் இரண்டுக்கு இடையில் ஏற்பட்ட மோதலால் சிறையின் ஒருபகுதி சேதமானது என்றும், இதைப் பயன்படுத்தி ஏனைய பகுதிகளையும் உடைத்துவிட்டு 400 கைதிகள் தப்பிச் சென்றனர் என்றும் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

தப்பியோடி கைதிகளைத் தேடும் பணிகள் தற்போது துரிதப்ப டுத்தப்பட்டுள்ளன. அவர்கள் மீது மேலும் சில வழக்குகள் தொடுப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பணியில் ஏராளமான பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ம)



## தொண்டர்களின் எழுச்சி விரைவில் தெரியவருமாம்



சென்னை, செப். 4

தி.மு. கழகத்தின் முன்னாள் தலைவரான மறைந்த கருணாநிதியின் மகன் அழகிரி, கட்சியில் தனது பலத்தை நிரூபிப்பதற்காக பேரணியொன்றை நாளை நடத்தவுள்ள நிலையில், “பேரணியைத் தொடர்ந்து தொண்டர்களின் எழுச்சி அனைவருக்கும் தெரியவரும்" என்று அவர் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

மதுரையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு கருத்துரைத்தார் அவர்.

“திட்டமிட்டபடி எதிர்வரும் 5ஆம் திகதி பேரணி நடைபெறும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. பேரணியைத் தொடர்ந்து அழகிரியின் பலம் என்ன என்பதும் தி.மு. கழகத்தில் என்னைச் சேர்க்க வேண்டியதன் அவசியம் என்ன என்பதும் அனைவருக்கும் தெரியவரும்" என்று அழகிரி மேலும் தெரிவித்தார்.

## ஆப்கானில் ‘ஹெலி’ விபத்தில் 12 சிப்பாய்கள் உயிரிழந்தனர்

காபூல், செப். 4

ஆப்கானிஸ்தானின் பால்க் பகுதியில் உலங்குவானூர்தியொன்று நேற்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த பன்னிருசிப்பாய்கள் உயிரிழந்தனர்.



14 பேருடன் பயணித்த உலங்குவானூர்தியே அவ்வாறு விபத்துக்கு உள்ளானது. உயிரிழந்தவர்களைத் தவிர ஏனைய இருவரும் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். (ம)



# ரஜினியின் படத்தில் ஜோக்கர் பட நாயகன்

கார்த்திக் சுப்பராஜ் இயக்கத்தில் ரஜினிகாந்த், விஜய் சேதுபதி, பாபி சிம்ஹா, திரிஷா உள்ளிட்டோர் நடித்து வரும் படம் உருவாகி வருகிறது. ரஜினியுடன் முதல் முறையாக இணையும் இந்த நட்சத்திரங்களின் வரிசையில், 'ஜோக்கர்' பட நாயகனான குரு சோமசுந்தரமும் இணைந்துள்ளார். இன்னும் பெயரிடப்படாத இந்தப் படம், அடுத்த ஆண்டு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வாழ்க்கையில எதுவும்
மாறலாம்

எப்ப வேணும்னாலும்
மாறலாம்

ஆனால்

நாம் எப்பவும் எந்த
சூழ்நிலையிலும் மாறக் கூடாது

எம்மை மாற்ற விடவும் கூடாது.





இந்த உலகம் எல்லாவற்றையும் அளவற்றுக் கற்றுக் கொடுகின்றது புரிதலைத் தவிர...

அத்தனை வழிபாட்டையும் நிறைவேறினால் இறைவனுக்கும் மதிப்பிருக்காது;


நம்பிக்கை இருப்பவர்களிடம் ஒரு நாளும் பணம் இருப்பதில்லை;

எல்லோரும் தலைவராயிருக்கும் நாட்டில் சட்டங்கள் வெறும் சம்பிர்தாயம் மட்டுமே...

நாம் பொய்களுக்கும், சுயத்துக்கும் கொடி
பிடிக்கின்றோம் நீதியோ அரைக்கம்பத்தில்...
நகைக்கவோ ? அழவோ முடியவில்லை
உலகம் நாடகக்காரர்களையே
தூக்கிச் சுமக்கிறது....
இது என்ன பூமி ?
எங்கே போனது சாமி ?






தோல்வி வருமாயின் ஏற்றுக்கொள், அதிலிருந்து கற்றுக்கொள்.



# இன்றைய நாள்

**மேடம்:** மாறுபட்ட கருத்து உள்ளவரிடம் விலகுவது நல்லது. தொழிலில் உற்பத்தி விற்பனை சராசரி அளவில் இருக்கும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனம் பின்பற்றுவர்.

**இடபம்:** பேச்சு, செயலில் அறிவுத்திறன் மேம்படும். எதிர்ப்பாளர் விலகிச் செல்வர். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். கூடுதல் பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்:** திட்டமிட்ட பணிகளில் தாமதம் உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாப்பது நல்லது. சுமாரான அளவில் பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** அன்றாடப் பணிகளை ஆர்வமுடன் மேற்கொள்வீர்கள். தொழில், வியாபாரம் செழித்து புதிய இலக்கை அடைவீர்கள். உபரி பண வருமானம் கிடைக்கும். அரசியல்வாதிகள் பதவி பெற அனுகூலம் உண்டாகும்.

**சிங்கம்:** தடைகளை முறியடித்து பணிகளை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய இலக்கை எட்டுவீர்கள். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும்.

**கன்னி:**எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் இலக்கை அடைவீர்கள். இலாபம் உயரும். பணியாளர்கள் செல்வாக்குடன் திகழ்வர். பெண்களுக்கு பிள்ளைகளின் வழியில் செலவு அதிகரிக்கும்.

**துலாம்:** திர்கால நலனில் கூடுதல் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி அதிகரிக்கும். இலாபம் சீராக இருக்கும். பெண்கள் குடும்பத் தேவைக்காக கடன் வாங்க நேரிடலாம்.

**விருச்சிகம்:** புத்துணர்ச்சியுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி நிலை திருப்திகரமாக இருக்கும். நிலுவைப் பணம் வசூலாகும்.

**தனுசு:** குடும்பத்தினர்கள் உதவிகரமாக நடந்து கொள்வர். தொழில், வியாபாரம் செழித்து வளர புதிய உத்திகளைப் பயன்படுத்துவீர்கள். ஆதாயம் அதிகரிக்கும்.

**மகரம்:** பேசுவதில் நிதானம் பின்பற்ற வேண்டும். தொழில், வியாபார நடைமுறை சுமாரான அளவில் இருக்கும். திடீர் செலவால் சேமிப்பு கரையும்.

**கும்பம்:**கவனக்குறைவால் சிரமத்திற்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் மிதமான பணவரவு கிடைக்கும். தெய்வ வழிபாடு நன்மையளிக்கும்.

**மீனம்:** தாயின் அன்பும் ஆசியும் பலமாக கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி நிறைவேறும். சேமிக்கும் விதத்தில் இலாபம் வரும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

## நாளை

**05.09.2018**

புதன்கிழமை

ஆவணி 20

திதி: தசமி பி.ப. 11.43 வரை
நட்சத்திரம்: திருவாதிரை பி.ப. 2.58 வரை
சுபநேரம்: 04.35 – 06.05 வரை
ராகுகாலம்: 12.05– 01.35 வரை

# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | | | 2 | | | 5 | 6 |
| | | 6 | | 7 | 8 | | 9 | 2 |
| 1 | | 2 | | | | | | |
| | | | | | | | | 9 |
| 5 | 2 | | | 6 | | | 4 | 3 |
| 6 | | | 3 | | | | | |
| 2 | | | | | | | | 1 |
| 4 | 1 | | 9 | 3 | | | | |
| 8 | 6 | | | 5 | | | 3 | |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 9 | 8 | 7 | 4 | 1 | 6 | 3 | 5 |
| 7 | 3 | 6 | 9 | 5 | 8 | 4 | 1 | 2 |
| 1 | 5 | 4 | 6 | 3 | 2 | 8 | 7 | 9 |
| 9 | 7 | 5 | 4 | 2 | 3 | 1 | 6 | 8 |
| 8 | 1 | 2 | 5 | 6 | 7 | 9 | 4 | 3 |
| 4 | 6 | 3 | 8 | 1 | 9 | 5 | 2 | 7 |
| 6 | 8 | 7 | 2 | 9 | 4 | 3 | 5 | 1 |
| 5 | 2 | 1 | 3 | 8 | 6 | 7 | 9 | 4 |
| 3 | 4 | 9 | 1 | 7 | 5 | 2 | 8 | 6 |



## வரலாற்றுக் கதை


ஒரு காலத்தில் இலங்கையின் வட திசையை யாழ்ப்பாணன் /யாழ்பாடி (செங்கடநகர்)உக்கிர சிங்கனின் மகன் வாலசிங்கன் அரசாண்டு வந்தான். கொடைச் சிறப்பு மிக்க அவனைப் பலரும் நாடிவந்து பொருள் பெற்றுச் சென்றனர். பல்வேறு புலவர்களும் அவனைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்றுச் சென்றனர். அவன் புகழைக் கேள்வியுற்ற பலரும் தென் இந்தியாவின் சோழ நாடு முதலாக இருந்து வருகை தந்தனர்.

அக்காலத்தில் இரண்டு கண்களும் குருடான புலவர் சோழ நாட்டில் இருந்து மிகுந்த சிரமத்துடன் செங்கடக நகர் வந்து வாலசிங்கனைச் சந்திக்க முயன்றார். அவர் அந்தகனாக இருந்த படியினால் மன்னனைக் காண்பதற்கு வாயிற் காவலர்கள் விடவில்லை. இதனால் வருத்தமுற்ற புலவர் மாளிகைக்கு வெளியே நின்றவாறு தன்நிலையை எண்ணி வருந்தி யாழ் இசைத்துப் பாடினார். அரண்மனை மேல்மாடத்தில் உலவிக்கொண்டிருந்த மன்னனுக்கு அந்த ஏழைப் புலவனின் யாழ் ஒலி கேட்டது. இரக்கமுற்ற மன்னர் அவரை உடனே அழைத்து வரக் கட்டளையிட்டான். உடனே மன்னன் அந்த அந்தகனான அந்தப் புலவருக்கு எல்லா உபசாரமும் செய்து மகிழ்வித்தான். அரசனின் உபசாரங்களால் மகிழ்வடைந்த அந்தப் புலவர் மன்னன் வாலசிங்கனைப் புகழ்ந்து பிரபந்தம் ஒன்றினை இயற்றியது மட்டும் அல்லாது யாழ். இசைத்து அந்த பிரபந்தத்தினைப் பாடினார். அவரது பாடலில் பெரிதும் மகிழ்வுற்ற மன்னன் அப்புலவருக்கு வடதிசையில் மணற்றிடைப் பிரதேசம் ஒன்றினைப் பரிசாக வழங்கினான். அந்தப்பிரதேசம் அன்று முதல் யாழ்ப்பாணம் என்றும். அந்தப் புலவர் யாழ்பாடி என்றும் அழைக்கப்படலாயினர்.


# பலமும் பலவீனமும்

ஓடைக்கரையில் இருந்த பொந்தில் ஆமை ஒன்று வசித்து வந்தது. அதற்குப் பக்கத்தில் உள்ள புற்றில் நாகமொன்றும் குடியிருந்தது. ஆமையும் நாகமும் நண்பர்கள். இரண்டும் சேர்ந்தே இரைதேடப்போவதும் சேர்ந்தே இருப்பிடத்துக்கு திரும்புவதுமாக இருந்தன. அன்று காலை ஆமையும் நாகமும் ஓடைக்கரை புல்வெளியில் இரைதேடிக்கொண்டிருந்தன. அப்போது மனிதக் காலடி ஓசை கேட்டுத் திரும்பிப் பார்த்தது ஆமை. ஒரு மனிதன் கையில் கம்புடன் வந்துகொண்டிருப்பதைப் பார்த்த ஆமை நாகத்திடம் "ஆபத்து. வேகமாக ஓடி மறைந்து கொள்"என்றது. 'ஏன்'என்று கேட்டது நாகம். "அதோ கம்புடன் வந்துகொண்டிருக்கிறார் ஒருவர். அவர் நம்மைப் பார்த்தால் அடித்துக்கொன்று விடுவார்"என்றது ஆமை.

அவருக்கு நீ வேண்டுமானால் பயப்படலாம். நான் பயப்பட மாட்டேன் என் பல்லில் கொடிய நஞ்சு இருக்கின்றது. நான் கடித்தால் அவருக்கு இறப்பு உறுதி.அதனால் அவர்தான் என்னைப் பார்த்து பயந்து ஓடவேண்டும்" என்றது நாகம். காலடி ஓசை அருகில் கேட்டது. ஆமை தனது கால்களையும் கழுத்தையும் உள்ளே இழுத்துக்கொண்டு அசையாமல் கிடந்தது. அசைவு இல்லாததால் அந்த மனிதரின் பார்வை அதன் மீது பதியவில்லை. பெரிய இலைச் சருகு என்று நினைத்துவிட்டார். அதனால் ஆமை கிடந்த இடத்தைக் கடந்துபோய்க்கொண்டிருந்தார். மெதுவாக



கழுத்தை வெளியே நீட்டிப்பார்த்தது ஆமை. அருகில் வந்து விட்ட அந்த மனிதரைப் பார்த்த நாகம் சீறிக்கொண்டே தலையை உயர்த்தி படத்தை விரித்தது. அதைப்பார்த்ததும் சட்டென்று கையில் இருந்த கம்பால் நாகத்தை அடித்தார். அந்த அடி நாகத்தின் உடம்பில் பலமாக விழுந்தது. "ஐயோ"என்று அலறிக்கொண்டு கோரைப் புற்களுக்கு இடையில் புகுந்து ஊர்ந்து போனது நாகம். மனிதரும் நாகம் போன திசையில் புற்களை விலக்கிப் பார்த்தபடியே சென்றார். அடிபட்ட நாகம் தப்பித்தால் போதும் என்று புதருக்குள் ஓடி ஒளிந்துகொண்டது. பாம்பைத் தேடி அலுத்த அவர் திரும்பிச் சென்று விட்டார். நாகத்தைத் தேடி வந்தது ஆமை. நாகத்தின் காயம்பட்ட பகுதியைப் பார்த்தது. "நல்லவேளை, தப்பிவிட்டாய் அது




போதும்.காயத்தை ஆற்றிவிடலாம் வா" என்று அழைத்துச் சென்றது.

இது நடந்து ஒரு மாதத்தின் பின் வழக்கம் போல் ஆமையும் நாகமும் புல்வெளியில் இரை தேடிக்கொண்டிந்தன. அப்போது அதே மனிதன் கையில் கம்பு எதுவும் இன்றி வந்துகொண்டிருந்தான். உடனே ஆமை நாகத்திடம் "நண்பா முன்பு உன்னை அடித்த மனிதன் வந்துகொண்டிருக்கிறான். கையில் கம்பும் இல்லை. அதனால் இப்போது உன் வீரத்தைக் காட்டலாம்"என்றது. உடனே சீறிக்கொண்டே அந்த மனிதனை" நோக்கிப் பாய்ந்தது நாகம். நடுங்கிப்போன அந்த மனிதன் அதனிடமிருந்து தப்பி வேகமாக ஓடத்தொடங்கினான். "அன்று என்னைக்கொல்ல வந்தவர் இப்போது என்னைக் கண்டு நடுங்கி ஓடுகிறார்"என்று கூறிச் சிரிந்தது நாகம். "அன்று அவர் கையில் கம்பு இருந்தது. இட்ட இருந்தே உன்னை அடித்து விடலாம். அதுஅவருக்கு சாதகமான நிலைமை. இப்போது அவரிடம் எந்த ஆயுதமும் இல்லை. உன்னை நெருங்கினால் கடித்து விடுவாய். அதனால் அவர் தப்பித்து ஓட வேண்டி இருக்கிறது. இது உனக்குச் சாதகமான நிலைமை" என்றது ஆமை. நாகமோ "நீ நல்ல விடயங்கள்தான் தெரிந்து வைத்திருக்கிறாய்"என்றது.

"ஆம். ஒருவருக்கு சூழ்நிலை சாதகமாக இல்லாதபோது என்னைப்போல் சுருட்டிக் கொண்டு அடங்கி இருக்க வேண்டும். சாதகமாக இருக்கும்போது உன்னைப் போல் சீறிப் பாய வேண்டும். ஒருவனின் பலம் பலவீனம் இரண்டையும் பார்த்துத்தான் அவனுடன் மோதச் செல்ல வேண்டும். ஒவ்வொருவரும் இதனைத் தமது வாழ்வில் அவசியம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்" என்றது ஆமை.

"நீ அறிவாளிதான்" என்று பாராட்டியது நாகம் "புரிந்து கொண்டால் சரிதான்"என்ற ஆமையுடன் சேர்ந்து நாகமும் சிரித்தது.

## புள்ளிகளை இணைத்துப் படத்தை முழுமை செய்வோம்




## தங்க ரதம்

மாவீரன் அலெக் சாண்டர் உலகின் பெரும் பகுதியை வென்ற ஒரு மாபெரும் வீரர். கிரேக்கத்திலுள்ள மசிடோனியாவிலிருந்து புறப்பட்டு இந்தியாவின் மேற்கு எல்லை வரையில் வந்து தன்னுடைய தாய்நாட்டுக்குத் திரும்பிச் செல்லும் வழியில் பாபிலோனியா நகரில் கி.மு.323இல் இறந்து போனார். அவருடைய இறந்த உடல் தங்கரதத்தில் வைத்து 64 குதிரைகள் பூட்டப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டது. அவர் இறந்த பாபிலோனியாவில் இருந்து அவர் பெயரில் வழங்கி வந்த எகிப்திலுள்ள அலெக்சாண்டிரியா வரை இந்த ஊர்வலம் நடந்தது. இடைப்பட்ட தூரம் ஏறத்தாழ ஆயிரம் மைல்கள். இந்த ஊர்வலத்துக்காக பல கோடி ரூபாய் செலவிடப்பட்டதாக சொல்லப்படுகிறது.





கட்டுரை

சந்திரசேகர ஆசாத்

# விலைபோகும் இலங்கை

முல்லைத்தீவில் பால் பதனிடும் தொழிற்சாலையைத் திறந்து வைத்து உரையாற்றும்போது முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டிருந்த ஒரு விடயம் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதொன்றாகும். கழுகுகளைப் போன்று பலசக்திகள் உள்நாட்டிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் எம்மைச் சுற்றிய வண்ணம் உள்ளன எனவும், இன்று எம்மை அடக்கியாள எண்ணும் பெரும்பான்மை இனத்தினர் வெகுவிரைவில் எம்மைச் சகோதரர்களாக அணைத்துக்கொண்டு வெளிநாட்டுச் சக்திகளிடமிருந்து இந்த நாட்டையும் அதன் வளங்களையும் காப்பதற்காகச் சேர்ந்து போராட வேண்டிய சூழ்நிலை ஏற்படப்போவதாகத் தான் உணர்வதாகவும் முதலமைச்சர் தெரிவித்திருந்தார். இன்றும் சரி, கடந்த ஆட்சிக்காலத்திலும் சரி, மேற்கொள்ளப்படும் அரசியல், பொருளாதார நகர்வுகள், அவற்றோடான இராணுவத் தொடர்புகள் என்பனவற்றைத் தர்க்க ரீதியாக நோக்கும்போது, இப்படி ஒரு சூழ்நிலை ஏற்படக்கூடும் எனத் தோன்றலாம். ஒரு சுதந்திரமான, இறைமையுள்ள நாட்டின் மக்கள்(?) என்ற வகையில் இப்படியான ஒரு எதிர்பார்ப்பு எழுவதை நியாயமில்லை என்று சொல்லிவிடவும் முடியாது. ஆனால் இன்று நாட்டில் காணப்படும் யதார்த்த நிலைமையை உற்றுநோக்கும்போது, இப்படியான எதிர்பார்ப்பு வருவதற்கான வாய்ப்புக்கள் வெகுதொலைவில் இல்லை என்பது தெரிகிறது.

### சிங்களத் தலைமைகளின் செயற்பாடு

சிங்கள அரசியல் தலைமைகள் நாட்டை எந்த வெளிநாட்டுக்கு விற்பது என்பதில் போட்டியிடுகின்றன. அல்லாமல், ஒரு சுதந்திரப் பொருளாதாரம் கொண்ட, தன்னிறைவுள்ள நாட்டைக் கட்டியமைப்பது தொடர்பாக அவை நினைத்துக் கூடப் பார்ப்பதில்லை. மாறாகத் தமிழ் மக்கள் தங்கள் நியாயமான கோரிக்கைகளை முன்வைக்கும்போது, அவர்கள் நாட்டைப் பிளவுபடுத்தப்போகிறார்கள் போன்ற விசமப் பரப்புரைகளை மேற்கொண்டு சிங்கள மக்களைத் தொடர்ந்தும் இனவாதச் சிந்தனைகளுக்குள்ளேயே மூழ்கவைத்துக் கொண்டிருக்கின்றனர்.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சியின்போது ஆரம்பிக்கப்பட்ட கடலை மண்ணிட்டு நிரப்பி அமைக்கப்படும் கொழும்புத் துறைமுக நகரத்திட்டத்தில் சீனாவுடன் இலங்கை அரசும் இணைந்திருந்தது. ஆனால், குறித்த திட்டத்தை நிறுத்தப் போவதாகத் தேர்தல் வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக்கு வந்த இன்றைய ஆட்சியாளர்கள் முற்றாகவே அதைச் சீனாவுக்குத் தாரை வார்த்துவிட்டனர். அதேபோன்று அம்பாந்தோட்டைத் துறைமுகம் சீனாவுக்கு 99வருடக் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி கைத்தொழில் வளாகம் ஒன்றை அமைப்பதற்குச் சீனாவுக்கு 15ஆயிரம் ஏக்கர் நிலம் வழங்கப்படவுள்ளது. மேலும் கொழும்புத் துறைமுகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கொள்கலன் இறங்குதுறை மகிந்தவால் ஏற்கனவே சீனாவுக்கு வழங்கப்பட்டுவிட்டது. எனவே சீனாவின் உலகளாவிய பட்டுப்பாதைத் திட்டத்தின் முக்கிய கேந்திரமாக அம்பாந்தோட்டை, கொழும்பு என்பவைவிளங்கும் என்பதில் எவ்வித சந்தேகங்களும் இல்லை.

### பன்னாட்டுப் போட்டிகள்

இந்தியாவுக்கோ, அமெரிக்கா உட்பட்ட மேற்கு நாடுகளுக்கோ, ஜப்பானுக்கோ சீனாவின் இலங்கை மீதான ஆதிக்கம் ஏற்புடையதாக இல்லை. அவர்கள் தங்கள் ஆதிக்கத்தை இலங்கையில் நிலை நிறுத்துவதற்காகப் பல்வேறு முயற்சிகளில் ஈடபட்டு வருகின்றனர்.

'சீனா வல்லரசாக உருவாகும் அத்தியாயம் ஆரம்பித்து விட்டது. பாகிஸ்தான் சீனாவின் பக்கம் சாய்ந்து விட்டது. ஆபிரிக்காவில் சீனா ஒரு பெரும் இராணுவத் தளம் அமைத்துள்ளது.

இலங்கையின் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைக் கையகப்படுத்திவிட்டது. சீனா பசுபிக் பிராந்தியத்திலுள்ள அமெரிக்க ஆதரவு நாடுகளைத் தாக்கும் நோக்குடனேயே செயற்பட்டு வருகிறது' என்று இது தொடர்பாக அமெரிக்காவின் இராணுவத் தலைமையக மான 'பென்டகன்' அமெரிக்கக் காங்கிரசுக்குச் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவித்துள்ளது. உலக வல்லரசுகளுக்கு இடையேயான பொருளாதார, இராணுவப் போட்டிகளில் இலங்கை உள்ளீர்க்கப்படும் அபாயம் ஏற்பட்டுவிட்டது என்பதை இந்த அறிக்கை தெளிவாகவே வெளிப்படுத்துகிறது. இதன் விளைவாகவே ஜப்பானியப் போர்க்கப்பல் திருகோணமலைத் துறைமுகத்திலே வந்து தங்கிச் சென்றதும், ஜப்பானியப் படையினர் இலங்கைக் கடற்படையினருடன் கூட்டுப்பயிற்சியில் ஈடுபட்டமையும் இடம் பெற்றிருக்கலாம். அது மட்டுமன்றி, அந்தக் காலப்பகுதியில் ஜப்பானியப் பாதுகாப்பு அமைச்சர் இலங்கைக்குப் பயணம் செய்து 3நாள்கள் வரை தங்கி நின்று அரசதலைவர், தலைமை அமைச்சர் ஆகியோருடன் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தார். அப்போது அவர் இலங்கைத் துறைமுகங்களை வெளிநாடுகளின் இராணுவ நடவடிக்கைகளுக்கு அனுமதிக்கக் கூடாது என இலங்கைத் தரப்பினரிடம் கேட்டுக் கொண்டமை முக்கியமான விடயமாகும்.

அவர் சென்ற பின்பு ஜப்பானின் அயலுறவுத்துறை அமைச்சர் இலங்கைக்கு வருகை தந்து இலங்கை அரச தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்திச் சென்றார். குறித்த அரசியல் நகர்வுகளை நாடுகளுக்கிடையே உள்ள சாதாரண உதவிகள் தொடர்பான ராஜதந்திர நடவடிக்கைகள் என அறுதியிட்டுக் கூறிவிட முடியாது.

ஜப்பானியப் போர்க்கப்பல் இங்கிருந்து புறப்பட்டு சென்றதன் பின்னரான அடுத்தடுத்த நாள்களிலேயே பிரமாண்டமான அமெரிக்கப் போர்க்கப்பல் ஒன்று கொழும்பை வந்தடைந்தது.

### இந்தியாவும் இழுபறி

இன்னொருபுறம், மத்தள விமான நிலையத்தை இந்தியாவிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காங்கேசன்துறைத் துறைமுகத்தையும், பலாலி விமான நிலை யத்தையும் அபிவிருத்தி செய்யும் பணி இந்தியாவிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இலங்கை ஒரு கடலால் சூழப்பட்டுள்ள நாடு. ஆனால் இன்று கொழும்புத் துறைமுகத்தின் ஒரு பகுதியும், கட்டுநாயக்கா பன்னாட்டு விமான நிலையமும் மட்டுமே இலங்கையின் தனியான ஆதிக்கத்தில் உள்ளன.

ஏனைய துறை முகங்கள், விமான நிலையங்கள் ஏதோ ஒரு விதத்தில் பல்வேறு நாடுகளின் கைகளிலேயே உள்ளன. இப்படியாக எமது காலடி மண் அரிக்கப்படும் நிலையில் இலங்கை வாழ் சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் ஒன்றிணைந்து அதற்குரிய மேலாதிக்கத்துக்கு எதிராகக் களமிறங்குவது இன்றைய அவசர தேவையாகும்.

### 1953ஆம் ஆண்டுக் காலப் போராட்டச்சூழல்

1953ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 12ஆம் திகதி இடம் பெற்ற மாபெரும் கடையடைப்புப் போராட்டம் முழுநாட்டையும் உலுக்கியது என்பது வரலாற்றுப்பதிவாகும். அரிசி விலையேற்றம் உட்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி அரசு முன்னெடுத்த மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக இலங்கையின் தொழிலாளர்கள், விவசாயிகள் என அனைவரும் ஒன்றிணைந்து போராட்டத்தில் குதித்த நாள் அது. தொழிற்சங்கங்கள் பலவும் வேலை நிறுத்தத்தில் இறங்கி இருந்தன. நாட்டு மக்கள் சார்பில் தமிழ் மக்க ளும் அதில் கலந்து கொண்டனர். தோட்டத் தொழிலாளர் சங்கம் இதில் கலந்து கொள்வதற்கு முதலில் மறுத்த போதிலும் பின்பு இணைந்து கொண்டது. மாவட்டங்களின் நடவடிக்கைகள் யாவும் ஸ்தம்பிதமடைந்தன.

கொழும்பு நகரம் எங்கும் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் எனப் போராட்டங்கள் பெருகி நாடு கொந்தளித்தது. இந்த நிலையில் அமைச்சரவைக் கூட்டத்தை அரச மாளிகையில் நடத்த அஞ்சிய அமைச்சர்கள் அதைத் துறைமுகத்தில் நங்கூ ரமிடப்பட்டி ருந்த கப்பலில் நடத்தினர். தலைமை அமைச்சராக விருந்த டட்லி சேனநாயக்கா தாமாக முன்வந்து பதவி துறந்தார்.

பின்னர் பதவியேற்றவர் இராணுவச் சட்டத்தை நடைமுறைப்படுத்திப் போராட்டங்களை அடக்கினார். எனினும், போராட்டங்களின்போது முன்வை க்கப் பட்ட பெரும்பான்மையான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன.

### இன்று நிலை தலைகீழாகிவிட்டது

இன்று ஒவ்வொரு துறையிலும் பல கட்சிகள், அவற்றின் தலைமையில் பல தொழிற்சங்கங்கள், எதிர்கட்சி தலைமையிலான தொழிற்சங்கம் போராட்டம் நடத்தினால் அரச கட்சியைச் சோர்ந்த தொழிற்சங்கம் அதை முறியடிக்கும் முனைப்புடன் செயற்படும். அது மட்டுமன்றி தொழிலாளர்கள், விவசாயிகள் இன, மத ரீதியாகப் பிளவுபட்டுப் போயுள்ளனர். அரச தரப்பும் சரி, எதிர்த்தரப்பும் சரி இந்தப் பிளவுகளை மேலும் அதிகரிக்கும் வகையில் ஒடுக்குமுறைகளை அதிகரிக்கின்றன. அத்துடன் ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்களுக்குப் பயங்கரவாதம், பிரிவினைவாதம் எனப் பெயர் சூட்டி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

இந்த நிலையில் நாட்டு மக்கள் அனைவரும் தங்கள் சுதந்திரம் விலைபோவதை உணர்ந்து, உள்முரண்பாடுகளைத் தவிர்த்து, அனைவரும் ஐக்கியப்பட்டு அந்நிய சக்திகளிடமிருந்து நாட்டையும் நாட்டு வளங்களையும் காப்பதற்கு அவசரமாக முன்வரவேண்டும். ■



## நல்லூர் கந்தன் 20ஆம் நாள் திருவிழா

### நல்லூரின் வல்லருளே நலம் தந்து காப்பாய்!

அல்லல்கள் தந்த போர்
அகன்றிங்கு போய் விடினும்
தொல்லை தரும் அவலங்கள்
தொலைந்தோடவில்லை ஐயா
இல்லாத போர் போன்று
இயல் வாழ்வைச் சிதைக்கும்-இப்
பொல்லாத நிலைகள்-எப்
பொழுதினில் அடங்குமையா?
வல்லதொரு சூரபகை
வதம் செய்த வேலா
நல்லூரின் வல்லருளே
நலம் தந்து காப்பாய்!

■ மானியூர்ரட்னேஸ்

## மரண அறிவித்தல்

### திருமதி வேதநாயகி சதாசிவம்

*(பாப்பா அக்கா - அளவெட்டி வடக்கு, அணிஞ்சிலடி)*



அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேதநாயகி சதாசிவம் 01.09.2018 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா - அன்னலட்சுமி தம்பதிகளின் ஏக புத்திரியும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் அன்புமருமகளும் சதாசிவத்தின் அன்புமனைவியும் சேரனின் (கனடா) அன்புத்தாயாரும் சியாமாவின் (கனடா) அன்புமாமியாரும் இனியா, கவின் (கனடா) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் காலஞ்சென்ற பாஸ்கரதேவனின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2018) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் மேற்படி விலாசத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தோரையடி,**
**அளவெட்டி வடக்கு, அளவெட்டி.**

**தகவல்: கணவர் - 077 783 4988,**
**மகன் +160 476 15040 (கனடா),**
**+177 870 98469 (கனடா).**

## வேலையாள்கள் தேவை

**Samsung Singhagiri (pvt) Ltd**

சுன்னாகம் காட்சியறைக்கு
**Field Work** மற்றும் **Show Rooms** இற்கு ஆண்கள் தேவை.

**077 800 7447, 021 492 7086**

(CS/19538)(11,17)

## வேலையாள்கள் தேவை

வடமராட்சியில் பாடசாலை வேலைக்கு
**மேசன், கூலி தேவை.**

**077 354 9625, 077 204 9255**

(CS/19535)(11,17)

## விற்பனைக்கு

கறணப் புறாக்கள், 2 மறி ஆடுகள் (ஜமுனாபாறி கலப்பு) விற்பனைக்குண்டு.

**077 606 2747**

(CS/19531)(11,17)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மட்டுவில் கிழக்கை சேர்ந்தவரும் சண்டிலிப்பாய் வீதி, சங்கானை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட **திரு.சின்னத்தம்பி அமிர்தலிங்கம்** அவர்கள் கடந்த **30.08.2018** வியாழக்கிழமை **யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி கௌரவ பிறேம்சங்கர்** முன்னிலையில் **அகில இலங்கை சமாதான நீதவானாகப்** பதவிப் பிரமாணம் செய்து கொண்டமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்:-
**வில்சன் சனசமூக நிலையத்தினரும் நிர்வாகிகளும்.**

**மட்டுவில் கிழக்கு,**
**சாவகச்சேரி.**

(CS/19544)(11,17)

## பதினைந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
19.09.1931



மறைவு
21.08.2003

### அமரர் பொன்னையா பாலசிங்கம்

**(Retd.Superintendent of Audit)**

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்து -எம்மை
அவனியிலே வாழ்வாங்கு வாழ வைத்த தந்தையே!
பதினைந்தாம் ஆண்டு நினைவு நாளில் - உம்மை
நினைந்து வணங்குகின்றோம் அப்பா!

**மனைவி,**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளை.**

**166/3, சேர் பொன்.இராமநாதன் வீதி,**
**திருநெல்வேலி.**

(CS/19392)(11,17)

## முதலமைச்சரின் அமைச்சு, வடமாகாணம்
## பாதுகாப்புச் சேவை, சுத்திகரிப்புச் சேவை
## தொடர்பான
## கேள்வி கோரல் 2018/2019

1) வடமாகாண முதலமைச்சர் அமைச்சின் அமைச்சுப் பெறுகைக் குழுத் தலைவர் (PMPC) அவர்களால் தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்களிடமிருந்து பாதுகாப்புச் சேவை மற்றும் சுத்திகரிப்புச் சேவைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

Bid No. NP/05/02/PROC/SEC/2018

*(பாதுகாப்புச்சேவை)*

| தொ. இல | மாவட்டம் | ஆளணி எண்ணிக்கை பகல் / இரவு |
|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | 22 |
| 2 | கிளிநொச்சி | 04 |
| 3 | முல்லைத்தீவு | 06 |
| 4 | மன்னார் | 04 |
| 5 | வவுனியா | 06 |
| | மொத்தம் | **42** |

Bid No. NP/05/02/PROC/CLE/2018

*(சுத்திகரிப்புச்சேவை)*

| தொ. இல | மாவட்டம் | ஆளணி எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | 14 |
| 2 | கிளிநொச்சி | 03 |
| 3 | முல்லைத்தீவு | 03 |
| 4 | மன்னார் | 03 |
| 5 | வவுனியா | 04 |
| | மொத்தம் | **27** |

2) கேள்வி கோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

3) ஒப்பந்தம் அளிப்பிற்கு தகுதி பெற்றுக்கொள்வதற்கு கேள்வி கோரலில் வெற்றிபெற்ற விலைக் கேள்விதாரர்கள் கறுப்புபட்டியலில் இடம்பெறாமல் இருப்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

அ) கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினை கொண்டிருத்தல் வேண்டும்
ஆ) பாதுகாப்பு சேவையினை வழங்குவதற்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறப்பட்டிருத்தல் வேண்டும்
இ) கேள்விதாரரின் பதிவுக்காரியாலயம் அல்லது கிளை அலுவலகம் வடமாகாணத்தில் அமையப்பெற்றிருத்தல் வேண்டும்.

4) ஒப்பந்த அளிப்பினை பெற்றுக்கொள்வதற்கான தகுதியினை பெற்றுக்கொள்வதற்கு குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் கேள்விப்பத்திரதாரர் அடிப்படைத் தகுதியினை விலைக்கேள்வித் தரவு பிரிவு – 02 இன் பிரகாரம் பூர்த்தி செய்தல் வேண்டும்.

5) தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களையும், விலைக் கேள்விப் பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கண்டி வீதி, கைதடி எனும் முகவரியில் அமைந்துள்ள முதலமைச்சரின் அமைச்சு, வடமாகாண அலுவலகத்தில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

6) தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பக் கடிதத்தினைச் சமர்ப்பித்து அலுவலக நாள்களில் 04.09.2018 ஆம் திகதி தொடக்கம் 25.09.2018 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப.15.00 மணிவரை வடமாகாண முதலமைச்சரின் அமைச்சில் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு விலைக் கேள்விப்பத்திரத்திற்கும் மீளளிக்கப்படமுடியாத கேள்வி வைப்புப் பணத்தினை பின்வரும் அடிப்படையில் காசாக செலுத்தி விலைக்கேள்வி பத்திரத்தினை பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல | விவரம் | மீளளிக்கப்பட முடியாத கட்டணம் |
|---|---|---|
| 1. | பாதுகாப்புச் சேவை | 4,000.00 |
| 2. | சுத்திகரிப்புச்சேவை | 2,000.00 |

7) விலைக்கேள்விப் பத்திரங்கள் 25.09.2018ம் திகதி மாலை 15.00 மணிக்கு முன்பதாக இவ்வமைச்சில் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ சேர்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்திய விலைக்கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். கேள்வி கோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்வி கோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

8) கேள்விப் பத்திரத்தில் குறித்ததுரைக்கப்பட்டவாறு விலைக்கேள்விதாரரால் விலைக்கேள்விப் பிணைப் பொறுப்பு பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

| தொ. இல | விபரம் | தொகை ரூபா. | செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|
| 1. | பாதுகாப்புச் சேவை | 142 ,000.00 | 25.09.2018 - 24.12.2018 |
| 2. | சுத்திகரிப்புச்சேவை | 62,000.00 | 25.09.2018 - 24.12.2018 |

**பெயர் :திருமதி.வி.கேதீஸ்வரன்**
**பதவி : செயலாளர்,முதலமைச்சரின் அமைச்சு, வடமாகாணம்**
**விலாசம்: முதலமைச்சரின் அமைச்சு(வ.மா),கண்டி வீதி, கைதடி**
**தொலைபேசி :021-2216115**
**தொலைநகல் :021-2057120**

(c/7680)(11,17)

## University of Jaffna, Sri Lanka
## Thirunelvely
## Expression of Interest

The University of Jaffna invites Expression of Interest from suitably qualified and experienced professional and persons who are willing to provide their services towards effective and efficient conduct of preliminary investigations and formal disciplinary inquiries. These investigations and inquiries relate to students and staff of the University and will be conducted in the University premises.

The University looks for persons who are proficient in English and Tamil/Sinhala. They should be willing and committed to conduct preliminary investigations or disciplinary inquiries without delay and efficiently. Those who are selected will be placed on a List of Inquirers maintained by the University and will be invited to conduct an investigation or inquiry as and when occasion arises.

The University may decide to conduct a training session/s to those selected in order to familiarize them with the relevant provisions and norms applicable to the conduct of such investigations and inquiries.

Those who are interested in providing their services are requested to send in their resume, with their name, residential address, national identity card number, present or past employment details, proficiency in English and Tamil/Sinhala, etc. They should specifically mention their professional /educational qualifications and experience in conducting preliminary inquiries/investigations and formal disciplinary inquiries. They should also provide names and addresses of two unrelated referees.

Those who are interested should send in their self-prepared application with the above details to reach the undersigned on or before 03.10. 2018 by registered post indicating in the top-left hand corner of the envelop 'Expression of Interest – Investigation & Inquiries'.

**Registrar**
**University of Jaffna**
**Sir Pon. Ramanathan Road,**
**Thirunelvely.**

O(11,17)

AFTER A/L

# DMI COMPUTER EDUCATION

IT + ENGLISH DIPLOMA

DiTEC

DIPLOMA IN INFORMATION TECHNOLOGY

DIPLOMA IN ENGLISH (PART 1 + PART 2)

**புதிய பிரிவு ஆரம்பம்**

- பிரிவு 1 - 5/9/2018 (Wed) 9:30 a.m. OR 3:30 p.m.
- பிரிவு 2 - 10/9/2018 (Mon) 9:30 a.m. OR 3:30 p.m.

- ☑ அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
- ☑ Microsoft Online பரீட்சைகளூடாக Microsoft - அமெரிக்காவில் இருந்து தலைமை செயலதிகாரியின் கையொப்பத்துடனான Microsoft Specialist சான்றிதழ்கள்.
- ☑ இலகு தவணைக்கட்டண வசதிகள்

fusion Microsoft IT Academy

IELTS
- Unique Test Tips
- Latest course Materials

IELTS Life Skills

**Professional IT Courses**
- Diploma in PC Application
- Diploma in Office Automation
- Diploma in Web Designing & Development
- Diploma in Computerized Accounting
- Diploma in Business Management
- Adv. Diploma in Hardware & Networking
- Diploma in Video Production & Multimedia
- Diploma in AutoCAD
- JAVA, C#, C++, PHP

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம். (Reg No. P25/0056)

## DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி | M.M.V.வீதி | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் | சீரணிச் சந்தி | No.19, A9 வீதி |
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 076 135 4503 | Tel.: 021-228 5655 |

## வயற்காணியும் தோட்டக்காணியும் விற்பனைக்கு

வடமராட்சி கிழக்கு, குடத்தனைச் சந்திக்கு அருகில் குடத்தனை வயல், குடத்தனைக் காடு என்னும் நிலப்பரப்பில் 10 ஏக்கர் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு - 077 956 1525, 021 226 3130**

7th Largest International Tradeshows For **BUILDING MATERIAL & CONSTRUCTION MACHINERY, WOOD WORKING & FURNITURE** Manufacturing Sector of Sri Lanka

VISIT

ALUMEX PRESENTS — Sri Lanka BUILDCON | WOOD — JAT PRESENTS

INTERNATIONAL EXPO 2018

7th - 8th - 9th SEPTEMBER 2018, BMICH, COLOMBO

10+ COUNTRIES | 150+ EXHIBITORS | 2000+ PRODUCTS
NEW INNOVATIONS | LATEST TRENDS | INTERNATIONAL CONFERENCE

FOR FURTHER INFORMATION
(+94) 771864870/ (+94) 761210838 | info@futurextrade.com
Web: www.srilankabuildcon.com/ www.srilankawood.com

ORGANIZED BY: Futurex SHOWCRAFT — SUPPORTED BY: CII — MARKETING PARTNER: CDC EVENTS — TRAVEL PARTNER — TV PARTNER — MEDIA PARTNER: NBM&CW, PLY, Woodage India, Ply Reporter, PLY WORLD

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111
உதயன்

MICRO PC SYSTEMS

Easy Payment
வங்கிகளினூடாக இலகு வாய்ப்பு!

MICRO PC SYSTEMS 22 YEARS EXCELLENCY

2kW SYSTEM

240 Units

350,000/=

Annual Interest Rate 6% (5 Years)

CEB | SEA | LECO Lanka Electricity Company (Pvt) Ltd

Approved

BOC | PEOPLE'S BANK | COMMERCIAL BANK | Sampath Bank | NSB | DFCC Vardhana Bank

| | |
|---|---|
| 1 kW | 120 Units |
| 2 kW | 240 Units |
| 3 kW | 360 Units |
| 4 kW | 480 Units |
| 5 kW | 600 Units |
| 6 kW | 720 Units |

25 YEARS WARRANTY

மின் கட்டணமா? கவலை வேண்டாம். செலவை ஏற்படுத்திய மின்சாரம் வருமானத்தை பெற்றுத்தரும்.

Jaffna: 021 2225893 / 0777425973 / 0773963280 / 0773039536 / 0777425974

MICRO PC SYSTEMS

Corporate Office : No. 115 C, W. A. Silva Mawatha, Colombo 06.
Tel : 011 4000686 | Fax : 011 2367675
Email : mail@micropcsystems.com
Web : www.solarpowerlk.com

## மரண அறிவித்தல்

மலர்வு 13 . 09 . 1939



உதிர்வு 03 . 09 . 2018

## திருமதி இராசம்மா தம்பு

மட்டுவில் வடக்கு, சந்திரபுரத்தை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா தம்பு நேற்று ( 03.09.2018 ) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வேதநாயகம் தம்பதியரின் அருமைமகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை தம்புவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னத்தம்பி கனகசேகரம்பிள்ளையின் அன்புச்சகோதரியும் வேலுப்பிள்ளை பொன்னம்பலம் (ஓய்வுநிலை நிர்வாக அலுவலர் கல்வி அமைச்சு, இசுறுபாய ) காலஞ்சென்ற தம்பிஐயா தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்புமைத்துனியும் தவக்குமார்(மட்டுவில்)தவரஞ்சிதம் ( கைதடி) காலஞ்சென்ற தவபாலன் மற்றும் தவரூபன் ( லண்டன் ) காலஞ்சென்ற தவசொரூபினி மற்றும் தவநந்தன் (லண்டன் ) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சந்திரமதி, தவகுமாரன் (கைதடி), திருமகள் (லண்டன் ), சர்மிலா (லண்டன் ) ஆகியோரின் அன்பு மாமியாரும் பத்மதீபன் ( டோகா ), கஸ்தூரி, சாருஜா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி ), தவகணன் ( சுவிஸ் ), தசகம்சன், தவகரன், தவபவன், தவவாசன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ) ,அபிசனா ( லண்டன் ), அக்ஷயா (லண்டன் ), ஆஷா ( லண்டன் ) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.09.2018) புதன்கிழமை மு.ப.11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோட்டையடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

சந்திரபுரம்,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

தகவல் :
குடும்பத்தினர்.

# இராணுவத்தினரது தொகையைக் குறைக்க வேண்டிய அவசியம் எதுவும் கிடையாது

## வனவிலங்குகள் பாதுகாப்பு மற்றும் நிலைபேண் அபிவிருத்தி அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவிப்பு

ஆங்கில மொழிமூலம்- டெயிலிமிரர் (கெலும் பண்டாரா)
தமிழில்- ஆனந்த்



**கேள்வி-** நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை பற்றிய உங்கள் நிலைப்பாடு என்ன?

**பதில்-** பெரிய பிரச்சினைகள் எதுவும் இல்லாது அரசு முன்னோக்கி நகர்கிறது. இத்தகைய சுமுகநிலைப் பயணம் தொடரும். எதிர்க்கட்சிகள் என்னதான் வாய்கிழியப் பெரிதாகக் கூக்குரல் இட்டாலும், அவைகளும்கூட பலவீனமான நிலையிலேயே உள்ளன. அவர்கள் செய்த தவறுகள் மூடிமறைக்கப்பட்ட நிலையில் உள்ளன. அவர்கள் செய்த தவறுகளை அவர்கள் மறந்து விடக்கூடாது. இந்த அரசால் தொடர்ந்து செயற்பட இயலும். ஐக்கிய தேசிய கட்சிக்குள் எதுவிதமான பிரச்சினைகளும் இல்லை. ஆயினும் மக்கள் மகிழ்ச்சியாக இல்லை, கடந்த மூன்று ஆண்டுகளில் இந்த அரசின் நடவடிக்கைகளில் மக்களுக்கு ஏற்பட்ட அதிருப்தியை நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலின்போது அவர்கள் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

### இன்றைய அரசு தவறுகள் செய்துள்ளது

**கே-** எந்த இடத்தில் அரசு தவறு செய்துள்ளது என நீங்கள் கருதுகிறீர்கள்?

**ப-** முன்னைய அரசினால் பழிவாங்கப்பட்ட தங்கள் கட்சி ஆதரவாளர்களின் குறைகளை இந்த அரசு நிவர்த்தி செய்யத் தவறிவிட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களின் அடிப்படைத் தேவைகள், அவர்களுக்கான தொழில்வாய்ப்புக்கள் போன்றவற்றை இந்த அரசு நிறைவேற்றிக் கொடுக்கத் தவறிவிட்டது. முன்னைய அரசை வீழ்த்துவதற்கு கடுமையாக உழைத்த கட்சியின் ஆதரவாளர்கள் பலர் உள்ளனர். அவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால் அவர் மனதுடைந்துப் போய்விடுவார்கள்.

**கே-** நீங்கள் முன்னைய அரசுடன் முரண்பட்டுள்ளீர்கள். தற்போதைய அரசின் நிர்வாகம் குறித்துக்கூட நீங்கள் திருப்தியடையவில்லையே?

**ப-** நான் இந்த அரசின் செயற்பாடுகளில் திருப்தியடையவில்லை என்பது மட்டுமன்றி, சகலருமே அதிருப்தியடைந்துள்ளனர். நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ள குறைபாடுகளை சகலருமே அறிவார்கள். முன்னைய அரசு ஊழல் நிறைந்தது என நாங்கள் அந்த அரசை குறைகூறினோம். முன்னைய அரசில் குடும்ப ஆட்சி, சர்வாதிகாரம் நிலவியது. ராஜபக்சவினருக்கு மட்டுமே நாட்டின் சகல விடயங்களிலும் முன்னுரிமை அளிக்கப்பட்டது. நீதி மன்றங்களோ, பொலிஸ் திணைக்களமோ அல்லது தேர்தல்கள் திணைக்களமோ தன்னிச்சையாக, சுயமாக, சுதந்திரமாக செயல்பட அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. நாங்கள் இவற்றைச் சீர்செய்தாக வேண்டும்.

**கே-** தற்போதைய அரசும்கூட ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது அல்லவா?

**ப-** பிணைமுறி ஊழல் சம்பவம் மட்டுமே தற்போதைய அரசுக்கு எதிரான குற்றச்சாட்டாக முன்வைக்கப்பட்டுள்ளது. அதற்கு எதிராக நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஒரு காரணத்திற்காக நாம் முழு அரசையும் குறைகூற இயலாது. ஆனால் முன்னைய அரசுக்கு எதிராக அளவில்லாத குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

**கே-** முன்னைய அரசு உங்களுடைய ஆதரவாளர்களை போதைப்பொருள்களை உடமையில் வைத்திருந்ததாக பொய்யான குற்றச்சாட்டுக்களுக்காக கைது செய்யவில்லை ஆனால் அது இப்போது நடந்துள்ளது என நீங்கள் கூறுவதனூடாக எதனை வெளிப்படுத்த முயல்கிறீர்கள்?

### அரசு பொலிஸ் துறையினருக்குப் பூரண சுதந்திரம் வழங்கியுள்ளது

**ப-** நாங்கள் பொலிஸாருக்கு பூரண சுதந்திரம் அளித்துள்ளோம். பொலிஸ் ஆணைணக்குழுவொன்று செயற்படுகிறது. அரசியல் தலையீடு எதுவும் பொலிஸ் தரப்பினருக்கு எதிராக கிடையாது. ஆயினும் பொலிஸ் திணைக்களத்தின் மீதான எங்களின் கட்டுப்பாட்டை இழந்து போயுள்ளோம்.

ஒரு அரசு என்ற முறையில் நாங்கள் அளித்துள்ள சுதந்திரம் சரியான முறையில் கையாளப்படுகிறதா என்பதை நாம் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியுள்ளது. சில பொலிஸ் உயர் அதிகாரிகள் தவறான முறையில் அரசியலில் ஈடுபட்டு எங்களின் ஆதரவாளர்களுக்கு தொந்தரவு கொடுக்கிறார்கள். இந்த அரசு இத்தகைய செயற்பாடுகளை நிறுத்தும் வல்லமை கொண்டிருத்தல் அவசியம். ராஜபக்ச அரசு சில தவறான செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தாலும் கூட பொலிஸ் திணைக்களம் அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது.

**கே-** அப்படியானால் தற்போதைய ஆட்சியாளர்களைவிட முன்னைய ராஜபக்ச தரப்பினர்கள் நல்லவர்கள் எனக்கூறு கிறீர்களா?

**ப-** என்ன சொன்னாலும் நாங்கள் ராஜபக்சக்களுக்கு எதிரானவர்கள்தான். இப்போது பொலிசார் எனக்கு எதிராக செய்பவைகளை அவர்கள் அப்போது செய்ய விரும்பியிருந்தால் போதைப்பொருள் கடத்தியதாக என்னுடைய ஆதரவாளர்களை தண்டித்திருக்கலாம். ஆனால் ராஜபக்சமார் அப்படிச் செய்யவில்லை. இன்று குற்றமற்ற என்னுடைய ஆதரவாளர்களை போதைவஸ்து கடத்தியதாக குற்றம்சாட்டி பொலிசார் சிறையில் அடைத்துள்ளனர். அரசால் இதனை இப்போது நிறுத்த இயலாவிட்டால் அது பின்னர் அரசுக்குப் பிரச்சினைகளை உருவாக்கிவிடும்.

**கே-** தற்போதுள்ள பொலிஸ்மா அதிபர் அரசியல் செய்வதாக எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டுகிறார்களே?

**ப-** அவர் அரசியல் செய்கிற... ...றாரா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அவருக்கு எதிராக சில குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

### பொலிஸ்மா அதிபர் திறமையற்றவர் என்று நான் கூறவரவில்லை

**கே-** அப்படியானால் பொலிஸ்மா அதிபர் திறமையற்றவரா?

**ப-** அப்படி நான் கூறவரவில்லை. அவரை எனக்கு நீண்ட நாள்களாகவே தெரியும். ஆயினும் தற்போதுள்ள சூழ்நிலையில் அவர் திறமையாகச் செயல்படவில்லை.

**கே-** முன்னர் உங்களுக்கான பாதுகாப்பு இராணுவ கொமாண்டோக்களால் வழங்கப்பட்டது. ஆனால் தற்போது பாதாள உலகக் குழுவினர்தான் உங்களது பாதுகாவலர்களாக உள்ளனர் என சில அரசியல்வாதிகள் குற்றஞ்சாட்டு கிறார்களே?

**ப-** இல்லை, எனது பாதுகாப்புக்கு 17பொலிஸ்காரர்களே உள்ளனர். பயங்கர குற்றச்சாட்டுக்களுக்கு ஆளான ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியும் பெற்று, கடைசியில் தூக்குமேடைக்கும் அனுப்பப்பட்டுள்ளார். தேர்தலில் போட்டியிட சகலருக்கும் உரிமை உள்ளது. நான் ஒரு அமைச்சர் என்ற ரீதியில் வனவிலங்குகள் பூங்காவிற்குச் சென்றபோது சில சுற்றுலாப் பயணிகள் எனது வாகனத்துக்குப் பின்னால்வந்துள்ளனர். அவர்களுடன் என்னை இணைத்துத்தான் எனக்கும் பாதாள உலகக் குழுவினருக்கும் தொடர்பு இருப்பதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

**கே-** நீங்கள் இதனை அமைச்சரவையிலோ, சட்ட ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டாரவிடமோ கூறவில்லையா?

**ப-** அமைச்சர் மத்தும பண்டாராவிடம் கூறினேன். எந்தப் பயனும் கிடைக்கவில்லை. தலைமை அமைச்சரிடம் கூறியபொழுது அவர் அதனை எழுத்து மூலமாகத் தனக்கு அறிவிக்கும்படி கூறியுள்ளார். நாள் அப்படியே செய்யவுள்ளேன். இதனைக் கையாளப்போகும் இரகசிய பொலிசார்மீது எனக்கு நம்பிக்கையுள்ளது.

**கே-** யார் அடுத்த அரசதலைவர் பதவிக்கான வேட்பாளராக வருவார் என நீங்கள் நினைக்கிறீர்கள்?

**ப-** நிச்சயமாக அது ரணில் விக்கிரமசிங்கவாகத்தான் இருக்க வேண்டும். அவர் தான் எங்கள் கட்சியின் தலைவர். 2010அரச தலைவர் தேர்தலில் நான் களமிறங்கியிராவிட்டால், மகிந்த ராஜபக்ச போட்டியில்லாமல் வெற்றிபெற்றிருப்பார். நான் பலமுறை ரணில் விக்கிரமசிங்கவை அரசதலைவர் பதவிக்கு போட்டியிடும்படி கேட்டுக்கொண்ட போதிலும், அவர் அதனை விரும்பவில்லை. நான் பொது வேட்பாளராகப் போட்டியிட்டு, அந்தத் தேர்தலில் 3இலட்சத்து 75ஆயிரம் வாக்குகள் பெற்றேன்.

**கே-** உங்களது கட்சிக்கான வெற்றிவாய்ப்புக்கள் எந்த அளவுக்கு உள்ளன?

**ப-** எங்கள் கட்சி கஷ்டப்பட்டு உழைத்தால் வெற்றிபெற இயலும். தலைமை அமைச்சர் தனது போக்கைச் சிறிது மாற்றிக் கொள்ள வேண்டும்.

**கே-** எந்த விதமான மாற்றங்கள்?

**ப-** அவர் கட்சியின் அடிமட்டத் தொண்டர்களுடன் உறவுகளை... ...பேணவேண்டும். கட்சியின் ஏற்பாட்டாளர்களுடைய விவகாரங்களையும் கையாள வேண்டும் அவற்றைச் செய்தால் அவருக்கு வெற்றி வாய்ப்பு நிச்சயம்.

**கே-** அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவும் அரசதலைவர் பதவிக்கு அடுத்த தடவையும் போட்டியிட விரும்புகிறாரே? அது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**ப-** அவர் அவரது கட்சி சார்பில் போட்டியிட்டும். நாங்கள் எங்கள் கட்சியில் வேட்பாளரைத்தான் ஆதரிப்போம்.

**கே-** வடக்கில் மீண்டும் தமிழீழ விடுதலைப் புலிகள் தலை எடுப்பார்கள் எனக் கூறப்படுகிறது. புலிகளுக்கு எதிரான போருக்குத் தலைமை தாங்கியவர் என்ற ரீதியில் அதுகுறித்த உங்களின் கணிப்பீடு என்ன?

**ப-** நாங்கள் தமிழீழ விடுதலைப்புலிகளை அழித்தோம். வடக்கில் அமைதியை நிலைநாட்டி, புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வடக்கை அபிவிருத்தி செய்துள்ளோம். அது போதாது. வடக்கில் இன்னும்கூட சில அரசியல்வாதிகள் பிரிவினை பற்றிப் பேசுகிறார்கள். தெற்கிலுள்ள சிங்கள மக்கள் அதற்கு இடம் தர மாட்டார்கள். அதிகாரப் பகிர்வை மேற்கொள்வதற்கு பொதுவாக்கெடுப்பு ஒன்றை நடத்த வேண்டும். அநேகமான பொதுமக்கள் இதனை விரும்பவில்லை. அவர்கள் எதிரபார்ப்பது அரசியல் தீர்வு அல்ல. பொருளாதார அபிவிருத்திதான். நாங்கள் மக்களின் தேவைகளைத்தான் பூர்த்தி செய்ய வேண்டுமே தவிர, அரசியல்வாதிகளின் தேவைகளை அல்ல. சில தமிழ் அரசியல்வாதிகள் இராணுவத்தை வடக்கிலிருந்து அகற்ற வேண்டும் என வற்புறுத்துகிறார்கள். அது சாத்தியமில்லை.

**கே-** இராணுவத்தினரது தொகை குறைக்கப்பட வேண்டும் என்ற தேவையுள்ளதா?

**ப-** இலங்கையின் சகல பாகங்களிலும் இராணுவம் நிலை கொண்டிருக்க வேண்டும். இராணுவம் வடக்கில் இருக்கக்கூடாது; தெற்கில் மட்டுமே இருக்க வேண்டுமென நீங்கள் கூறக்கூடாது. இராணுவத்தினரது தொகை குறைப்புக்கான தேவை தற்போது எங்களுக்கு இல்லை. சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் இராணுவத்தினர் இலங்கையில் இருக்க வேண்டும். உள்ளூரில் மட்டுமல்ல வெளிநாடுகளில் இருந்து வரக்கூடிய அச்சுறுத்தல்களைக் கூட எதிர்த்து நிற்க இராணுவம் தயாராக இருக்க வேண்டும். இராணுவத் தளபதி இராணுவத்தினரின் வசம் இந்த காணிகளை மீண்டும் பொதுமக்களிடம் ஒப்படைத்து இராணுவ முகாம்களைக் குறைத்துள்ளதாக பெருமையாக கூறுகிறார். இது முட்டாள்தனமான பேச்சு. இராணுவ முகாம்களைக் குறைத்து ஒவ்வொரு அங்குல நிலத்தையும் பொதுமக்களுக்குத் திருப்பிக் கொடுக்க இயலாது. முறையான ஒரு ஆய்வுக்குப் பின்னரே இது போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

**கே-** அப்படியானால் கடைசியாக இராணுவத்தினர் பொதுமக்களுக்கு அவர்களுடைய நிலங்களை மீளக் கையளித்தமையை ஏற்றுக்கொள்ள மறுக்கிறீர்களா?

**ப-** அரசியல் அழுத்தங்களுக்காக இதனை மேற்கொள்ளக்கூடாது. முறையாக இதனை நடைமுறைப்படுத்த வேண்டும். சில அரசியல்வாதிகளைத் திருப்திப் படுத்தவே இராணுவத் தளபதி இப்படிமுகாம்களை அகற்றி அந்த நிலங்களை பொதுமக்களிடம் மீளக் கையளிக்கிறார். பல இராணுவ உயர் அதிகாரிகளுக்கு இதில் உடன்பாடு இல்லை என அமைச்சர் சரத் பொன்சேகா கருத்து வெளியிட்டுள்ளார்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 3078 திகதி: 2018.09.03 திங்கட்கிழமை
நீலம்
SATURDAY FORTUNE
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து / போனஸ் இலக்கம் / அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
03 06 16 65 Q 39 40,129,705/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB LOT AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

சீட்டிழுப்பு வாரம்: 362
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.09.03
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 66,102,405/-
அத கோடிபதி
வெற்றி இலக்கங்கள்
09 25 46 50 T
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB LOT AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1497
சீட்டிழுப்பு திகதி 03.09.2018
வெற்றி இலக்கங்கள்
09 35 65 68 U
அடுத்த வியாழக்கிழமை ஜக்பொட்
ரூ 33, 889, 656 /=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB LOT JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

Galaxy Star
வெற்றி வாரம் 267 / திகதி 02.09.2018
வெற்றி இலக்கங்கள்
04 29 45 48 53
அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி
ரூ. 4,286,104/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB LOT GS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு: 1919

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பத்மாவதி பாலசுப்பரமணியம்

*(சாரதா)*



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பையும் நுணாவிலையும் வசிப்பிடமாகக் கொண்டவரும் யாழ். சம்பந்தர் மொடோன் வைத்திய நிலைய உரிமையாளரின் மனைவியுமாகிய பாலசுப்பரமணியம் பத்மாவதி (சாரதா) நேற்று (03.09.2018) திங்கட்கிழமை அதிகாலை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பாலசுப்பரமணியம் (பாலா) கணவர்

077 873 0129

### சங்கரப்பிள்ளை ஸ்ரீசந்திரா



அநுராதபுரத்தை பிறப்பிடமாகவும் ஆவரங்கால் மேற்கு புத்தூரை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை ஸ்ரீசந்திரா நேற்று(03.09.2018)திங்கட்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சோதிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் கலைமகளின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான ரத்தினம் - ராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் ஸ்ரீலாவண்யா (ஆசிரியர் - யா /ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்), காலஞ்சென்ற பிரதீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பரமேஸ்வரி காலஞ்சென்ற ஸ்ரீ காந்தன் மற்றும் தனலக்ஸ்மி, ராதாகிருஷ்ணன், விஜயலக்ஸ்மி, செல்வமலர், கௌரி, சீதாதேவி, சுபாஜினிதேவி, ஸ்ரீதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான தேவராசா, நவீந்திரன் மற்றும் சரோஜாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2018) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

0776653602 தகவல்: குடும்பத்தினர்.

## மீள்குடியமர்வை....

அறிவித்தார் நிதிக் குழுவிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் போராசிரியர் ஆசு மாரசிங்க.

நாடாளுமன்ற நிதிக்குழுவின் கருத்தமர்வு நேற்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது:

மீள்குடியமர்வுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். தேசிய ரீதியில் முக்கியத்துவம் மிக்க இந்த விடயம் தொடர்பான அறிக்கையை உடன் விசேடமாக அனுப்பவேண்டும்.

அமைச்சு மாற்றம் காரணமாக சில நிதிகள் நல்லிணக்க அமைச்சுக்கு மாறியுள்ளது. அந்த நிதியை ஏனைய திட்டங்களுக்கு அன்றி நேரடியாக மீள்குடியமர்வுக்குப் பயன்படுத்தவேண்டும்.

நல்லிணக்கம் துறைசார் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் மாவை சேனாதிராசா மீள்குடியேற்றத்துக்கான நில நல்ல முன்மொழிவுகளைச் செய்தார். அவர் தனது பரிந்துரைகளை அனுப்பி வைத்தால் அவற்றை வைத்து நாமும் எமது பரிந்துரைகளைச் செய்யலாம். நிச்சயமாக மீள்குடியமர்வுக்கான நிதி தொடர்பில் முழுக் கவனம் செலுத்தப்படும் - என்றார்.

(ந-105)

## இலஞ்சத்தை...

நீதிமன்றக் கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வுக்காக நீதி அமைச்சர் தலதா அத்துக்கோரல, தலைமை நீதியரசர் பிரியசாத் டெப் ஆகியோர் வந்திருந்த சமயம் "வேண்டாம்" என்கிற வாசகம் தாங்கிய பதாகையுடன் மரத்தில் ஏறி நின்று தனது போராட்டத்தை வெளிப்படுத்தினார் அந்த முதியவர்.

இந்த நிகழ்வு கிளிநொச்சி நீதிவான் மன்ற வளாகத்தில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமானது. மேடை நிகழ்வுகள் நடைபெற்றன. பிரதம நீதியரசர் உரையாற்றிக் கொண்டிருந்தார். மேடையில் நீதி அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன், நீதிபதிகள், கிளிநொச்சி முல்லைத்தீவுப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் எனப் பலர் அமர்ந்திருந்தனர் அப்போது மேடைக்கு எதிராக ஏ9 வீதியில் உள்ள பூவரசு மரம் ஒன்றில் ஏறிய முதியவர் ஒருவர் கையில் பாதாகையை வைத்துக் கொண்டு உரத்த குரலில் கோசம் எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தார்.

பொலிஸாரும், அங்கிருந்த சட்டத்தரணிகளும் அங்கு சென்று முதியவரைச் சமாதானப்படுத்தினர். அவரை ஒருவாறு மரத்தை விட்டு இறக்கினர்.

முதியவர் கையில் வைத்திருந்த பதாகையில், அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படுவது உங்களுக்குச் சேவை செய்யவே எங்கள் வரிப்பணத்தில் சம்பளம் பெறும் அவர்களுக்கு நீங்கள் இலஞ்சம் கொடுக்கத் தேவையில்லை. இலஞ்சம் ஊழலுக்கு எதிராகச் செயற்பட வேண்டியது உங்களின் பெறுப்பாகும் என்று எழுதியிருந்தது.

பொலிஸார் இலஞ்சம் வாங்குகின்றனர் என்றும், குறிப்பாகக் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் உள்ள ஒருவர் (பெயரைக் குறிப்பிட்டு) இலஞ்சம் பெறுகின்றார். என்னை அச்சுறுத்தினார் என்று அந்த முதியவர் கூறினார்.

பொலிஸார் முதியவரைச் சமாதானப்படுத்தி அங்கிருந்து அகற்றினர். இதனால் அங்கு சிறிது சலசலப்பு ஏற்பட்டது.

(ந-6,35,214)

**அலுவலக உதவியாளர் தேவை**

திருநெல்வேலியில் இயங்கும் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு கணினி அறிவுள்ள அலுவலக உதவியாளர் (பெண்) தேவை.

தொடர்பு - 077 386 7458

**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் உள்ள மருந்தகத்துக்கு ஆள்கள் தேவை. ஆர்வமுள்ளவர்களும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு - 075 243 1018

## மரண அறிவித்தல்



தோற்றம் 17 . 11 . 1962

மறைவு 31 . 08 . 2018

### செல்லத்துரை கருணாநிதி

களவாஞ்சிக்குடியைப் பிறப்பிடமாகவும், சிறுப்பிட்டி வடக்கு மடத்தடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை கருணாநிதி கடந்த (31.08.2018) காலமானார்

அன்னார் செல்லத்துரை சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் ஆறுமுகம் தங்கம்மா தம்பதியரின் அன்புமருமகனும் லீலாவதியின் அன்புக்கணவரும் சாய்க்கிரி, ரம்யா, சயந்தன், உமாசாந்தி, சிந்துஜா ஆகியோரின் அன்புத்தந்தையும் காண்டீபன், ரஜீவன், உமாசிவம் ஆகியோரின் அன்புமாமனும் ரித்விக், ஆரியா, வர்ணன், வஜீவன், வைஸ்னு ஆகியோரின் அன்புப்பேரனும் சரஸ்வதியின் அன்புமைத்துனரும் மயில்வாகனம், தர்மராசா ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2018) செவ்வாய்க்கிழமை சிறுப்பிட்டியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று மு.ப.10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி கிழக்கு இத்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் குடும்பத்தினர்

மடத்தடி வீதி,
சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.

076 176 7922

## ஹெரோயினுடன்...

நேற்றுமுன்தினம் மாலை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், பண்ணையில் உள்ள சிறப்பு அதிரடிப் படை முகாமுக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையிலேயே இவர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 9.639 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிறப்பு அதிரடிப் படையினருக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் மா அதிபர் எம்.ஆர்.லதீப்பின் ஆலோசனைக்கு அமைய சிறப்பு அதிரடிப் படையின் வுவுனியா பிரதேச அதிகாரி உபாலி வழங்கிய குறிப்புக்கு அழைய சிறப்பு அதிரடிப் படையின் யாழ். நிலையப் பொறுப்பதிகாரி புஸ்பகுமார தலைமையிலான அணி சந்தேகநபரைக் கைது செய்தது என்று தெரிவிக்கப்பட்டது.

(ந-8,105)

## இ.போ.ச...

வரும் பணிப்புறக்கணிப்பு போராட்டத்துக்கு வடக்குப் பேருந்து சங்கங்களும் ஆதரவு தெரிவித்துள்ளன. அதையடுத்து வடக்கில் இன்று இ.போ.ச. பேருந்துச் சேவைகள் முடங்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பளப் பிரச்சினை உள்படப் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தெற்கில் இ.போ.ச. ஊழியர்கள் நேற்றுமுன்தினம் பணிப்புறக்கணிப்பை ஆரம்பித்திருந்தனர். எனினும் நேற்று வடக்கு இ.போ.ச. பேருந்துக்கள் சேவையில் ஈடுபட்டிருந்தன.

இந்த நிலையில் தெற்கில் நடத்தப்படும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நேற்று நள்ளிரவு முதல் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படுவதால் வடக்கு மாகாணத்திலும் இ.போ.ச பேருந்து சேவைகள் இடம்பெறாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அரச சேவையாளர்களுக்கு வழங்கப்படும் 10 ஆயிரம் ரூபா மேலதிக கொடுப்பனவை, அடிப்படை வேதனத்தில் இணைத்துக் கொள்ளல் உள்ளிட்ட கோரிக்கைகள் சிலவற்றை முன்வைத்தே இந்த பணிப்புறக்கணிப்பு மேற்கொள்ளப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

(ந-8)



## இது புதுசு

பெண்களுக்கான செருப்பு வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை ஆயிரத்து 800 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 1000 | 1000 | 1200 | 1000 |
| நண்டு | 600 | 500 | 700 | 600 |
| கணவாய் | 800 | 900 | 1000 | 1000 |
| பாரை | 700 | 900 | 800 | 1100 |
| சுறா | 900 | 900 | 1200 | 1200 |
| சீலா | 500 | 500 | 700 | 400 |
| விளை | 600 | 500 | 700 | 700 |
| முரல் | 400 | 400 | 600 | 500 |
| கும்பிளா | 400 | 350 | 500 | 300 |
| கிளாக்கன் | 800 | 400 | 600 | 600 |
| ஓரா | 400 | 500 | 600 | 500 |
| திரளி | 250 | 300 | 300 | 250 |
| நகரை | 250 | 300 | 500 | 250 |
| சூடை | 180 | 150 | 300 | 150 |
| ஒட்டி | 300 | 300 | 400 | 400 |
| திருக்கை | 350 | 300 | 500 | 400 |
| மதனம் | 250 | 300 | 300 | 300 |
| கொய் | 200 | 100 | 100 | 100 |
| பாலை | 250 | 300 | 700 | 300 |
| வாளை | 200 | 300 | 500 | 200 |

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| கத்தரி | 80 | 60 | 80 | 100 |
| முள்ளங்கி | 80 | 80 | 80 | 120 |
| மரவள்ளி | 40 | 40 | 40 | 40 |
| பயிற்றை | 100 | 80 | 60 | 100 |
| பாகல் | 160 | 160 | 100 | 170 |
| க.கிழங்கு | 100 | 100 | 100 | 120 |
| பெ.வெங்காயம் | 100 | 120 | 100 | 110 |
| சி.வெங்காயம் | 100 | 70 | 100 | 110 |
| பூசணி | 50 | 80 | 60 | 60 |
| தக்காளி | 130 | 120 | 50 | 120 |
| வாழைக்காய் | 70 | 50 | 100 | 80 |
| கீரை | 20 | 25 | 15 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 35 | 40 |
| ப.மிளகாய் | 120 | 160 | 100 | 180 |
| புடோல் | 110 | 80 | 80 | 100 |
| கோவா | 150 | 100 | 140 | 160 |
| வெண்டி | 100 | 80 | 50 | 100 |
| போஞ்சி | 120 | 180 | 240 | 250 |
| லீக்ஸ் | 200 | 120 | 160 | 180 |
| தேங்காய் | 70 | 50 | 60 | 70 |
| உ.கிழங்கு | 100 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 70 | 40 | 60 | 50 |
| வல்லாரை | 20 | 40 | 15 | 20 |
| கறிமிளகாய் | 120 | 120 | 150 | 120 |
| கரட் | 280 | 300 | 320 | 180 |
| முருங்கைக்காய் | 100 | 50 | 50 | 80 |

## 2019ஆம்...

தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நாடாளுமன்ற நிதிக் குழுவின் தலைவர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பொது நிதி தொடர்பான நாடாளுமன்றப் குழுவின் கருத்தமர்வு நேற்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது:

மீள்குடியமர்வுக்கான நிதி ஒதுக்கீடு உடனடியாக ஆயிரத்து 600 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும். அந்தத் தொகை இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டுச் செலவு செய்யப்படாத ஏனைய திட்டங்களில் இருந்து பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா விடுத்த கோரிக்கையைக் குழு ஏற்றுக் கொண்டது.

தெல்லிப்பழை மருத்துமவனையின் கட்டுமானம், அபிவிருத்தி போன்றவற்றுக்காக எதிர்வரும் 3 ஆண்டுகளில் சிறப்பு நிதியாக ஆயிரம் மில்லியன் ரூபா தேவையாகவுள்ளது என்று மருத்துவமனைப் பணிப்பாளர் விடுத்த கோரிக்கையையும் குழு ஏற்றுக் கொண்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களில் 50 ஆண்டுகளாக மேற்கொள்ளப்படாதுள்ள மீள்மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு ஏற்றவாறு வடக்கில் நியமிக்க அனுமதிக்கப்பட்ட 400 மதிப்பீட்டு உத்தியோகத்தர்களை உடன் நியமிக்கவும். அதற்கான நிதி அனுமதியையும் ஏற்றுக் கொள்ளவும் குழு முடிவு செய்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் முற்றிலும் பார்வையற்ற 300 பேர் உள்ளனர் என்றும், அதற்காக 30 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டால் எந்தக் காலத்திலும் எந்த நிதி உதவியும் தேவையில்லை என்பதால் அதற்கான ஏற்பாட்டைச் செய்ய முன்மொழிவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. என்றார்.

அதேவேளை, வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, உட்கட்டுமானம் என்பவை தொடர்பில் முன்வைக்கப்பட்ட திட்டங்களைப் பரிந்துரை செய்வதோடு பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான சிறப்புத் திட்டம் போன்றவை தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டு முன்னொழிவுகள் செய்யப்பட்டன.

இந்தக் கருத்தமர்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, ஈ.சரவணபவன் மற்றும் நிதி அமைச்சின் உத்தியோகத்தர்கள், மாவட்ட உத்தியோகத்தர்கள், போது அமைப்பின் பிரதிநிதிகள், மாகாண சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ட-105)

## அரசு...

யில் கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கைது செய்ய அரசு நடவடிக்கை எடுக்கின்றது. அரசு கடுமையான நடவடிக்கை எடுத்தால் மக்களும் கடுமையான நடந்துகொள்ளும் நிலைக்குச் செல்வார்கள்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச. கொழும்பில் நேற்று நடத்திய செய்தியார் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்தாவது:

கைதுகள் மூலம் எமது பயணத்தை நிறுத்தி விட முடியாது. இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ளவுள்ள சிலரைக் கைது செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று அறிய முடிகின்றது. நாம் கூட நாளை கைது செய்யப்படக் கூடிய சாத்தியங்கள் உள்ளன.

மகிந்த ராஜபக்சவும், கோத்தபாய ராஜபக்சவும் சிறைச்சாலைக்குப் பயந்தவர்கள் அல்லர். மகிந்த ராஜபக்ச சிறைச்சாலைக்குச் சென்று வந்த ஒருவராவார். அவரது அரசியல் பயணத்தைச் சிறைச்சாலையில் முடித்துவிட முடியும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் நினைப்பார்கள் எனில் அது முடியாத காரியம் என்று நாம் இந்த வேளையில் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்தப் போராட்டத்தை முடக்க அரசு சில முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது என்று எமக்குத் தகவ கிடைத்துள்ளன. அது தொடர்பில் நாம் பொலிஸாருக்கும் அறிவித்துள்ளோம். பொலிஸார் நடவடிக்கை எடுப்பார்கள் என்று நாம் நம்புகின்றோம்.

நாம் அமைதியான போராட்டத்தை நடத்தவே நினைக்கின்றோம். அரசைக் கவிழ்க்கும் செயற்பாட்டை ஆரம்பிக்கவே கொழும்புக்கு வருகின்றோம். அடித்துக்கொள்ள வரவில்லை என்பதை நாம் கூறிக்கொள்கின்றோம்.

அதையும் மீறி அரசு கடுமையான நடவடிக்கை எடுத்தால் மக்களும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைக்குச் செல்வார்கள். அதனால் பொலிஸார் தமது கடமைகளைச் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம். உயர் பதவிகளில் இருக்கும் பொலிஸார் தமது அரசியல் தேவைகளுக்காக அவர்களுக்குக் கீழ் உள்ள பொலிஸாரைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டாம். நாம் இந்த நாட்டின் அனைத்து மக்களுக்காகவும் தான் நாளை போராடவுள்ளோம் - என்றார். (ற)

## முன்னாள்...

கொழும்பு, செப்.4

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் 4 பேருக்கு எதிராக நேற்று கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களால் பயன்படுத்தப்பட்ட வெடிபொருள்களை வைத்திருந்தனர் என்று அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் நால்வரும் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் 2013ஆம் ஆண்டு ஏப்ரல்மாதத்தில்நடத்தப்பட்ட சுற்றிவளைப்புக்களில் கைது செய்யப்பட்டனர். (ற)

## சித்திரவதை...

குறித்த அறிக்கைக்கு இலங்கை பதிலளிக்கத் தவறியது தொடர்பாகச் சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா. குழு கேள்வி எழுப்பியுள்ளது.

முன்னாள் குற்றப் புலனாய்வுப் பிரிவு தலைவர் மீது சுமத்தப்பட்டுள்ள சித்திரவதைக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரிக்க நீதிப் பொறிமுறை ஒன்றை உருவாக்குமாறு கோரும், அறிக்கை ஒன்றை சித்திரவதை களுக்கு எதிரான ஐ.நா. குழு சமர்ப்பித்திருந்தது.

அந்த அறிக்கைக்கு இலங்கை அரசு பதிலளிக்கத் தவறியுள்ள நிலையிலேயே, இது தொடர்பாக இலங்கை அரசுக்கு சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா குழு கடிதம் எழுதியுள்ளது.

குழுவின் அவதானிப்புகள் வெளியிடப்பட்டு ஒரு ஆண்டுக்கு மேலாகியும், தமது குழு கோரிய தகவல்கள் இன்னமும் வழங்கப்படவில்லை என்று, சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா குழு, ஜெனிவாவில் உள்ள இலங்கைத் தூதுவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளது.

2016 ஆம் ஆண்டு நடந்த சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா குழுவின் 59ஆவது அமர்வில், இந்த விடயம் கலந்துரையாடப்பட்டு, அறிக்கைக்குப் பதிலளிக்க 2017 டிசெம்பர் வரை அவகாசம் அளிக்கப்பட்டிருந்தது. அந்தக் கால எல்லை கடந்து பல மாதங்களாகியும் இலங்கை இன்னமும் இந்த அறிக்கைக்குப் பதிலளிக்கவில்லை.

2008ஆம் ஆண்டு மார்ச் தொடக்கம், 2009 ஜூன் வரை குற்றப் புலனாய்வுப் பிரிவின் தலைவராக சிசிர மெண்டிஸ் பதவி வகித்த போது, அவரது வகிபாகம் என்ன என்பது பற்றிய தகவல்களை சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா குழு கோரியிருந்தது.

2016ஆம் ஆண்டு நடந்த ஜெனிவா அமர்வில், பங்கேற்ற இலங்கைக் குழுவில் சிசிர மெண்டிஸ் உள்ளடக்கப்பட்டிருந்ததை அடுத்து இந்த விவகாரம் பூதாகாரமாக உருவெடுத்திருந்தது. (ற)


## பொதுமக்களுக்கு...

எச்சரித்துள்ளார்.

நாளை கொழும்பில் கூட்டு எதிரணியின் ஏற்பாட்டில் பெரும் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலையிலேயே பொலிஸ் மா அதிபர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களின் கடமைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் ஆர்ப்பாட்டங்களை நடத்தவேண்டும் என்று கோருகின்றோம். பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்துபவர்கள் மீது அதிகபட்ச சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கொழும்பு நகரின் பாதுகாப்புக்காக சிறப்புப் பொலிஸ் படையணி இணைத்துக் கொள்ளப்படவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. நாடாளுமன்றம் உள்ளிட்ட நகரின் முக்கிய பல இடங்களுக்கும் சிறப்புப் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது. புலனாய்வுப் பிரிவு, கலகம் அடக்கும் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. (ற)



# உயிர் மின்னணுவியல்

ஆபேரி

> எறும்புகளின் உடல் இயக்கத்தை மாதிரியாகக் கொண்டு பயானிக் எறும்புகளின் தொகுதி அண்மையில் ஜேர்மனியில் உருவாகியிருக்கிறது. எறும்புகள்போல விரைவாக நகரக்கூடிய ஆறு கால்கள் கொண்ட உடலமைப்பே இது. ஒவ்வொரு எறும்பின் தலைப் பகுதியில் கமராவும், என்ன மாதிரியான தரை என்று உணர உணரியும் (சென்சார்) உண்டு. பயானிக் எறும்பு செயற்பட வழி செய்யும் 'லித்தியம் மின்கலங்களை' மின்னேற்றம் செய்யவும் இந்த அமைப்பு வழி செய்கிறது. அசல் எறும்புகள் போல, பொருள்களைப் பற்றி எடுத்துப் போக பற்றுவான்களும் (க்ரிப்பர்) உண்டு.

இயற்கையைப் பார்த்து அதன் அடிப்படையில் இயக்கத்தை வடிவமைத்துக்கொள்வது பயானிக்ஸ் துறை. சுருங்கச் சொல்லின் கண்ணதாசன் பாடிய, 'பறவையைக் கண்டான், விமானம் படைத்தான்' என்ற தன்மைவெளியின் கண்டுபிடிப்பான உருவாக்கமே. தமிழில் இத்துறையை 'உயிர் மின்னணுவியல்' என்கிறனர் ஆராய்ச்சியாளர்கள்.

எறும்புகளின் உடல் இயக்கத்தை மாதிரியாகக் கொண்டு பயானிக் எறும்புகளின் தொகுதி அண்மையில் ஜேர்மனியில் உருவாகியிருக்கிறது. எறும்புகள்போல விரைவாக நகரக்கூடிய ஆறு கால்கள் கொண்ட உடலமைப்பே இது. ஒவ்வொரு எறும்பின் தலைப் பகுதியில் கமராவும், என்ன மாதிரியான தரை என்று உணர உணரியும் (சென்சார்) உண்டு. பயானிக் எறும்பு செயற்பட வழி செய்யும் 'லித்தியம் மின்கலங்களை' மின்னேற்றம் செய்யவும் இந்த அமைப்பு வழி செய்கிறது. அசல் எறும்புகள்போல, பொருள்களைப் பற்றி எடுத்துப் போக பற்றுவான்களும் (க்ரிப்பர்) உண்டு. எந்தப் பளுவை நகர்த்த வேண்டுமோ அதை எப்படிப் பற்ற வேண்டும் என்று முடிவு செய்யும் ஆற்றல் மிகுந்தவை இந்த பயானிக் எறும்புகள்.

**பார்வை**

விபத்தில் கை உடைந்துபோவதோ, அலட்சியப் போக்கினால் நோய் முற்றிக் காலை அகற்ற வேண்டியிருப்பதோ சோகமான விடயம் மட்டுமல்லாது ஓடியாடிப் பரபரப்பாக நடத்திய வாழ்க்கையை முடக்கிவிடுகிறது. முறிந்து விழுந்த உறுப்பை மறுபடியும் முளைக்க வைக்க முடியாது. ஆனால் அந்தக் குறை அநேகமாகத் தெரியாமல் வாழ்க்கையைத் தொடர பயானிக்ஸ் தொழில்நுட்பம் கைகொடுக்கும். 'பயானிக் பார்வை' முன்னெடுத்துச் செல்லப்படும் ஒரு கட்டமைப்பாகும். பார்வை இழந்தவர்களின் விழியில் சிறு மின்முனைகள் (எலெக்ட்ரோடு) பதிக்கப்படும்.

உடலில் இணைத்த சிறு கமராக்கள் அவர்களுக்கு முன்னால் விரியும் காட்சியைப் படம் பிடித்துக்கொண்டு அந்தப் படத்தை மின்னணு அலைகளாக அனுப்பும். மின்முனைகள் அவற்றை வாங்கி நேரடியாக மின்தூண்டுதலாக மூளைக்கு அனுப்பும். மூளை அந்த மின்தூண்டலைப் பகுப்பாய்வு செய்து விழி இழந்தவருக்குக் காட்சியை உணர்த்தும். முன்பு பார்வை இருந்து இடையில் பார்வையற்றவர்களாக மாறியோர் என்றால் மூளைக்கு இந்தப் பகுப்பாய்வு முன்பே பழக்கமாகியிருக்கும். புதிதாகக் கற்றுத்தர வேண்டியதில்லை என்கின்றனர் விஞ்ஞானிகள்.

**சுவை**

பயானிக் நாக்கு சுவையை உணர்கிறது. மிகச் சிறிய 'நானோ' உணரிகள் இந்த நாக்கில் பதிக்கப்பட்டிருக்கும். திட உணவோ அல்லது திரவ உணவோ நாக்கில் படும்போது உணரிகளால் அது பகுத்தறியப்படும். அந்த விவரம் ஒரு கணினிக்கு உள்ளீடு செய்யப்படும். ஒவ்வொரு வகை வேதியியல் அணுத் திரளுக்குமான ஒரு சுவை கணினியில் முன்பாகவே பதிவாகியிருக்கும். வந்த தகவல்களை அவற்றோடு ஒப்பிட்டு என்ன சுவை என்று கணினி உடனே சொல்லிவிடுகிறது.

இதே போன்று 'பயானிக் கணையம்' உடலில் பொருத்தப்படும் நாள் வெகு தொலைவில் இல்லை என்கின்றனர் ஆய்வாளர்கள். இந்தச் செயற்கை உறுப்பு குருதியில் சக்கரை அளவை அனுதினமும் கண்காணித்து அதன் அடிப்படையில் இன்சுலின் சுரப்பைக் கூட்டும் அல்லது குறைக்கும். பயானிக் சிறுநீரகம் இது போன்றே இயற்கைச் சிறுநீரகத்துக்கு மாற்றாகலாம் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

**வேகம்**

எறும்புகள் கூட்டாக வாழ்பவை. ஒற்றை எறும்பால் இழுத்துப் போக முடியாத உணவுத் துண்டைக்கூட கூட்டமாக வந்து நகர்த்திப்போக அவற்றால் முடிகிறது. பயானிக் எறும்புகளும் இதேபோல் ஒன்றோடு ஒன்று தொடர்புகொண்டு ஒருங்கிணைந்து பணிசெய்யும் ஆற்றலைக் கொண்டுள்ளன. இப்படியான தொடர்புக்கான ரேடியோத் தொகுதி எறும்பின் வயிற்றுப் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கிறது. கடந்த 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 'ஹனோவரில்' நடந்த உலகத் தொழில்நுட்பக் கண்காட்சியில் பயானிக் எறும்புகள் அறிமுகமாகியிருக்கின்றன.


**நடை**

பயானிக் கையும் உண்டு. செயற்கைக் கரத்தில் மின்முனைகள் பதித்தது இது. இந்த மின்முனைகள் மூளையோடு பிணைக்கப்படும். கையை உயர்த்த வேண்டும் என்று தோன்றும்போது அதற்கான நரம்பு அதிர்வுகளை மின்முனைகள் பெற்றுக் கையை இயக்கும். பயானிக் கால்கள் நடக்க உதவுவதும் இது போன்ற ஒரு உயிர் மின்னணு அமைப்பின் தாற்பரியமே. காலில் பதித்த உணரிகள் எவ்விதமான தரையில் நிற்கிறோம் என்பதை உணர்ந்து மூளைக்கு அறிவிக்க நடை சீராகிறது. இயற்கைக் கை,கால்கள் போலவே பயானிக் கைகால்கள் இயல்பாகவும் நுட்பமாகவும் செயற்படத் தொழில்நுட்பம் இன்னும் விருத்தியடைய வேண்டியிருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

**நுகர்ச்சி**

பயானிக் மூக்குத் தொடர்பில் நோக்கின் சகலவிதமான வாசனைகளும் 'பல்லிழை இயற்பியல்' (பாலிமர் அல்லது பிஸிக்ஸ்) அடிப்படையில் கணினியில் பதிந்து பயானிக் மூக்கோடு இணைக்கப்படுகிறது. காற்றில் மாசு, வாயு கசிவதால் எழும் நச்சுத் தன்மை போன்றவற்றை உடனடியாக இந்த மூக்கானது கண்டுணர்ந்து கொண்டு எச்சரிக்கிறது. இதனால் நச்சு வாயுக் கசிவு போன்ற உயிர்க்கொல்லி விபத்துகள் நிகழாமல் தடுக்கலாம்.

உடல் பாகங்களை இயக்கக் கட்டளையிட மனித மூளை மற்றும் முதுகுத் தண்டின் ஒத்துழைப்பைப் பெரிதும் சார்ந்திருக்கிறது. சில விபத்துகளால் முதுகுத் தண்டு பாதிக்கப்பட வாய்ப்பு உண்டு. அப்போது மூளையினால் கட்டளையிட முடியாத சந்தர்ப்பங்கள் ஏற்படும் போது அசைவு நின்றுவிடும். பேச்சு வராது. முதுகு பாதிக்கப்பட்டாலும் மிக மோசமான விபத்துகள் தவிர ஏனையவற்றில் நாக்குச் சேதமின்றித் தப்பிவிடலாம். நேரடியாக மூளையோடு நரம்பு வழியாக இணைக்கப்பட்டிருக்கும் ஒரேயொரு மனித உறுப்பு நாக்கு. உடம்பே மரத்த நிலையிலும் இவற்றின் அசைவு இடம்பெறும். முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டு படுக்கையில் இருப்போருக்கும் நடமாட இந்தத் தொழில்நுட்பம் துணைபுரிகிறது. நோயாளி நாக்கில் ஒரு சிலிக்கன் சில்லினைப் பதித்து அவர் அமர ஒரு சக்கர நாற்காலி ஏற்பாடு செய்யப்படும். நாக்கை மடித்தாலோ அல்லது இடம் வலமாக அசைத் தாலோ மட்டும் போதும். அசைவை நாக்கில் பதித்த சில்லு என்ன என்று பொருள் உணர்ந்து கொள்ளும். அதை சக்கர நாற்காலியில் பொருத்திய உணரிக்கு கட்டளையாக அனுப்பும். கட்டளைப்படி நாற்காலி நகரும்.



**மூளை**

தற்காலிகமான நினைவுகளைப் போட்டு வைத்துக் கொள்ளும் மூளையின் பாகத்தை சில்லில் வடித்திருப்ப தாக விஞ்ஞானிகள் கூறு கின்றனர். அந்தவகையில் நோக்கின் "நூறு வருடங்கள் சென்றபின் எங்களுடைய திர்காலச் எசந்ததியினர் அவர்களுடைய பரம்பரை மூளையைத் தூர எறிந்துவிட்டு ஐன்ஸ்டைன் மூளையைப் பொருத்திக் கொள்ளும் காலங்கள் தோன்றும்" என்கின்றனர் உயிர் மின்னணுவியல் விஞ்ஞானிகள்.

## வாக்குறுதியை...

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் நியமன நாடாளுமன்ற உறுப்பினரான கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ன, புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான ஆலோசகளை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட நாடாளுமன்ற வழிகாட்டல் குழுவின் உறுப்பினராகவும் உள்ளவர் அவர். புதிய அரசமைப்பை உருவாக்கத்தின் பின்னணியில் கடுமையாக உழைத்து வரும் ஒருவர்.

புதிய அரசமைப்பு உருவாக்கப்படாவிட்டால், நடுநிலையாகச் செயற்பட்டுவரும் தமிழ்த் தலைவர்களுக்குப் பெரும் தாக்கம் ஏற்படும், அவர்கள் தமிழ் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் பொய்யாகிப்போய்விடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பு உருவாக்கம் முழுமைப் படுத்தக் கூடிய நிலமை உருவாகியுள்ளது. இந்த ஆட்சிக் காலத்தினுள் அரசமைப்பை முழுமைப் படுத்த வேண்டிய பொறுப்பு அரசிலுள்ள சகல தரப்பினிடமும் உள்ளது. 2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை அரச தலைவரும், தலைமை அமைச்சரும் நிறைவேற்றவேண்டும்.

இந்த நாட்டின் நீண்டகால அரசியல் பிரச்சினை, தமிழ் மக்களின் நெருக்கடிகள், கடந்த கால அசம்பாவிதங்களை தடுக்க புதிய அரசமைப்பின் ஊடாகத் தீர்வுகள் பெற்றுத்தருவதாக இந்த நாட்டு மக்களுக்கு அரசு வாக்குறுதி கொடுத்துள்ளது.

புதிய அரசமைப்பை உருவாக்கவேண்டும் என்றால் மைத்திரிக்கும், ரணிலுக்கும் முதன்மையான இரண்டு கட்சிகளுக்கும் அக்கறை இருக்கவேண்டும். வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும் என்ற உணர்ச்சி இருக்க வேண்டும். அது இல்லாது புதிய அரசமைப்பை உருவாக்கமுடியாது.

இன்று வாக்குறுதிகளை மறந்து மீண்டும் அரச தலைவர் தேர்தல் குறித்து பேசும் நிலமை உருவாகியுள்ளது. அரச தலைவர் தேர்தல் இனி நடைபெறாது என்றே நாம் ஆரம்பம் முதல் தெரிவித்து வந்தோம். 2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தல்தான் இந்த நாட்டில் நடைபெறும் இறுதி அரச தலைவர் தேர்தல் என்று கூறினோம். மேடைக்கு மேடை அரச தலைவரும், தலைமை அமைச்சரும் இதனையே தெரிவித்தனர்.

இன்று மீண்டும் அரச தலைவர் வேட்பாளர், 2020ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தல் என்று கூறிக்கொண்டு உள்ளனர். அரச தலைவர் தேர்தலுக்கு கூட்டணி அமைப்பது, இரகசிய பேச்சுக்கள் நடத்துவது, எதிரிகளாக இருந்தவர்கள் ஒன்றிணைந்து களமிறங்குவது என்ற பல்வேறு சூழ்ச்சிகளும் இடம்பெற்று வருகின்றன. இது மக்களுக்கு கொடுத்த வாக்குறுதி அல்ல. இதனை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். முதலில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி அரசமைப்பை உருவாக்கவேண்டும். வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத தலைவர்களாக மாறி விடவேண்டாம் என்பதை நாமும் இந்த அரசின் தலைமைகளுக்குத் தெரிவிக்கின்றோம்.

இன்று அரசமைப்பை உருவாக்கமுடியாது போனால் அதன் மூலமாக பெரிய தாக்கம் நடுநிலையாக செயற்பட்டுவரும் தமிழ் அரசியல் தலைவர்களுக்கே ஏற்படும். தமிழ் மக்களுக்கான தீர்வுகளை பெற்றுக்கொடுக்கும் முயற்சியில் இன்று நடுநிலையான தமிழ்த் தலைமைகள் செயற்பட்டு வருகின்ற நிலையில் அரசமைப்பு உருவாகாதபட்சத்தில் மீண்டும் தமிழ் மக்கள் மத்தியில் முரண்பாடுகளே உருவாகும். அவர்களின் உரிமைகளை மக்களாட்சியைப் பலப்படுத்தப்படுவதன் மூலமாக மட்டுமே நாட்டை வெற்றிகொள்ளமுடியும். அன்று எந்தக் காரணத்துக்காக தமிழ்த் தரப்பு போராட்டத்தைக் கையில் எடுத்ததோ இன்று அதே நோக்கத்தை வெற்றிகொள்ள அரசியல் ரீதியில் பயணித்து வருகின்றனர். ஜனநாயக ரீதியில் அவர்கள் சிந்தித்து சிங்கள மக்களின் மனங்களை வெற்றி கொண்டு அதன் மூலமாக இந்த நாட்டினைக் கட்டியெழுப்பவேண்டும் என சிந்திக்கின்றனர். அதற்கு நாம் மதிப்பளிக்கவேண்டும்.

இறுதி தேர்தலில் வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு இலட்சம் வாக்குகள் பறிபோயுள்ளன. இதில் 50 ஆயிரம் வாக்குகள் ஜனநாயகக் கட்சிகளுக்கு சென்றுள்ளன. அதனை மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் எஞ்சிய 50 ஆயிரம் வாக்குகள் வடக்கின் அடிப்படைவாத கட்சிகளுக்கே சென்றுள்ளன. தமிழ் மக்களின் உரிமைகளை பாதுகாக்கவேண்டும். அந்தப் பொறுப்பு இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களிடம் உள்ளது - என்றார். (உ-5,61)

## கண்ணிவெடி...

உள்ள பாலைப்பணி என்ற இடத்தில் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சியைச் சேர்ந்த ப.திலீபன் (வயது -24) என்பவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். வவுனியா, பறநாட்டாங்கல்லைச் சேர்ந்த நிதர்சன் (வயது-25) என்பவர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றார். வெடிபொருள்கள் அகற்றும் நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் இவர்கள் மிதிவெடிகள் அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தபோது வெடிவிபத்து நடந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த இருவரும் மாங்குளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். மற்றையவர் மேலதிக சிகிச்சைக்களுக்காக வவுனியா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஞ-110,ரி3,72,214,35)

## பாண்...

இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பாணின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு இன்று முதல் ஒரு இராத்தல் பாண் 65 ரூபாவாகும் என்றும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தத் தீர்மானம் பேக்கரி உரிமையாளர் சங்கக் கூட்டத்தில் எட்டப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கோதுமை மாவின் விலை ஒரு கிலோவுக்கு 5 ரூபாவால் அதிகரிக்கப்படுகின்றது என்று பிறீமா நிறுவனம் அறிவித்திருந்தது. அதையடுத்து கோதுமை மாவின் ஒரு கிலோவுக்கான சில்லறை விலை 95 ரூபாவில் இருந்து 100 ரூபாவாக அதிகரித்துள்ளது.

பாண் விலை இந்தளவுக்கு அதிகரிக்கப்பட்டதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று நுகர்வோர் பாதுகாப்பு தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்துள்ளார்.

"பாணொன்றை தயாரிப்பதற்கு ஒரு கிலோ மா பயன்படுத்தப்படுவதில்லை. அதேபோல் 5 ரூபாவால் விலை அதிகரிக்கப்பட்ட ஒருகொத்து ரொட்டி பார்சலுக்கும் ஒரு கிலோ கிரோம் மா பயன்படுத்தப்படுவதில்லை. எனவே இது குறித்து அரசும் உரிய அதிகாரிகளும் உடனடியாகக் கவனம் செலுத்தி இந்த விலை அதிகரிப்பை இடைநிறுத்தி சாதாரண விலை உயர்வை வழங்க வேண்டும் - என்றார். (ஞ-8)

## திகனவில்...

தார். பொலிஸ் மேலதிக படை தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற 152 ஆவது பொலிஸ் தின வைபவத்தில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சட்டம் ஒழுங்கின் பாதுகாப்பு ஊடாகவே ஓர் உறுதியான நாடு உருவாகும். சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் முதன்மையான நிறுவனம் பொலிஸே. அரசு ஒன்றுக்கு சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க முடியாமல் இருக்குமாயின் அந்த ஆட்சியே ஆட்டம் காணும்.

இங்கிலாந்து நாடே முதன் முதலாக சட்டம் ஒழுங்கை பாதுகாக்க, பொலிஸ் துறையை உருவாக்கியது. இன்று உலகின் அனைத்து நாடுகளிலும் பொலிஸ் துறை சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும் பணியில் உள்ளது.

சட்டத்தின் மீதான ஆட்சியை பாதுகாக்க பொலிசாரின் பணி இன்றியமையாதது. சட்டமும் ஒழுங்கும் பாதுகாக்கபப்டும் போதே நாட்டின் உறுதித் தன்மை உருதியாகும். உறுதி அதிகரிக்கும்போதே நாட்டுக்கு முதலீடுகள் வரும். எனவே அபிவிருத்தியின் தலைமைப் பங்கு சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் பொலிசாரின் கைகளிலேயே உள்ளது.

இந்த நிலையில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க பொலிசாரும் அதிரடிப் படையினரும் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பை அரசு வழங்கும். அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்துகொடுப்போம்.

உன்மையில் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது தற்போது பொலிசாரின் செயற்பாடுகளில் பெரும் முன்னேற்றம் காணப்படுகின்றது. பொலிஸாரின் சிறந்த நடவடிக்கைக்கு எடுத்துக்காட்டு. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் ஒரு வன்முறையேனும் பதிவாகாமையாகும்.

குறைப்பாடுகளும் உள்ளன. அண்மையில் திகன இன வன்முறைகளுக்கு காரணம் பொலிஸாரின் குறைப்பாடே. அதிலிருந்து நாம் பாடம் கற்று மீளவேண்டும். முகப் புத்தகம் ஊடாகச் சட்டம் ஒழுங்கைக் குலைக்க உள்ள வாய்ப்புக்களை நாம் அறிந்து அந்தச் சவாலை வெற்றிகொள்ளவேண்டும்.

பொலிஸாரின் சம்பள, பதவி உயர்வு பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு வழங்கப்படும். எனவே பொலிஸாரின் செயற்பாடுகள் சிறப்பாக உள்ள நிலையில், இதனை மேலும் வளர்க்க வேண்டும். அப்போதே சிறந்த நாட்டை கட்டியெழுப்ப முடியும் - என்றார். (உ-8-71)

## புதிய...

கும் புதிய கட்டத் தொகுதியில் நீதிவான் மன்றம், மாவட்ட நீதிமன்றம் மற்றும் பூஞ்சோலை என்பன அடங்கியிருக்கும். நீதிபதிகளுக்கான இரு விடுதிகள், சேவைக் கட்டம், வாகனத் தரிப்பிடம் போன்றவையும் அமைக்கப்படவுள்ளன. இவற்றின் கட்டுமானப் பணிகள் 2020ஆம் ஆண்டு நிறைவுறும் என்று தெரிவிக்கப்படவுள்ளது.

"நாட்டில் அனைவருக்கும் சமமான நீதி கிடைக்க வேண்டும் என்பதே எமது குறிக்கோளாகும் என்று நிகழ்வில் உரையாற்றிய நீதி அமைச்சர் தலதா அத்துக்கோரல தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது:

கூட்டரசின் கொள்கைத் தீர்மானத்தின்படி மாங்குளம், முல்லைத்தீவு, யாழ்ப்பாணத்தில் நீதிமன்றங்களுக்கான கட்டுமானங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அவற்றின் 50 சதவீதப் பணிகள் முடிந்துள்ளன.

கடந்த 3 ஆண்டுகளில் வடக்கில் சுமார் 22 ஆயிரம் லட்சம் ரூபா நிதிச் செலவில் நீதித்துறை அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ஞ-6,35,214)

## மீள்குடியமர்வுக்கான...

கருத்தமர்வு நேற்று யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

அவர் தெரிவித்தாவது

2006ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீள்குடியமர்ந்தவர்கள் முழுமையாக மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியமர்த்துவதே சவாலான விடயமாக உள்ளது.

தற்போதுதான் அவர்களின் நிலங்கள் விடுவிக்கப்படுகின்றன. தற்போது அவர்களின் 4 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. 2016-2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் மீள்குடியமர்வுக்கு ஓரளவு நிதி கிடைத்தது. 6 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா நிதி கிடைத்தது. ஆனால் தற்போது 250 மில்லியன் நிதியே கிடைத்துள்ளது. இது 5 சதவீதமாகும். 2015ஆம் ஆண்டு 33 ஆயிரம் வீடுகள் தேவை என்று கண்டறிந்தோம். ஆனால் 6 ஆயிரம் வீடுகளே கிடைத்தன. இன்னமும் 27 ஆயிரம் வீடுகள் தேவை. 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெயர்ந்தவர்களின் காணிகள் விடுவிக்கப்படும்போது காடுகளாகவே காட்சியளிக்கின்றன. வீடு, மலசல கூடம், வீதி, பாடசாலை என அனைத்துமே தேவையாகவுள்ளன.

இதுவரை ஆயிரத் 500 குடும்பங்கள் இந்தியாவில் இருந்துதிரும்பியுள்ளனர். அவர்களின் தேவைகளும் நிறைவு செய்யப்பட வேண்டும். இன்னமும் 15 ஆயிரம்பேர் இந்தியாவில் உள்ளனர். வந்தவர்களின் தேவைகள் நிறைவு செய்யப்பட்டாலே ஏனையோர் இங்கு வருவார்கள். வீட்டுத் தேவைகளுக்கு அப்பால் வீடுகளைத் திருத்தவும் நிதி தேவையாகவுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் 4 ஆயிரத்து 500 ஏக்கர் நிலம் இராணுவத்தினர் வசம் உள்ளது. கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மறுவாழ்வழிக்கப்பட்ட போராளிகளுக்காக நிதி ஒதுக்கப்பட்டது. எமது மாவட்டத்தில் 2 ஆயிரத்து 900 முன்னாள் போராளிகள் உள்ளனர். அவர்களில் 90 பேரே பணியாற்றுகின்றனர். அதனால் நிதி ஒதுக்கப்பட்டால் அதைப் பயன்படுத்த முடியும் - என்றார். (ஞ-105)

## சுனாமியினால்...

எனவே பொலிஸாரால் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ள ஆயுதங்களின் சான்றுப் பொருள் பட்டியலை வழங்க மன்று அனுமதியளிக்கவேண்டும். அதன் ஊடாக ஆயுதங்கள் தொடர்பான விவரத்தைக் கண்டறிய முடியும் என யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் இராணுவம் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி விண்ணப்பம் செய்தார்.

"புளொட்டின் முன்னாள் உறுப்பினரின் வீட்டில் மீட்கப்பட்ட ஆயுதங்கள் இராணுவத்தினருக்கு 1998ஆம் ஆண்டு வழங்கப்பட்டவை. அவை காணாமற்போயிருந்தன" என இராணுவத் தலைமையகம் அறிவித்திருந்த நிலையில் இராணுவம் சார்பில் நேற்று இந்த விண்ணப்பம் நீதிமன்றில் முன்வைக்கப்பட்டது.

புளொட்டின் முன்னாள் உறுப்பினரான மானிப்பாயைச் சேரந்த சிவகுமார் (வயது- 55) என்பவர் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை வீதியில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்தார். அந்த வீட்டில் முன்னர் புளொட்டின் அலுவலகம் இருந்தது.

அந்த வீட்டின் உரிமையாளர் வெளிநாட்டில் உள்ளார். அங்கிருந்து வெளியேற புளொட்டின் முன்னாள் உறுப்பினர் மறுப்புத் தெரிவித்து வந்தார். வீட்டு உரிமையாளர் தனது சட்டத்தரணி ஊடாக யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார். நீதிமன்றின் கட்டளையின் அடிப்படையில் கடந்த டிசெம்பர் 19ஆம் திகதி அந்த வீட்டிலிருந்தவரை வெளியேற்ற யாழ். மாவட்ட நீதிமன்றப் பதிவாளருடன் யாழ்ப்பாணம் பொலிஸார் சென்றனர்.

அங்குள்ள பொருள்களை வெளியேற்றும் பணியில் பொலிஸார் ஈடுபட்டனர். அப்போது அங்கிருந்த அலுமாரி ஒன்றுக்குள் துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்கள் காணப்பட்டன. பயன்படுத்தத்தக்க ஏகே47 துப்பாக்கி ஒன்று, அதற்குப் பயன்படுத்தப்படும் கோல்ஸர் 2, ரவைகள் 396, கைத்துப்பாக்கி ஒன்று, அதற்குப் பயன்படுத்தும் மகஸின்கள் 3, வோக்கிகள் 2 மற்றும் 2 வாள்கள் மீட்கப்பட்டன.

அதனையடுத்து புளொட்டின் முன்னாள் உறுப்பினர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் கட்டளையில் இன்றுவரை தொடர்ச்சியாக சுமார் 8 மாதங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் சந்தேகநபர் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

யாழ்ப்பாணம் நீதிமன்ற பதில் நீதிவான் கனரட்ணம் கேசவன் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு வந்தது.

இராணுவத்தின் சார்பில் சட்டத்தரணி ஒருவர் முன்னிலையாகி மன்றின் அனுமதியுடன் விண்ணப்பம் ஒன்றை முன்வைத்தார்.

"புளொட்டின் முன்னாள் உறுப்பினரின் வீட்டில் மீட்கப்பட்ட ஆயுதங்கள் தொடர்பான விவரம் அடங்கிய பட்டியல் 2004ஆம் ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரழிவால் நாகர்கோவில் முகாமிலிருந்து காணாமற்போய்விட்டது.

அதுதொடர்பில் இராணுவ மத்திய ஆயுத வழங்கல் பிரிவிடமும் விவரம் இல்லை. எனவே பொலிஸாரால் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ள ஆயுதங்களின் சான்றுப் பொருள் பட்டியலின் பிரதியை வழங்க மன்று அனுமதியளிக்கவேண்டும். அதன் ஊடாக ஆயுதங்கள் தொடர்பான விவரத்தை கண்டறிந்து நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்க முடியும்.

இராணுவ சட்டத்தரணியின் விண்ணப்பத்தை ஆராய்ந்த பதில் நீதிவான், "இந்த நீதிமன்றின் நீதிவானின் அனுமதி இந்த விண்ணப்பத்துக்கு அவசியம். அடுத்த தவணையின் போது, இந்த விண்ணப்பம் தொடர்பில் நீதிவான் கட்டளைவழங்குவார்" என்று உத்தரவிட்டுவழக்கை வரும் 17ஆம் திகதிவரை ஒத்திவைத்தார்.

அன்றுவரை சந்தேகநபரான புளொட் முன்னாள் உறுப்பினரின் விளக்கமறியலும் மன்றினால் நீடிக்கப்பட்டது.

**இராணுவத்தால் நீதிமன்றுக்கு முன்னர் அறிவிக்கப்பட்ட கடிதம்**

1998ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி இராணுவத்தின் காலாற்படைக்கு வழங்கப்பட்ட துப்பாக்கி மற்றும் ரவைகள் காணாமற்போயிருந்தன. அந்த ஆயுதங்களே தற்போது மீட்கப்பட்டுள்ளன. அவை சந்தேகநபர் வசம் சென்றமை தொடர்பில் இராணுவத்துக்கு தெரியாது" என இராணுவத் தலைமையகம் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு கடிதம் அனுப்பிவைத்திருந்தது.

இந்தக் கடிதத்தின் பிரதியுடன், பொலிஸார் கடந்த பெப்ரெவரி 26ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிமன்றில் இந்த வழக்கில் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர்.

அதனை வழக்கேட்டில் இணைக்க யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டிருந்தார். (உ-37)



# ஆவரங்கால் மத்தி. கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், செப். 4
யாழ்ப்பாண மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் 'ஏ' பிரிவில் ஆவரங்கால் மத்திய அணி சம்பியனானது. அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய அணியை எதிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி மோதியது. இதில் ஆவரங்கால் மத்திய அணி 25:22, 25:18, 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. ஆட்ட நாயகனாக ஆவரங்கால் மத்திய அணியை பிரதிநிதித்துவம் செய்த சிவசொரூபன் தெரிவு செய்யப்பட்டார். (ம-422)

# லூட்ஸ் முன்னேற்றம்




யாழ்ப்பாணம், செப். 4
கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை சென். லூட்ஸ் அணி வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது.
கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இளவாலை சென். லூட்ஸ் அணியை எதிர்த்து அண்ணா சிலையடி இளைஞர் அணி மோதியது.
ஆட்டத்தின் 20 ஆவது நிமிடத்தில் சென். லூட்ஸ் அணியின் வீரர் அன்ரன் பாலதாஸ் முதலாவது கோலைப் பதிவு செய்ய முதல் பாதியில் அந்த அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.
இரண்டாவது பாதியாட்டத்தில் இரு அணிகளாலும் கோல் எதனையும் பதிவுசெய்ய முடியவில்லை. இதனால் ஆட்ட நேர முடிவில் இளவாலை சென். லூட்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. ஆட்ட நாயகனாக சென். லூட்ஸ் அணியைப் பிரதி நிதித்துவம் செய்த அன்ரன் பாலதாஸ் தெரிவு செய்யபட்டார். (ம-422)

## இன்றைய மோதல்கள்

**விநாயகர் வி.க. தாச்சித் தொடர்**
கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் 71 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விநாயகர் விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெறும் 'ஏ' பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கச்சாய் கலைமகள் விளையாட்டுக் கழக 'பி' அணி மோதவுள்ளது.

**கொலின்ஸ் வி.க. கால்பந்தாட்டம்**
கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணம் மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்திதில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியைஎதிர்த்து கரணவாய் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மெலிஞ்சி முனை இருதயராஜா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வதிரி யங் ஸ்ரைலன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## நவஜீவன்ஸ் வி.கழகம் முன்னேற்றம் கண்டது




யாழ்ப்பாணம், செப். 4
கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது.
நவஜீவன்ஸ் விளையாட்டுக். கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து அச்செழு வளர்மதி அணி மோதியது. ஆட்டத்தின் 14ஆவது நிமிடத்தில் அச்செழு வளர்மதி அணியின் வீரர் முறையற்ற ஆட்டத்தை வெளிப்படுத்த உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணிக்குத் தண்டனை உதை கிடைத்தது. அதை சஞ்சீவ் கோலாக மாற்ற முதல் பாதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.
இரண்டாவது பாதியாட்டத்தில் இரு அணிகளும் பலமுறை முயற்சித்த போதிலும் கோல் எதனையும் பதிவு செய்ய முடியவில்லை. இதனால் ஆட்ட நேர முடிவில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது. ஆட்ட நாயகனாக உடுப்பிட்டிநவஜீவன்ஸ் அணியைப் பிரதிநிதித்துவம் செய்த சஞ்சீவ் தெரிவு செய்யப்பட்டார். (ம-422)

## விநாயகர் சம்பியன்!

யாழ்ப்பாணம், செப். 4
யாழ்ப்பாணம் தாச்சி சங்கம் நடத்தும் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான தாச்சித் தொடரில் சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.
பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகஅணியை எதிர்த்து மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழக அணி மோதியது. 10:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்று சம்பியனானது. (ம-23)



## அண்ணா அணி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், செப். 4
யாழ்ப்பாணம் மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் பி பிரிவில் கெருடாவில் அண்ணா அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கெருடாவில் அண்ணா அணியை எதிர்த்து நீர்வேலி காமாட்சி அம்பாள் அணி மோதியது.
இதில் கெருடாவில் அண்ணா அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. ஆட்ட நாயகனாக கெருடாவில் அண்ணா அணியைப் பிரதிநிதித்துவம் செய்த டிலக்சன் தெரிவு செய்யப்பட்டார். (ம-23-422)

## லூட்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், செப். 4
கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணம் மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சென். லூட்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென். லூட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அண்ணா சிலையடி விளையாட்டுக் கழக அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் சென். லூட்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (ம-23)


## நவசக்தி அணி இலகு வெற்றி!

யாழ்ப்பாணம், செப். 4
கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் 71ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விநாயகர் விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நவபுரம் நவசக்தி விளை யாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.
விநாயகர் விளையாட்டுக் கழக ்தானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நவபுரம் நவசக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி கிழக்கு காளி அம்மன்: விளையாட்டுக் கழக அணி மோதியது. 19:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் நவபுரம் நவசக்தி விளை யாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

## ஹமில்டன் வென்றார்

உலக கார்பந்தயத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இத்தாலிய சுற்றில் வெற்றிபெற்றார் லூயிஸ் ஹமில்டன்.
ஒட்டுமொத்தமாக 256 புள்ளிகளுடன் ஹமில்டன் முதலிடத்தில் உள்ளார். 226 புள்ளிகளுடன் வெட்டல் இரண்டாவது இடத்தில் உள்ளார். ரெய்கோன் 164 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார். (ம)






# காலிறுதியில் ரபேல் நடால்!

அமெரிக்கப் பகிரங்கத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்குத் தகுதி பெற்றார் ஸ்பெய்னைச் சேர்ந்த ரபேல் நடால்.
பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள வீரரான ரபேல் நடாலை எதிர்த்து தரநிலை இல்லாத வீரரான பசில்லாஸ்வில்லி மோதினார்.
ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 6:3, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் நடால். மூன்றாவது செற்றை மிகக் கடுமையாகப் பேராடி 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் பசில்லாஸ்வில்லி. இதனால் நடாலின் நேர்செற் வெற்றி வாய்ப்பு இல்லாமல் போனது. நான்காவது செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றார் ரபேல் நடால்.
காலிறுதி ஆட்டத்தில் நடாலை எதிர்த்து தியம் மோதுகின்றார். இந்த ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. (ம)

# போராடி வென்றார் இஸ்னர்

அமெரிக்கப் பகிரங்கத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்குத் தகுதி பெற்றார் அமெரிக்க வீரர் இஸ்னர்.
நியூயோர்க் நகரில் இந்த ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. காலிறுதிக்குத் தகுதிபெறும் ஆட்டத்தில் இஸ்னரை எதிர்த்து கனடாவைச் சேர்ந்த ரயோனிக் நேற்று மோதினார்.
ஐந்து செற்களைக் கொண்ட ஆட்டத்தில் 3:6, 6:3, 6:4, 3:6, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றார் இஸ்னர்.
காலிறுதி ஆட்டத்தில் 11ஆம் நிலை வீரரான இஸ்னரை எதிர்த்து ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த மூன்றாம் நிலை வீரர் டெல் பொட்ரோ மோதவுள்ளார். (ம)



# காலிறுதிக்கு முன்னைய சுற்றில் செரபோவா

அமெரிக்கப் பகிரங்கத் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்கு முன்னைய சுற்றுக்குத் தகுதி பெற்றார் ரஷ்ய வீராங்கனை மரிய செரபோவா.
பன்னாட்டு அந்தஸ்துபெற்ற பகிரங்கத் தொடர்களில் ஒன்றான அமெரிக்கப் பகிரங்கத் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. நியூயோர்க் நகரில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் 22ஆம் இடத்தில் உள்ளவரான ரஷ்ய வீராங்கனை மரிய செரபோவாவை எதிர்த்து பன்னாட்டுத் தரப்படுத்தலில் 10ஆம் இடத்தில் உள்ளவரான ஜெலீனா ஒஸ்டபென்கோவ் மோதினார்.
மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 6:2, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றார் செரபோவா.
இன்று நடைபெறும் காலிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில் செரபோவாவும் ஸ்பெய்னின் நவரோவாவும் மோதுகின்றனர்.
தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்தைப் பயன்படுத்தி தடைபெற்ற பின்னர் எந்தவொரு முக்கிய தொடரையும் செரபோவா கைப்பற்றவில்லை. இதனால் அமெரிக்கத் தொடரில் அவர்மீது பெரிய எதிர்பார்ப்பு நிலவுகிறது. (ம)



## நவஜீவன்ஸ் அணி போராடி சாதித்தது

யாழ்ப்பாணம், செப். 4
கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத்தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (ம-23)



# வெற்றிபெறலாம் என்று நம்பினேன்

### கோக்லி வேதனை

"இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றிக்குரிய அறிகுறிகள் எமது பக்கம் உள்ளன என்று கருதினேன். வெற்றிபெறலாம் என்று நம்பினேன். ஆனால் இங்கிலாந்து வெளிப்படுத்திய ஓயாத போராட்டத்தில் வெற்றி எங்களை விட்டுச் சென்றுவிட்டது" என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் கோக்லி.
இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது டெஸ்ட் ஆட்டம் நேற்றுமுன்தினம் முடிவடைந்த நிலையில் அதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார் அவர்.
"எங்களுக்கு 245 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நிர்ணயித்ததன் மூலம் இங்கிலாந்து உண்மையில் சிறப்பாக விளையாடியது என்றே நான் கருதுகிறேன். ஆடுகளத்தின் நிலை, பந்துகள் திரும்பிய விதம் எங்களுக்குப் பெரிய சவாலாக இருந்தது. கடந்த இரவு வெற்றி வாய்ப்பு இருப்பதாகவே கருதினோம். ஆனால் நாங்கள் விரும்பிய தொடக்கம் கிடைக்கவில்லை. இங்கிலாந்து அணி ஓய்வு இல்லாமல் எங்களுக்குத் தொடர்ச்சியாக நருக்கடி கொடுத்தது. அந்த அணியினருக்குப் பாராட்டுகள். நானும் ரகானேவும் மிகவும் கவனம் செலுத்தினோம். நானும் ரகானேவும் களத்தில் இருந்த போது விரட்டல் வெற்றிகரமாக முடியும் என்று நம்பினோம். ஆனால் அவர்கள் ஏற்கெனவே 3 இலக்குகளை வீழ்த்தி விட்டதால் இன்னும் 2 இலக்குகள் விழுந்தால் ஆட்டம் கை நழுவி விடும் என்ற நெருக்கடி எனக்கும் ரகானேவுக்கும் இருந்தது. கடைசியில் அதுதான் நடந்தது" என்று கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)

# அணி தோற்றாலும் முதலிடத்தில் கோக்லி



பன்னாட்டு கிரிக்கெட் சபை டெஸ்ட் ஆட்டங்களுக்கான தனது தரவரிசைப் பட்டியலைப் புதுப்பித்துள்ளது. இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி தோல்வியடைந்தாலும் தனிநபர் துடுப்பாட்டத் தரப்படுத்தலில் கோக்லி முதலிடத்தில் தொடர்கிறார்.

இங்கிலாந்து - இந்திய அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரின் நான்காவது ஆட்டம் முடிவடைந்ததுடன் இந்தத் தரப்படுத்தல் புதுப்பிக்கப்பட்டது. கோக்லி மிகச் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தினார். முதலாவது இன்னிங்ஸில் 46 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்ஸில் 58 ஓட்டங்களையும் அவர் பெற்றார்.

இதனால் துடுப்பாட்டத் தரப்படுத்தலில் கோக்லியின் புள்ளிகளின் மட்டில் பெரிய எதிர்பார்ப்பு இருந்தது. எனினும் எந்த மாற்றமும் ஏற்பட வில்லை. இதன்படி 937 புள்ளிகளுடன் அவர் முதலிடத்தில் தொடர்கிறார். சிமித் 929 புள்ளி களுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டம் முடிந்த பின்னரும் கோக்லி முதலிடம் பிடித்தார். எனினும் இரண்டாவது ஆட்டத்தில் வெளிப்படுத்திய தடுமாற்றத்தை அடுத்து கோக்லி சரிவுகண்டார். மூன்றாவது ஆட்டத்தில் வெளிப்படுத்திய அபாரத் திறமையை அடுத்து மீண்டும் கோக்லிக்கு முதலிடம் கிட்டியது. நான்காவது ஆட்டத்திலும் சொல்லிக்கொள்ளும்படியான பெறுபேற்றை வெளிப்படுத்தியதை அடுத்து அவர் முதலிடத்தில் தொடர்கிறார்.

நியூசிலாந்து அணியின் தலைவர் வில்லியம்சன் 847 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், ஆஸ்திரேலிய வீரர் வோர்ணர் 820 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும் இங்கிலாந்தின் அணித் தலைவர் ரூட் 809 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும், உள்ளனர்.

ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் புஜாரா, கருணாரத்ன, சந்திமல், எல்கர், மார்க்ரம் ஆகியோர் உள்ளனர். இதன்படி தரப்படுத்தலில் முதல் பத்து இடங்களுக்குள் உள்ள இலங்கை வீரர்களாக சந்திமல், கருணாரத்ன ஆகியோரே உள்ளனர். இவர்களை விட குசல் மெண்டிஸ் 17 ஆவது இடத்திலும், மத்தியூஸ் 23ஆவது இடத்திலும், டிக்வெல்ல 41ஆவது இடத்திலும், தனஞ்சய டி சில்வா 45ஆவது இடத்திலும், றோசன் சில்வா 70ஆவது இடத்திலும், தரங்க 73ஆவது இடத்திலும், குணதிலக 74ஆவது இடத்திலும், கௌசால் சில்வா 80ஆவது இடத்திலும், குசல் பெரேரா 89ஆவது இடத்திலும், டில்ருவான் பெரேரா 92ஆவது இடத்திலும், அசல குணரத்ன 99ஆவது இடத்திலும் உள்ளனர். (ம)

## ஸ்பெய்னின் லா லிகா தொடரில்

# லெகான்ஸ் அணியை வென்றது ரியல்மட்ரிட்




ஸ்பெய்னின் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையில் நடைபெற்றுவரும் லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வென்றது ரியல்மட்ரிட்.

லெகான்ஸை எதிர்த்து ரியல் மட்ரிட் அணி மோதியது. ஆட்டத்தின் 17ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட்டின் முதலாவது கோலைப் பதிவு செய்தார் பேல். 24ஆவது நிமிடத்தில் லெகான்ஸின் கோலைப் பதிவுசெய்தார் கரி ல்லோ. முதல் பாதியின் முடிவில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றி ருந்தன.

இரண்டாம் பாதியில் மிகச் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தியது ரியல்மட்ரிட். 48ஆவது மற்றும் 61ஆவது நிமிடங்களில் பென்சிமா மட்ரிட்டின் சார்பாகக் கோல்களைப் பதிவுசெய்தார். ராமோஸ் 66ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட்டின் நான்காவது கோலைப் பதிவுசெய்ய முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ரியல் மட்ரிட். (ம)

# விடைபெறுகிறார் குக்



பன்னாட்டு கிரிக்கெட் அரங்கில் இருந்து ஓய்வுபெறும் முடிவை நேற்று அறிவித்தார் இங்கிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான அலிஸ்டர் குக்.

இங்கிலாந்துக்காக அறமுகமான ஆட்டத்தில் இருந்து இன்றளவும் ஒரு டெஸ்ட் ஆட்டத்தையேனும் குக் தவறவிட்டதில்லை. தொடர்ச்சியாக 158 ஆட்டங்களில் விளையாடியுள்ளார். இங்கிலாந்து அணியின் உபதலைவர், தலைவர் உள்ளிட்ட பதவிகளை வகித்த 33 வயதான குக் இந்தியாவுக்கு எதிராக எதிர்வரும் 7ஆம் திகதி ஆரம்பமாகும் ஐந்தாவது ஆட்டத்துடன் டெஸ்ட் அரங்கில் இருந்து விடைபெறுகிறார். (ம)

## ஆள்கள் தேவை

பிரபல கணினி நிறுவனத்துக்கு
**O/L** வரை படித்த பெண்கள் தேவை.
74, சபாபதி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு சுயவிவரக் கோவையினை அனுப்பவும்.

## விருந்தினர் விடுதிக்கு ஆள்கள் தேவை

யாழ். நகரில் உள்ள விருந்தினர் விடுதிக்கு சுத்திகரிப்பாளர்கள் தேவை.
(துங்கிநின்று வேலைசெய்யக்கூடியவர்கள் விரும்பத்தக்கது.)
ஆர்வமுள்ளவர்கள் இன்றும் நாளையும் நேரில் சமுகம் தரவும்.
**இல. 357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை A/L எழுதியோர், பல்கலை புதுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள் மற்றும் தொழில்புரிவோருக்கான
3 மாத சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 15.09.2018 சனி

| | | | |
|---|---|---|---|
| 1. காலை | 08.00-10.00 | 3. பி.பகல் | 01.00-03.00 |
| 2. காலை | 10.00-12.00 | 4. மாலை | 03.00-05.00 |

வாரநாள் (திங்கள், புதன்) பயிற்சி ஆரம்பம் 10.09.2018
பிரிவு1: 08-10 பிரிவு2: 10-12 பிரிவு3: 03-05
கதைத்தலுக்கு தேவையான முழுமையான ஆங்கிலம் கற்பிக்கப்படும்
10.09.2018 வரை மட்டுமே பதிவுகளைமேற்கொள்ளமுடியும்.
SAAMSON 403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர். 021 320 3313 077 621 4567

## ஆசிரியர் வே.அன்பழகன் அவர்களின்

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2019
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

| யாழ்ப்பாணத்தில்... | சாவகச்சேரியில்... |
|---|---|
| அன்பொளி கல்வியகம் | அன்பொளி கல்வி நிலையம் |
| யாழ்.இந்துக்கல்லூரி வீதி, | தபாற்கந்தோர் வீதி, |
| யாழ்ப்பாணம். | சாவகச்சேரி. |

அனுமதிகளை 04.09.2018 செவ்வாய்க்கிழமையிலிருந்து 10.09.2018 திங்கட்கிழமை வரை பிற்பகல் 3.00 மணி தொடக்கம் பிற்பகல் 6.00 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்
குறிப்பு :- பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விவரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.



" சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம் "
- இயக்குநர்கள் -
(IN/ 7676)(11.17)

## மரண அறிவித்தல்



**இளையவி சின்னராசா**
*(முன்னாள் மாநகர சபை மற்றும் மின்சார சபை ஊழியர்)*

ஆசீர்வாதப்பர் வீதியைப் பிறப்பிடமாகவும் நல்லூர் அரசடி வீதி, 5ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட இளையவி சின்னராசா நேற்று (03.09.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.09.2018) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
(CS 19551/15/17) தகவல்: குடும்பத்தினர்.

## விற்பனைக்கு

பழைய வீட்டின் இடிபாட்டுக் கற்கள் விற்பனைக்குண்டு.
077 901 6218

## வேலைவாய்ப்பு

**செல்வா திருமண மண்டபம்**
- மேற்பார்வையாளர் - ஆண் / பெண்
- உதவியாளர்கள் - ஆண் / பெண்
- கணக்காளர் - **Audit** ஆண்/ பெண்
- சமையல் பொறுப்பாளர் - ஆண் / பெண்

021 221 2464, 077 460 2356

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.09.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.